கல்கி

...வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



அமைச்சராவாரா டி.ஆர்.பாலு?

KALKI • 31.01.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



நடிகர் கட்டிய கோயில்

இசையுலகின் சுஜாதா!


விமர்சன ஊழல்!

...னிய இந்தியன்!

புற்றுநோய்க்கு ஒரே இடத்தில் தீர்வு!

ONE STOP SOLUTION FOR CANCER

- PET CT SCAN
- All Endoscopies
- Linear Accelerator & Brachy Therapy
- Radiation
- IGRT
- Surgical Oncology
- Medical Oncology



- பெட் சீடி ஸ்கேன்
- அனைத்து என்டோ ஸ்கோபி
- கதிர்வீச்சு
- லீனியர் ஆக்ஸிலரேடர் & உட்கதிர்வீச்சு
- IGRT
- புற்றுநோய் அறுவை சிகிச்சை
- புற்றுநோய் மருத்துவம்

இலவச ஆலோசனைக்கு:

(044) 2246 9200
(044) 66 300 300

PET CT CENTRE AT CANCER INSTITUTE (WIA)
CANAL BANK ROAD, GANDHI NAGAR, ADYAR, CH-20

24 HRS PHARMACY & AMBULANCE SERVICES AVAILABLE

Dr. KAMAKSHI MEMORIAL HOSPITAL

1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Ph: 2246 9200, 66300300 Fax : 22463282 66300400
E-mail: info@drkamakshimemorialhospital.org.
Website: drkamakshimemorialhospital.org.

கல்கி

வழங்கும்

திண்டுக்கல் மாவட்ட ஸ்பெஷல்ஸ்...

பிப்ரவரி 07, பிப்ரவரி 14 இதழ்கள்...

எக்ஸ்ரே பார்வையில் Exclusive செய்திகள்

சுத்தமாகுமா பழநி?



அபிராமிக்கு முதல் மரியாதை!

திண்டுக்கல் மலைக்கோட்டை

பாடாய்ப்படுத்தும் பாதாளச் சாக்கடை!

சக்தியின் விஸ்வரூபம்!

கடவுளின் கெஸ்ட் ஹவுஸ்!

காதைக் கொடுங்க!

பாலுவைப் பார்க்கும் அதிர்ஷ்ட தேவதை!

தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் என்ற பொறுப்பு மிக மிக முக்கியமானது. உளவுத் துறை தலைமைப் பொறுப்பிலிருந்த எம்.கே.நாராயணன், 2004ல் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பிறகு, அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டார். உளவுத் துறை (I.B.) வெளிநாட்டு உளவுத் துறை (RAW) மற்றும் வேறு பல புலனாய்வுத் துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்து உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஏற்படும் சவால்களை முறியடிப்பதில் முக்கியப் பங்குவகிப்பவர் பாதுகாப்பு ஆலோசகர். தமது பதவியின் முக்கியத்துவம் காரணமாக நேரடியாகப் பிரதமரோடு எப்போதும் தொடர்பிலிருப்பதால் உள்துறை அமைச்சரோடு தொடர்பு மிகவும் குறைவாகத்தான் இருக்கும். சிவ்ராஜ் பாட்டீல் இருந்தபோது நாராயணனுக்கும் அவருக்கும் உறவு நிலை சரியில்லை. சிதம்பரம் வந்தபோது நிலைமை கொஞ்சம் மாறினாலும், உறவு சுமுகமாக இருந்தது என்று சொல்ல முடியாது. இப்போது நாராயணன் மேற்குவங்க கவர்னராக நியமிக்கப்பட்டு விட்டார். வட கிழக்குப் பகுதியில் தீவிரவாதத்தை ஒழிக்க முயல வேண்டும் என்பது இவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள மறைமுகப் பணி.



பிரதமரின் அலுவலகத்தில் கேரளத்தவரின் ஆதிக்கம் அதிகம். எனவே, கேரளாவைச் சேர்ந்த நாராயணனுக்கு அடுத்து, ஓய்வு பெற்ற வெளியுறவுத் துறை செயலாளர் சிவசங்கர் மேனனை ஆலோசகர் பொறுப்புக்குக் கொண்டு வரும் முயற்சிகள் நடக்கின்றன. ஆனால், சிதம்பரம், ஓய்வுபெற்ற சி.பி.ஐ. இயக்குநரான நம்ம ஊர் கார்த்திகேயனை அந்தப் பொறுப்புக்குக் கொண்டுவர முயற்சி செய்வதாகத் தெரிகிறது. சோனியாவை இது விஷயத்தில் அதிக 'அழுத்தம்' கொடுக்கப் போவது எந்த லாபியோ?

தனிப்பட்ட ஏஜென்ஸியிடம் மத்திய காபினட் மற்றும் இணையமைச்சர்களின் செயல்பாடுகள் பற்றிய கணிப்பைக் கேட்டுப் பெற்றது பிரதமர் அலுவலகம். கிட்டத்தட்ட 75 சதம் அமைச்சர்கள் எந்த ஒரு முனைப்பும் காட்டாமல், பொழுதைப் போக்குகிறார்கள் என்று கணிப்பு சொன்னதாம்! நம் தமிழ்நாட்டில் அழகிரி, காந்திசெல்வன், நெப்போலியன் போன்றோர் இன்னமும் ஆர்வம் காட்ட வேண்டும் என்கிறதாம் அக்கணிப்பு. ஜெகத்ரட்சக

சயல்பட ஆர்வம் காட்டினாலும், அவருக்கு ழலே உள்ள காபினட் அமைச்சர் அம்பிகா சானி, சகல அதிகாரங்களையும் கையில் வைத் ருப்பதால் ஜெகத்தால் அழுத்தமாகச் செயல்பட டியவில்லையாம். இந்த நிலையில் டி.ஆர்.பாலு ண்டும் அமைச்சராகிவிட முழு மூச்சுடன் களத் ல் இறங்கியிருக்கிறார். அழகிரி தில்லியை ிட்டு விடும் பட்சத்தில், பாலுவுக்கு அதிர்ஷ்டம் ண்டும் அடிக்கக்கூடும். அதே சமயம் தயாநிதி றனும் தொலைத்தொடர்பு இலாகாவை மீண் ம் பிடிக்க முடியுமா என்று முட்டி மோது றாராம். பல பிரச்னைகள் குறித்து தி.மு.க. தலை மயின் எண்ண ஓட்டங்களைச் சரியான முறை ில் சோனியா மற்றும் பிரதமரிடம் எடுத்து வைப்பதில் ஓர் இடைவெளி இருப்பதாகச் சொல் றார்கள்.

நான்கு முனை போட்டியைச் சந்திக்கப் பாகும் பெண்ணாகரம் தொகுதி களைகட்டி விட் து. பா.ம.க. முழுமூச்சுடன் களத்தில் இருந்தா ும் அதிகாரமும் பணபலமும் இல்லாததால் ுதன் தொண்டர்களிடையே உற்சாகம் குறை வாகவே காணப்படுகிறது. இதற்கிடையில் விஜய காந்தும், சமீபத்திய தோல்வியின் காரண மாகத் துவண்டு விடாமல் வேட் பாளரை நிறுத்தப் போகிறார். ஜெய லலிதாவிடம் கம் யூனிஸ்ட் தோழர் கள், ''தற்காலிகமாக பா.ம.க.வை ஆதரித்து தி.மு.க.வுக்கு டென்ஷ னைக் கூட்டலாமே!'' என்று கேட்டுப் பார்த்திருக்கிறார்கள். ஜெ. யாசிக்கிறார் என்று ஒரு தகவல் சொல்கிறது. ிராமத்துக்குக் கிராமம் பா.ம.க. பொறுப்பாளர்கள் லைமறைவாவதற்குக் கூட தி.மு.க.வின் தூண்டில் ான் காரணம் என புலம்புகிறார்கள் பா.ம.க. ிரமுகர்கள்.



- சஞ்சயன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத் தன்மைக்கு
கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

அஞ்சலி

'' 'இதனை இதனால் இவன் முடிக்கும்' என்ற குறள் போல எந்த ஒரு பணியையும் சரியான நபரிடம் ஒப்படைத்து, மனித வளத்தை மிகச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதில் ஜோதி பாசு மிகவும் திறமையானவர்'' என்கிறார் ஜோதி பாசு முதலமைச்சராக இருந்த சமயத்தில் மே.வங்காளத்தில் பதினாறு வருடங்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகப் பணியாற்றிய பாலசந்திரன். மறைந்த ஜோதிபாசு குறித்த, இந்தச் சிவகங்கைக்காரரின் நினைவுப் பகிர்வுகள் :

● மதநல்லிணக்கத்துக்கும், மதச் சார்பின்மைக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளித்தார் ஜோதி பாசு. ஒருமுறை துர்கா பூஜா சமயத்தில் மாநிலத்தில் சர்க்கரை பற்றாக்குறை நிலவியது. மத்திய அரசிடமிருந்து சர்க்கரை சப்ளை தாமதமானபோது, நிலைமையைச் சமாளிக்க மாற்று நடவடிக்கைக்கு உத்தரவிட்டார். அப்போது நான் அவரிடம் சிரித்துக் கொண்டே, 'நீங்களோ ஒரு கம்யூனிஸ்ட்; துர்கா பூஜை சமயத்தில் சர்க்கரை பற்றாக்குறை பற்றி இத்தனை அக்கறை காட்டுகிறீர்களே?' என்று கேட்டேன். அவரது பதில்: 'நான் ஒரு கம்யூனிஸ்ட் மட்டுமில்லை; இந்த மாநிலத்தின் முதலமைச்சரும்கூட!'



● பாலசந்திரன்

● பர்துவான் என்பது நம் கோயம்புத்தூர் போல மே.வங்காளத்தின் முக்கியமான மாவட்டம். ஒரு முறை சட்டசபையில், ஒரு எம்.எல்.ஏ., பேசுகையில், ''பர்துவான் மாவட்டத்தின் கலெக்டர், சுப்ரமணியன் என்ற தமிழர். கூடுதல் கலெக்டர் பதவிக்கு கௌதம் என்ற உ.பி.காரரைப் போட்டிருக்கிறீர்கள். மாவட்ட நில சீர்திருத்த முதன்மை அதிகாரியாக ராஜேந்திர குமார் என்ற மலையாளி. மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ஷஃபி, உ.பி.யை சேர்ந்த முஸ்லிம். கூடுதல் கண்காணிப்பாளர் ராஜேந்திர சிங் ராஜஸ்தான்காரர். மாவட்டத்தின் முக்கிய அதிகாரிகளில் ஒருவர் கூட வங்காளி இல்லையே? வங்காளத்தை மற்ற மாநிலத்துக்காரர்களுக்கு தாரை வார்த்துவிட்டீர்களா?'' என்றார் காரசாரமாக. மிக அமைதியாக, ''அவர்களும், நம்மைப் போலவே இந்தியர்கள் தானே? இது வங்காளம். இங்கே இது போன்ற பேச்சு எடுபடாது'' என்று பதில் சொன்னார் அந்த இனிய இந்தியன் ஜோதி பாசு.


● மே. வங்காளத்தில் ஒரு கோடியே 10 லட்சம் மக்கள்தொகை கொண்ட மிகப் பெரிய மாவட்டம் 24 பர்கானா. அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற பேச்சு நூறு வருடங்களாக இருந்து வந்தது.

மீட்டிங்கில் சி.பி.எம் கட்சியைச் சேர்ந்த ஒரு ஜில்லா பரிஷத் பிரமுகர், 'வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாவட்டம் பிரிக்கப்படக் கூடாது' என்று ஆட்சேபித்து கடுமையாகப் பேசினார். அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த முதலமைச்சர் ஜோதிபாசு, 'வங்காளம் கூட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுதான். அதைக் கூட (1905ல்) பிரித்திருக்கக் கூடாது. ஆனால் அந்தப் பிரிவினையை எதிர்த்தோம், பிறகு ஏற்றுக் கொண்டுவிட்டோமில்லையா? ஒரு பெரிய மாவட்டத்தை மக்களின் நன்மை கருதி, நிர்வாக வசதிக்காகப் பிரிப்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் எப்படி? அரசியல்வாதிகளான நாம், மக்களுக்கு எது நன்மையோ அதைச் செ

ாமல் முட்டுக்கட்டை
போட்டால் எப்படி?'
என்று பேசி, மாவட்டத்
தைப் பிரிக்க அனைவரை
யும் சம்மதிக்க வைத்தார்.

● ஹௌரா மாவட்டத்
தின் கலெக்டராக நான்
இருந்தபோது, சட்டத்துக்
குப் புறம்பான ஆக்கிர
மிப்பு செய்த கடைக்காரர்
களால் கிராண்ட் ட்ரங்க்
ரோடு என்ற பிரதான
சாலையில் போக்குவரத்து
பெரும் பாதிப்புக்குள்ளா
னது. ஆக்கிரமிப்புகளை
அகற்ற முடிவு செய்தேன்.
அது குறித்துப் பேச
முதலமைச்சரைச் சந்தித்
தேன். விஷயத்தைச் சொன்
னதும் அவர் என்னிடம்
கேட்ட முதல் கேள்வி,
'பிழைக்க வேறு வழி இல்
லாத ஏழைங்கதானே
பிளாட்ஃபாரத்துல கடை
போடறாங்க? அவங்களை
விரட்ட என்கிட்டே வந்து
பர்மிஷன் கேக்குறீங்களா?'

இனிய இந்தியன் ஜோதிபாசு!



தான், அங்கேயுள்ள
பிளாட்ஃபாரக் கடைகளால்
போக்குவரத்து எந்த அள
வுக்குப் பாதிக்கப்படுகிறது
எந்த அளவுக்கு வாகன எரி

பொருள் வீணாகிறது என்று நடத்திய ஆய்வு பற்றி விவரமாக எடுத்துச் சொன்னேன். பொறுமையாகக் கேட்டுக் கொண்டபின், 'இப்போ அவங்களை அப்புறப்படுத்தினாலும், மறுபடி அங்கே வந்து கடை போட மாட்டாங்க என்பதற்கு என்ன உத்தரவாதம்?' என்று கேட்டார். 'ஆக்கிரமிப்புகளை அகற்றிய பிறகு, அந்தப் பகுதியை வாகனங்களும், பாதசாரிகளும் மட்டுமே பயன்படுத்தும் வகையில் இரும்புக் கிராதி அமைக்கத் திட்டம்' என்றேன்.



'எப்படி செய்யப்போறீங்க?' என்ற அவரது கேள்விக்கு, 'போலீஸ் படை தயாராக இருக்கும்; ஆக்கிரமிப்புகளை அகற்ற முதலில் மைக் மூலம் அறிவிப்பு; எதிர்ப்பு எழுந்தால் கண்ணீர்ப் புகை; கடைசியில் வேறு வழியில்லாவிட்டால் துப்பாக்கிச் சூடு கூட நடத்த நேரி லாம்' என்றேன். மறு வி டியே, 'மிஸ்டர் பால திரன்! என்ன ஆனாலும் சரி துப்பாக்கிச் சூடு நடத்த கூடாது!' என்றார் சற்று க மையான குரலில். நானு சரி என்றேன்.

சில வினாடிகள் அமை யாக என்னைப் பார்த்தவ 'முதலமைச்சர் என்ன சொ னார் என எல்லோரும் உ களிடம் கேட்பார்கள். ஆக்கிரமிப்புகளை அகற்ற முதலமைச்சர் அனுமதி அளி விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு, து பாக்கிச் சூடு வேண்டாம் என்பதை வெ யில் சொல்லாமல், நீங்கள் மட்டும் மனசி வைத்துக் கொண்டு செயல்படுத்தினா போதும்' என்று சொன்னார்.

போலீஸ் படையுடன் ஸ்பாட்டுக் சென்று ஆக்கிரமிப்பு அகற்றும் பணி

கல்கி நடத்தும் திருச்சி மாவட்ட வாசகர் சந்திப்பு

இடம் : அஜந்தா ஹோட்டல், நாள் : 26.01.2010
சென்ட்ரல் பஸ் ஸ்டாண்ட் எதிரில். திருச்சி. மாலை 3.30 மணிக்கு

நிகழ்ச்சி நிரல்:

3.30 : இறைவணக்கம்

3.35 : வரவேற்புரை (சீதா ரவி - கல்கி ஆசிரியர்)

3.45 : திருச்சியும் கல்கியும் (சிறப்புரை - முனைவர் மீனா, முதல்வர், ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி)

4.00 : கல்லூரி மாணவிகளின் விமர்சனம் (திருச்சி மாவட்ட ஸ்பெஷல்ஸ் குறித்து

விருந்தினர்கள் மற்றும் முகவர்களை சிறப்பித்தல்

4.15 : வாசகர்களுடன் கலந்துரையாடல்

4.45 : திருச்சி மாவட்ட சிறப்புப் புதிர் போட்டிகளுக்கான குலுக்கலும் பரிசளிப்பும்

5.00 : நன்றியுரை

அனைவரும் வருக!

வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷித புண்யஸ்மரண ஸமிதி (Regd.)
"ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகாஸ்தானம்"
29-30, East Iyen Street, KUMBAKONAM, Thanjavur Dt. Tamil Nadu-612 001. India
E-mail : rajavedapatasala@dataone.in
Website : www.rajapatasala.in

☎ Off : (0435)
2425948
2401789
Patasala :
2401788
2422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ாவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் ஏற்றுக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் நாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 467 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 210 மாணவர்களுக்கு 20 வேத, சாஸ்திர அத்யாபகர்கள் புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். புதிய பாடசாலை கட்டிடம் **ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகா ஸ்தானம்** என பெயரிடப்பட்டு 21-6-2004 திங்கள்கிழமை ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் திறந்து வைத்து வேத அபிவிருத்திக்கு அர்ப்பணித்தார்.

...ல் அனுப்பும் தங்கள் போன் (with STD Code)/மொபைல் எண்ணை குறிப்பிட்டு கேட்டுக்கொள்கிறோம். நன்கொடை திட்ட விவரங்கள்	நன்கொடை தொகை	நிரந்தர வைப்பு நிதி "Corpus Fund"
...வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs.700/-	Rs. 9,000/-
...ecial Samaradhana	Rs. 2,500/-	Rs. 30,000/-
...ce & Dhal	Rs. 1,600/-	Rs. 20,000/-
...படிப்பும் பயிலும் ஒரு மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs.1,50,000/-

...நன்கொடைக்கான தொகையை Cross செய்யப்பட்ட D.D./Cheque-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

கிருஷ்ண யஜுர் வேத அத்யாபகர்கள் விண்ணப்பிக்கவும்.

...ஆரம்பித்தோம். எந்தவிதச் சட்டம் ஒழுங்கு பிரச்னையுமில்லாமல், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. நான் சாலையில் நின்று கொண்டே, முதலமைச்சருக்கு மானசீகமாக நன்றி கூறினேன்.

● மக்கள் நலன், தேச நலன் என்று வந்துவிட்டால் துளியும் ஈகோ பார்க்க மாட்டார் ஜோதி பாசு. கூர்க்காலாந்து போராட்டத்தின் போது, கொல்கத்தா ராஜ்பவனில் பேச்சு வார்த்தைக்கு வந்திருந்த கூர்க்காலாந்து போராட்டத் தலைவர் சுபாஷ் கைசிங், தனி நாடுதான் என்று விடாப்பிடியாகப் பேசிக் கொண்டிருந்தார். ஒருகட்டத்தில் தம் இருக்கையைவிட்டு எழுந்து கைசிங் பக்கத்தில் வந்து அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு, 'நான் உங்களுக்காக பல படிகள் கீழிறங்கி வந்திருக்கிறேன்; சில படிகள் நீங்களும் கீழே வந்தால்தான், கைகோத்து நடக்க முடியும்' என்று நெகிழ்வான குரலில் பாசு சொல்ல, கைசிங்கும் நெகிழ்ந்து போனார்.

"நான் ஒரு கம்யூனிஸ்ட் மட்டுமில்லை; இந்த மாநிலத்தின் முதலமைச்சரும்கூட!"

● அவரது நகைச்சுவை உணர்வு அபாரமானது. ஒருமுறை சாமானிய மக்களிடையே, மத்திய அரசு, மே.வங்காளத்துக்குப் போதிய நிதி உதவி செய்வதில்லை என்பது பற்றிப் பேசுகையில், ''நான் டெல்லிக்குப் போய்க் கேட்டால், மத்திய சர்க்கார் எதுவும் கொடுக்கறதில்லைன்னு சொல்றாங்க. அது தப்பு. எனக்கு டீ கொடுக்கறாங்க'' என்று அங்கதபாணியில் குறிப்பிட்டதை மக்கள் வெகுவாக ரசித்தார்கள்.

தொகுப்பு: **எஸ்.சந்திரமௌலி**

● ஹாலிவுட் படங்களுக்கு இணையாக எடுக்கப்பட்டிருக்கும் ஆயிரத்தில் ஒருவன், சில பல ஆங்கிலப் படங்களை நினைவுறுத்து வதை மறுப்பதற்கில்லை.

● பன்னிரண்டாம் நூற்றாண்டில் பதுக்கி வைக்கப்பட்ட சோழர்குல வாரிசையும், பாண் டியனின் குல தெய்வத்தையும் தேடிப் புறப் படுகிறது ஒரு படை; ஏழு மலை தாண்டி, ஏழு கடல் தாண்டி.

● திகில், த்ரில், ஃபேண்டஸியாகக் கதையை நகர்த்த முற்பட்டிருக்கிறார் இயக்குநர் செல்வராகவன்.

● முதற் பகுதி முழுக்க கார்த்தி ஹீரோ என்றால், மறுபாதியில் ரீமாசென் வில்லி அவதாரம் எடுக்கும் ஹீரோ.

● ஆண்ட்ரியா, ரீமா சென் இருவருக்கும் மத்தியில் மாட்டிக்கொண்டு உளறுவதும், ஆதிவாசிகளின் அச்சுறுத்தலில் அலறுவது மென காமெடி, த்ரில் எக்ஸ்பிரஷன்களை மாற்றி மாற்றிக் காட்டி நம்பிக்கையூட்டுகிறார் கார்த்தி.

● சோழர்களின் மன்னரான பார்த்திப தம் சொந்த மக்களையே நரபலி தருவ நம்பும்படி இல்லை.

● கிராஃபிக்ஸ் காட்சிகளின் ஒப்பனி நல்லா இருக்கு. பினிஃஷிங் சரியில்ல யேப்பா..!

● பின்னணி இசையில் பம்மும் ஜீ.வி. காஷ், 'உன் மேல ஆசைதான்' பாடல் 'பிரசென்ட் ஸார்' சொல்கிறார்.

●முதல் பாதியில் கவர்ச்சியும், மறுபாதிய குழப்பங்களும் திரைக்கதையை சற்றே டெ கன் விழுந்தது போல ஆக்குவதை இயக்கு கவனித்திருக்கலாம்.

● ஏன் இவ்வளவு நீ...ளம். ஆனாலு படம் அரை மணி நேரமாவது மன ஆக்கிரமிப்பதை மறுப்பதற்கில்லை.

ஆயிரத்தில் ஒருவன் - நம்மில் ஒருவ

- கம





● தன் காதலியை, அவள் காதலனோடு சேர்த்து வைக்க முயற்சிக்கும் காதலனின் கதை. என்ன குழப்புதா?

● தனுஷ், ஸ்ரேயாவைக் காதலிக்கிறார், ஆனால், ஸ்ரேயா காதலிப்பதோ... சமீர் தத்தானியை.

● என் காதலை ஃபீல் பண்ணினா போதும்; லவ் பண்ண வேண்டாம் என்று காதலுக்குப் புது(?) வடிவம் தருகிறார் தனுஷ்.

● ஸ்ரேயா ஃபீல் பண்ணினது சமீர் காதலையா... தனுஷ் காதலையா... என்பது க்ளைமாக்ஸ்.

● துறுதுறு காலேஜ் பையன் கேரக்டரில் தனுஷ் பாந்தமாகப் பொருந்துகிறார்.

● பார்ப்பவர்களெல்லாம் காதலைச் சொல்ல ஸ்ரேயா என்ன பொதுச் சொத்தா? அட்லீஸ்ட் அவங்க அப்பா, அம்மா யாருன்னாவது காண்பிச்சிருக்கலாம்.

● ஸ்ரீநாத் காமெடியில் 'நடிகர் சிவகுமார் அட்வைஸ், இயக்குநர் விக்ரமன் பட ஹீரோ' என வந்துபோவது படத்தைக் கலகலப்பாக்கிறது.

● இயக்குநர் மித்ரன் ஜவஹர், பழைய படங்களின் வாசனை வீசுவதைக் கவனித்தாரா?

● ஸ்ரேயாவை ஃபீல் பண்ண வைக்க தனுஷ் செய்யும் சேஷ்டைகளை ரசிக்கலாம்.

● இசை, திரைக்கதை, எடிட்டிங் பற்றி எதுக்குச் சொல்லவைன்னு கேட்கறீங்களா... பாவம், வேணாம் விட்டுடுவோம்.

● ஒரே ஆறுதல் அரைகுறை ட்ரெஸ்ஸில் ஆட்டம் போடாத ஸ்ரேயாதான்.

குட்டி - ஃபீலிங் பார்ட்டி

- மகிமை ராஜன்

குட்டி



சமீபத்தில் 2009-ம் ஆண்டுக்கான 'சாரல்' விருதை கவிஞர் ஞானக்கூத்தன் பெற்றிருக்கிறார். அவரை கவிஞர் தமிழ்மணவாளன் சந்தித்துப் பேசியதிலிருந்து சில பகுதிகள்...

அண்மையில் உங்களுக்கு சாரல் விருது வழங்கப்பட்டிருக்கிறது. அது குறித்து...

''சாகித்ய அகாதமி, நாடக அகாதமி, சங்கீத அகாதமி போன்ற அதிகார மிக்க நிறுவனங்களுக்கு எதிராக அல்லது மாற்றாக அமைப்புகள் உருவாகிற எண்ணம் எழுந்தபின், அதைச் செயல்படுத்தும் விதத்திலே விளக்கு பரிசையும் சாரல் பரிசையும், குறிப்பாகச் சொல்லலாம். இப்ப விளக்கு, சாரல் பரிசுகளை எடுத்துக்கிட்டா, தேர்வுக் குழுவிலே இருப்பவங்க தீவிரமா செயல்படுறவங்க. நம்ம கூடவே இலக்கியத்திலே பழகுறவங்க. இயங்குறவங்க. அந்த விதத்திலே அரசியல் சார்பில்லாத ஒரு மாற்றாகத்தான் இதைப் பார்க்கணும்.''

தெருவில் கிடக்கக்கூடாது என்பதற்காக திருவாசகத்தை வாங்கினேன்!



தற்போதைய தமிழ்க் கவிதைச் சூழல் எப்படி இருக்கிறது?

''நல்லா இருக்கு. குறிப்பா நவீன கவிதைச் சூழல் தொடங்கின காலத்திலே ஒரு பொதுவான மரபிலே சில விஷயங்கள் சொல்ல முடியலேன்னுதான் தோணுச்சு. மனிதன் எங்கிருந்தாலும் எந்தச் சமூகத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் சில பிரச்னைகள் இருக்கு. அதை முக்கியமா வைச்சு எழுதணும்ன்னு தோணிச்சு. அதுக்கு என்ன பேர் வைக்கணும்ன்னு எனக்குத் தோணலை.

ஆனால் இந்த வகையா எழுதறது 'எக்ஸிஸ்டென்சியலிஸம்' என்று சொன்னாங்க. மேலைநாடுகளில் இந்தக் கருத்து இருப்பதாகவும் சில ஆங்கில ஆசிரியர்களைக் குறிப்பிட்டாங்க. வாழ்க்கை முக்கியமானதா நவீன கவிதைகளில் பேசப்படுவதாலே, வாழ்க்கை உடம்பு சார்ந்து



நிராகரிக்க வாசகனுக்கு உரிமை உண்டு!

ஞானக்கூத்தன்

இருக்கறதால, உடம்பைப் பத்தி எழுதறது தேவையாகிறது.''

சில பெண் கவிஞர்கள் எழுதும் கவிதைகளில் உடல் மொழி, ஆண் பெண் உறவு குறித்து விஸ்தாரமாகப் பேசத் தொடங்கியிருப்பது பற்றி...

''நம் சமுதாயத்தில் பல சமயங்கள் இருக்கு. அந்தந்த சமூகம் ஆணையும் பெண்ணையும் உருவாக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறது. ஒரு சமயத்தில் சொல்வது மற்றொரு சமயத்தில் ஏற்புடையதாக இல்லாமல் போகிறது. ஆனால் பொதுக் களத்தில் இயங்கும்போது தன் சமூக விஷயத்தை எந்த அளவு விட்டுக் கொடுப்பது என்பது கவனிக்கத்தக்கது. ஒரு சினிமா 'ஏ' படம் என்றால் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு போவதில்லை. ஆனால் யாரையும் இப்படி எழுதவே கூடாது என்று சொல்ல முடியாது. எழுதுவதற்கு உரிமை இருப்பது போல நிராகரிக்க வாசகனுக்கு உரிமை உண்டு.'

நவீன இலக்கியத்தில் இயங்கும்போது எதற்கும் விட்டுக் கொடுக்காதவர்களாக அடையாளம் காணப்படுபவர்கள் சினிமாவுக்குப் பாடல் எழுதப் போவது குறித்து...

''பாடல் எழுதும் திறமை வேறு. கவிதை எழுதும் திறமை வேறு. சினிமாவுக்கு பாட்டெழுதப்போன பண்பாட்டைப் பற்றிக் கவலைப்பட முடியாது.''

ஜனரஞ்சகப் பத்திரிகைகளில் தற்போது நவீன கவிதைகள் அதிகம் பிரசுரமாகும் நிலை ஏற்பட்டுள்ளதே...

''எந்த இயக்கமும் தீவிரமடைந்து பரவலாகும்போது சரிவைச் சந்திக்கும். முழுக்கச் சரிவைச் சந்திக்கும்போது அது ஜனரஞ்சகமாகும்.''

விமர்சனம் என்னும் பேரில் விழா மேடையிலேயே நூலினைக் கிழித்துப் போடுவது குறித்து...

''மனதுக்கு ரொம்ப வருத்தமாக இருக்கு. நானும் ஆத்மாநாமும் ஒருமுறை போய்க் கொண்டிருந்தப்ப நடைபாதைக் கடையில் குவித்திருந்த நூல்களில் திருஞானசம்பந்தரோட தேவாரம் கீழே கிடந்தது. என்னிடம் திருவாசகம் இருந்தாலும், அது கீழே கிடக்கக்கூடாது என்பதற்காக நான் வாங்கினேன். புத்தகம் எந்தவிதத்திலும், விமர்சனம் என்னும் பேராலேயும் கூட, சேதாரம் அடையக் கூடாது. நவீன இலக்கியத்துக்குப் பக்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் நவீன இலக்கியவாதிகள் இல்லை.''

படம்: **தமிழ்மணவாளன்**

✉ காலம் கடந்தபின் வந்து, ஆளும் அரசின் வீண்செலவுகளைப் பற்றிப் பேசுவது வீண் வேலை! அவ்வப்போதே மக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து எதிர்த்து சரிக்கட்டியிருக்க வேண்டும். 'கடைசி குடிமகன்' மனம் மாறினால்தான், டாஸ்மாக் ஒழியும். விவசாய உற்பத்தியைப் பெருக்கி, பண வீக்கத்தை நீக்கி, தங்கத்தை ஒழித்தாலே நாடு உயரும்; மக்களும் நிம்மதி பெறுவர்.

கு.ப.இரகுநாதன், பூவிருந்தவல்லி

✉ தேசிய விளையாட்டு என ஹாக்கியை அறிவித்து விட்டு, உள்ளூர் கிரிக்கெட் விளையாட்டுக்குத் தரும் முக்கியத்துவத்தைக்கூட அதற்குத் தராமல் வீரர்களைத் தரக் குறைவாக நடத்துவது என்ன நியாயம்?

- ப.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி

✉ வெற்றிகர வீட்டு லோன் பற்றிய ஆலோசனைகள் எல்லாம் கான்கிரீட்டாக இருந்தன.

- பத்மஜா வாசுதேவன், சென்னை - 113

✉ இந்த இதழ், ஜோக்ஸ் ஸ்பெஷலோ என வியக்கும் வண்ணம், ஏகப்பட்ட ஜோக்குளை வழங்கி மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தி விட்டீரே!

- என்.காளிதாஸ், சிதம்பரம்


✉ தமயந்தியின் 'வீட்டின் ஆன்மா', ஹவுஸிங் ஸ்பெஷல் கல்கிக்கு மேலும் ஸ்பெஷலாக அமைந்தது.

- சு.ஸ்ரீகாந்த், நெய்வேலி - 3

✉ ''குடும்பம் மொத்தமும் ஒட்டுக்க சந்தோஷமா இருக்கிறாங்க பாத்தீங்களா... அதுதான் நல்ல வீடு'' என்ற கன்னியப்பனின் வார்த்தைகள்தான், 'வீடு வாசல் வசந்தம்' என்ற கான்செப்டுக்கு ஆணி வேர்!

- சி.என்.ரமாதேவி, சென்னை - 70

✉ சுரணின் திரைப்பயணம் தாலாட்டும் கடலலை போல ரம்மியமானது. ரசிகர்



களை என்றுமே தம் பக்கம் தக்க வைத்துக் கொள்ளப் பாடுபட்டு வரும் அவரது அனைத்து முயற்சிகளும் நிச்சயம் திருவினையாகும். இனி இமேஜ் கூடும்.

- மலை அரசன், அருகந்தம்பூண்டி

✉ மின்னல் கதைகள் அனைத்தும் சூப்பரோ சூப்பர்!

- இந்திரன், நாகர்கோவில்

✉ 'இப்படியும் வசிக்கலாம்!' -செய்திகளின் தொகுப்பும், படங்களும் வித்தியாசமாக இருந்தன.

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

✉ காலேஜ் விசிட் பகுதியில் மாணவிகள் சும்மா கலக்கியிருக்காங்க கலக்கி! பூக்களின் அணிவகுப்பு என்று மாணவிகளின் ஸ்டில்லையும், வெற்றிக் கண்மணிகளை விதை தூவி வளர்ப்பவர்கள் என்று ஆசிரியைகளின் ஸ்டில்லையும் போட்டு கல்கியும் சூப்பரா கலக்கியிருக்குதுங்கோ!

- எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

✉ ட்விட்டர் கதைகள் ஒவ்வொன்றும் ஒருவிதம்; அனைத்தும் அற்புதம்!

- ஆர். பழனி, காட்பாடி - 7

✉ சிரிப்பாலஜி சிரிக்க மட்டுமல்லாது, சிந்திக்கவும் வைக்கும் கட்டுரை.

- ஆர். ராஜாமணி, சென்னை - 88

✉ ஒருவர் வீடு வாங்க வேண்டுமானால் எங்கும் அலைய வேண்டாம். 24.1.10 கல்கியை வாங்கிப் படித்தால் போதும் - தகவல்கள் விரல் நுனியில்!

- என்.என்.வேங்கடகிருஷ்ணன், கோயம்புத்தூர்

✉ ஒவ்வொரு கல்கி ஸ்பெஷலுக்கும் பொருத்தமாக மகா பெரியவரின் அருள் வாக்கை வெளியிட்டுச் சிறப்பிக்கும் கல்கியின் பணி பாராட்டுக்குரியது!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு.

✉ 'புத்தகத் திருட்டு அங்கீகரிக்கப் படக் கூடிய அந்தஸ்துள்ள பண்பு' என்று ஒரு எழுத்தாளரே பேசுவது அபத்தம்!

- அய்யாறு எஸ்.வாசுதேவன், சென்னை - 91

✉ சனிக்கிழமைகளில் நாங்கள் போட்டி போட்டுப் படிப்பது 'ஆல் இன் ஆல்' கல்கி... இந்த இதழில் இடம் பெற்ற ஒவ்வொரு 'ட்விட்டர்' கதையும் சூப்பர்!

- தனுஸ்ரீ, முனியங்குறிச்சி

✉ 140 எழுத்துக்கள் கொண்ட ட்விட்டர் கதைகளிலும் மெலிதான ட்விஸ்ட் வைத்து அசத்திய கல்கி வாசக எழுத்தாளர்களுக்கு திருஷ்டி சுற்றிப் போட வேண்டும்.

- எம்.ஜி. பரத், திண்டுக்கல்

✉ பட்ஜெட் பற்றாக்குறை பற்றிய, பதற்றமில்லாத, பயப்படாத, தெளிவான தலையங்கம் அருமை. முதல்வர் செவி சாய்த்தால் இன்னும் நலம்.

- பி.மீனா கணபதி, திருநெல்வேலி

இமேஜ் கூடும்!



கல்கி



2010 ஜனவரி 31
விரோதி தை 18
மலர் : 68
இதழ் : 27

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


கேடு இல் விழுச் செல்வம் Vs கேடு கெட்ட செல்வம்!


'கேடு இல் விழுச் செல்வம்' என்று கல்விக்கு உயர்ஸ்தானம் அளித்துப் போற்றினார் வள்ளுவர். இன்றோ, தமிழகத்தில் கேடு கெட்ட மார்க்கத்தில் செல்வம் சேர்க்கும் உபாயமாக மாறி நிற்கிறது கல்வி! அதனால்தான் நாடெங்கும் நாற்பத்து நான்கு நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் அந்த சிறப்பு அந்தஸ்தை இழக்கும் நிலைக்கு வந்துள்ளன. அனைத்திந்திய அளவில் இந்த நடவடிக்கையைச் சந்திக்கவுள்ள பல்கலைக்கழகங்களுள், பெரும்பாலானவை தமிழகத்தில்தான் உள்ளன என்பது கவனத்துக்கும் கவலைக்கும் உரிய விஷயம்; தலைகுனிவும்கூட.

இந்த நாற்பத்து நான்கு பல்கலைக்கழகங்களும் பெரும்பாலும் குடும்ப நிறுவனங்கள் போல் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன; கல்வி பயில்வதற்கான வசதிகளிலும் சரி, நிர்வாக ஒழுங்கிலும் சரி, அவை சட்ட திட்டங்களுக்கும் தர நிர்ணயங்களுக்கும் உட்பட்டு இயங்கவில்லை என்பதே நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்தின் ரத்துக்குக் காரணம்.

அவ்வாறெனில், இந்த அந்தஸ்து இந்நிறுவனங்களுக்கு முதற்கண் ஏன் வழங்கப்பட்டது? வியாபார நோக்கும் அரசு அமைப்பின் லஞ்ச-ஊழலும்தான் இதற்குக் காரணம் என்பது சொல்லித் தெரிய வேண்டிய விஷயமல்ல! 'பாதிக்கப்பட்ட' கல்வி நிறுவனங்கள் நீதிமன்றத்தில் மனு செய்ய இருக்கின்றன. வழக்கு மேற்கொள்ளப்படலாம் அல்லது மனு தள்ளுபடியும் ஆகலாம். எவ்வாறு ஆயினும் கல்வித்துறை சீர்கெட்டுள்ளதை மறுப்பதற்கில்லை.

தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் (பொறியியல், மருத்துவம்) அனுமதிக்கப்பட்ட பிறகு, அவற்றை அரசியல்வாதிகளும் அரசியல்





செல்வாக்கும் பின்னணியும் உடையவர்களும் ஆரம்பித்து நடத்துவது சகஜமாகியிருக்கிறது. அதற்காக ஏராளமான விவசாய நிலம் வாங்கப்படுகிறது. அரசியலில் வேரூன்றிய லஞ்ச-ஊழலும், பணத்தைக் கொண்டு எதையும் வாங்கும் போக்கும் கல்வித் துறைக்குள்ளும் கசிந்து, பரவி, ஆக்கிரமித்துவிட்டன. இதனால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்கள், தரக்குறைவான பல்கலைக்கழகங்களில் சேர்ந்துள்ள மாணவர்கள்தாம். அவர்கள் கோபமடைந்து கொந்தளிப்பதில் வியப்பில்லை. தரத்துக்கு உட்படாத பல கல்லூரிகள் பொறியியல், மருத்துவப் படிப்புக்கானவை என்கிறபோது, அவற்றில் படித்துப் பட்டம் பெறும் தொழில்முறையினரின் தரம் குறைவதென்பது சமூகத்துக்கே கேடு விளைவிக்கக் கூடுமல்லவா!

இது போன்ற குளறுபடிகள் தொடராமல் இருக்க வேண்டுமானால், கல்வி - குறிப்பாக உயர் கல்வி - குறித்த நமது தேசிய கண்ணோட்டம் மாற வேண்டும். ஆனால், நமது அரசு என்ன செய்கிறது..? ஐந்தாண்டு மருத்துவப் படிப்பை மூன்றரை ஆண்டு காலத்துக்குக் குறைத்து வழங்கி, அதில் பயில்வோரை கிராமப்புற மருத்துவராகப் பணியில் அமர்த்தும் அபத்தத் திட்டத்தை அறிவிக்கிறது! கிராம மக்களுக்கு, அதிகம் படிக்காத டாக்டர்களே போதும் என்று கூறாமல் கூறும் இந்த முடிவு, வடிகட்டிய அநீதி. இந்த கிராம டாக்டர்களுக்கு, அவர்கள் பணியில் இருக்கிறபோதே அறுவை சிகிச்சை செய்யவும் பயிற்சி அளிக்கப்படுமாம்! ஏழை - எளியோர் உயிரைக் கொண்டு விஷப் பரீட்சை நடத்துவதா?

அரைவேக்காட்டு பட்டதாரிகளை உருவாக்கி, அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என அங்கலாய்ப்பதில் அர்த்தமில்லை. சுயமாகச் சம்பாதிக்கும் ஆற்றலைத் தரக்கூடிய வகையில், பெரும்பான்மை மாணவர்களுக்குக் கைத்திறன் அல்லது அன்றாட வாழ்வியல் தொழில்நுட்பக் கல்வியே போதுமானது. அதையே காலத்துக்கேற்ப நவீன முறையில் புகட்டுவதுடன் அடிப்படை மொழி மற்றும் கம்யூனிகேஷன் ஆற்றலையும் அளித்தாலே போதும். தரமான, தன்னம்பிக்கையுள்ள தொழில்நுட்பத் தலைமுறை உருவாகி, தன்னிறைவு பெறும். கிராம - நகர வேறுபாடு இன்றி வேலை வாய்ப்புகள் பெருகும். ○

ஒரிஜினல் அம்மா...



✱ கே.பழனி

வடசென்னை, சத்திய மூர்த்தி நகரில் கலர் மங்கிய ஹவுசிங் போர்டு குடியிருப்புகள் அடங்கிய ஒரு தெருவில் ஒருபுறம் மாட்டு வண்டி மீது பெர்முடாஸ் போட்ட இளைஞர்கள், 'கல்லானாலும் காஞ்சனா வீட்டு கல்லாவேன். மரமானாலும் மஞ்சுளா வீட்டு மரமாவேன்' என கானாவில் கலந்து கட்டிக் கொண்டிருந்தனர். இன்னொருபுறம் ஊர்க்கதையை மென்றபடி ஐந்தாறு அம்மணிகள். ஒருபுறம் குடித்து விட்டுச் சண்டை போடும் இருவரை விலக்கி விடும் கும்பல். இத்தனைக்கும் நடுவில் குழந்தைகளின் கோரஸ் சப்தம் இன்பமாய் தெருவைக் கழுவிக் கொண்டிருக்கிறது. ஒருவேளை ரசிகர் மன்றமாய் முளைத்து விட்ட கூட்டமோ என ஆச்சரியத்துடன் அந்தக் கட்டிடத்தின் இரண்டாவது மாடிக்கு ஏறினால், படியெல்லாம்... கலவரத்தில் சிதறியிருக்கும் காலணிகள் போல் சிறார்களின் செருப்புக் குவியல், வராண்டாவில் (5x4) முழுக்க குழந்தைப் பட்டாளம். தடுமாறி பெட்ரூம் (ஹாலும் இதுதான்) போனால் பத்துக்கு பத்து அறை முழுக்க மாணவர்கள். ஒரு பெண் அல்ஜீப்ரா நடத்திக் கொண்டிருக்க, சுவரில் மாட்டியிருக்கும் பேண்ட் ஒன்று நம் தலையில் விழுகிறது. சமையல் அறை போனால்...

பிளாஸ்டிக் குடம், பாத்திரங்களை ஓரங்கட்டிவிட்டு அங்கும் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். வீட்டையே சமூகத்தைச் செதுக்கும் சிற்பக் கூடமாக மாற்றியிருக்கும் கே.பழனியைச் சந்தித்தோம்.

✱ சமையலறையில்...



✱ வராண்டாவில்...



"ஸார்! இந்த நைட் ஸ்கூலை ஐந்து வருடமா நடத்துறேன். எனக்கு ரெண்டு காலும் வெளங்கல. நான் எந்த ஸ்கூலிலும் படிக்கலை. ஆனா ஒண்ணு மட்டும் தெரியும். ஒரிஜினல் அம்மா படிப்புதான்.

அது எப்பவும் நம்மைக் காப்பாத்தும். அதனாலதான் அன்னை இரவுப் பாட சாலைன்னு பேர் வெச்சேன். முதல்ல படிச்சவங்க வந்து பாடம் எடுத்தாங்க. இப்போ இங்க படிச்சுட்டு காலேஜுக்குப் போற ஸ்டூடண்டுங்கதான் டீச்சர்ஸ். இது ஒரு கூட்டு முயற்சி. சோஷியல் வொர்க். ஏழைப் பசங்க விருப்பப்பட்டு பத்து ரூபா இருபது ரூபா கொடுத்தாலே பெரிய விஷயம். என்னைச் சுத்தி எல்லாம் படிச்சவங்களா இருக்கணும். படிச்சா வாழ்க்கையே மாறிடுமில்ல ஸார்'' என்று சொல்லும்போது அறையெல்லாம் சரஸ்வதி வாசனை வீசியது.



படிப்புதான்!

டபுள் பெட்ரூம், ஹால், வராண்டா, தோட்டம், மொட்டை மாடியோடு வாழும் பலருக்குள் இவரது முயற்சி கொஞ்சம் குற்றவுணர்ச்சியைக் குடியேற்றிவிடும் என்று எண்ணிய படியே வெளியே வந்தோம்... நல்லவர்களுக்காக மழை தூறிக் கொண்டிருந்தது.

- அமிர்தா

BLB
PLEDGED TO ETHICS

குறைவான முதலீடு.
நிறைவான இலாபம்.
DTCP அங்கீகாரம்பெற்ற மனைகள்

ஸ்ரீ பத்மநாபா அவென்யு
காஞ்சிபுரம்

திவ்யதேசங்கள் நிறைந்துள்ள காஞ்சிபுரத்தில், தொழில்தாழ்வாரமாக அமைந்துள்ள சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையிலிருந்து 5 நிமிட பயண தூரத்தில் அமைந்துள்ளது.

செழிப்பான எதிர்காலத்திற்கு இன்றே முதலீடு செய்யுங்கள்

கடன் வசதி உண்டு

2834 5104 (4 lines)

BLB ESTATES (P) LTD
Website: www.blbestates.com
INVESTING IN VALUES

அம்பிகையின் அனுக்ரஹ மழை

பாக்யாப்திசந்திரிகாவாக - பக்தர்களுக்கும் பூரண சந்திரிகையாக இருந்து பாக்கியத்தை அருளும் அம்பிகை, அந்த அடியார்களை மயில்களைப் போல் மகிழ்ந்து ஆட வைக்கிறாள் என்கிறது இன்னொரு திருநாமம்: **பக்தசித்த கேகிகனாகனா.** பக்தர்களுடைய சித்தமாகிற மயில்களை ஆடவைக்கின்ற மேகமாக இருப்பவள். வானத்தில் மேகம் வரக்கண்டு மயில்கள் ஆட ஆரம்பிக்கும். மேகம் வந்தவுடனேயே, இன்னும் கொஞ்ச நேரத்தில் மழை வரப் போகிறது என்று அதற்குச் சந்தோஷம் உண்டாகி ஆடும். அந்த மாதிரி, அம்பாளை நினைத்தவுடனேயே பக்தர்கள் ஆட ஆரம்பிப்பார்கள். அம்பாளுடைய அனுக்கிரஹம் மழையாகப் பொழியப் போகிறது என்கிற மகிழ்ச்சியில் அவர்களுடைய மனங்கள் களித்து ஆடும்!

வஜ்ராயுதமும் கோடரியும்

இந்த சந்தோஷத்தைத் தரக்கூடிய அம்பிகை என்ன செய்கிறாள் என்றால் நோய் என்கிற மிகப் பெரிய மலையை அழிக்கக்கூடிய வஜ்ராயுதமாகவும் இருக்கிறாள்: **ரோகபர்வத தம்போலி:** ரோகம் என்றால் நோய். வருகிற ரோகம் பர்வதம் அளவுக்குத் தாளமுடியாததாக இருந்தாலும் அதைக் களைகிற வஜ்ராயுதமாக அம்பாள் இருக்கிறாள். வஜ்ராயுதம் எவ்வளவு தூரத்துக்கு வலிமையும் சக்தியும் வாய்ந்ததாக இருக்கும் என்றால், அதைக் கொண்டு மலையைக்கூட தூள் தூளாக்கிவிடுகிற அளவுக்கு இருக்கும். அப்படிப்பட்ட வலிமை கொண்டு நம் ரோகங்களைப் பொடியாக்க வல்லவள் அம்பிகை.

ம்ருத்யுதாரு குடாரிகா - ம்ருத்யு - அதாவது மரணம் - என்கிற தாவரத்தை (தாரு) வெட்டக்கூடிய கோடாலியாக இருப்பவள். மரணம் என்கிற தாவரம் கீழே நன்றாக வேர் பிடித்து, படர்ந்து மரமாக கிளை பரப்பி நின்றாலும் அந்த மரத்தை வெட்டக்கூடிய கோடரியானவள் **ம்ருத்யுதாரு குடாரிகா.**

அவளே **மஹேசுவரி** - மஹா ஈசுவரி.

காளியின் கதை

மஹாகாளி - சிவப் பரம்பொருள் அரக்கர்களை அழிப்பதற்காக தன்னிலேயிருந்து ஒரு ஸ்வரூபத்தை உண்டு பண்ணிற்று; அந்த ஸ்வரூபம்தான் காளி என்று ஒரு வரலாறு உண்டு.

அதே சமயத்தில், காளிக்கு அம்பாள் தன்னுடைய சக்தியைக் கொடுத்தாள் என்றும் இன்னொரு வரலாறு உண்டு. இதிலிருந்து தொடர்ச்சியாக இன்னொன்றும் சொல்வதுண்டு.


அசுரர்களை அழிப்பதற்காக அம்பாளின் அம்சமாகத் தோன்றிய காளி, அவர்களைப் போரிட்டு அழிக்கும்போது, அந்த யுத்தத்தில் பெருகிய அசுர ரத்தத்தைப் பருகினாள் என்று சொல்வதுண்டு. அசுரர்களை அழித்துவிட்டு, சர்வ

15

சுதா சேஷய்யன்

ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம்


ஸ்ரீ கற்பகாம்பாள்

ஆயுதங்களோடு வீற்றிருக்கிறாள். அந்த அசுரர்களின் ரத்தம் மேலே பட்டதனால், அந்த ரத்த சம்பந்தம் ஏற்பட்டதனால்தான் காளிக்கும்கூட அகங்காரமும் மமகாரமும் ஏற்பட்டனவாம்.

குருக்ஷேத்திர போர்க்களத்தில் ஒரு சுவாரஸ்யமான சம்பவம் நடந்தது. அம்புப் படுக்கையிலே பீஷ்மர் படுத்துக்கொண்டிருக்கிறார். கிருஷ்ணர், தர்மரை அழைத்துக் கொண்டுபோய், பீஷ்மரிடத்திலே நிறுத்தி, பிதாமகரிடம் கற்றுக்கொள்ள வேண்டியவற்றையெல்லாம் கேட்க வைக்கிறார். எப்போது...? யுத்தமெல்லாம் முடிந்த பிறகு!

அப்போது ஒரு சின்ன உரையாடல் நடந்தது. இவ்வளவெல்லாம் தெரிந்த பீஷ்மர், அன்றைக்கு திரௌபதி அவமானப்படுத்தப்பட்டபோது பார்த்துக் கொண்டிருந்தாரே, ஏன்? பீஷ்மருக்குத் தெரியாதா அது பாதகச் செயல் என்று...?

இந்தக் கேள்வி வந்தவுடனே பீஷ்மர் பதில் சொல்கிறார்: என்ன இருந்தாலும் துரியோதனன் வீட்டுச் சாப்பாட்டைச் சாப்பிட்டதனால், அந்தச் சமயத்திலே அந்த ரத்தம் உடம்பிலே ஓடியதால், அவனுக்கு நன்றியறிதல் பாராட்ட வேண்டியதாகி விட்டது. ஒரு தவறைக் கண்டும் பேசாமல் இருக்க நேர்ந்தது. ஆனால் போர்க்களத்துக்கு வந்தபிறகு என்னவாயிற்று...? அம்பு துளைத்து, துளைத்து உடலிலிருந்த ரத்தமெல்லாம் போய்விட்டது. பழைய ரத்தம் போனது மட்டுமல்ல; உடம்பும் சுத்தமாகி விட்டது. எப்படி...?

பீஷ்மர் தாகத்துக்குத் தண்ணீர் கேட்டபோது, அர்ஜுனன் அம்பை பூமிக்குள் செலுத்தி, துளைத்து, நிலத்தடியிலிருந்து நீரை வரவழைத்தான். நல்ல தூய்மையான தண்ணீரும் உடலினுள் சென்றது. துரியோதனன் வீட்டுச் சாப்பாட்டின் பாதிப்பு அடியோடு போய்விட்டது! முழுக்க முழுக்க முழுக்க நன்மை, நல் பாதிப்புகள் உடலை நிறைத்தன.

அதே மாதிரிதான் காளிக்கு அசுரர்களின் ரத்தத் தொடர்பினால் அகங்காரம் வந்தது; மமகாரம் வந்தது. அந்தக் காளிதான் கேட்டாள், 'எனக்குச் சமானம் யார்?' என்று சவால் விட்டாள். அவளுடைய அகங்கார மமகாரத்தை அடக்குவதற்காகத்தான் சிவப் பரம்பொருள் "உனக்கும் எனக்கும் இடையிலே ஒரு போட்டி வைக்கலாமா...?" என்று கேட்டார். அப்படிக் கேட்பதற்கு அவர் அகோர ஸ்வரூபத்தில் வந்தாராம்.

சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் உண்டு. அதிலே அகோரம் என்பது ஒரு முகம். சற்று வீராவேசமாக, பயமுறுத்தும் படியாக இருக்கக்கூடிய ஸ்வரூபம்தான் இந்த அகோரமூர்த்தி. அந்த ஸ்வரூபத்தைப்

திரௌபதி அவமானப்படுத்தப்பட்ட போது பார்த்துக்கொண்டிருந்தாரே, ஏன்? பீஷ்மருக்குத் தெரியாதா அது பாதகச் செயல் என்று...?

பார்த்தவுடனேயே காளிக்குத் தோன்றிப் போய்விட்டதாம் - இந்த ஸ்வரூபத்துடன் நேரடியாகச் சண்டையிட்டு நம்மால் ஜெயிக்க முடியாது என்று. நேரடியாக ஆயுதங்களை வைத்துக்கொண்டு சண்டையிட்டால் தோற்றுப்போவோம் என்பதற்காக அவள் ஒரு சின்ன சூட்சுமம் பண்ணினாள். காளி நடனத்தில் வல்லவள். எந்த அளவுக்கு வல்லவள் என்றால், பரத சாஸ்திரம் என ஒன்று எப்படி இருக்கிறதோ, அந்த மாதிரி காளி நாட்டிய சாஸ்திரம் என்றே ஒன்றைச் செய்ததாகச் சொல்கிறார்கள். அந்த நூல் இன்று இல்லை என்றாலும், காளி அவ்வளவு தூரம் நாட்

டியத்தில் வல்லவள் என்பதை அது அறிவுறுத்துகிறது.

தனக்கென்று இருக்கிற சிறப்பியல் பிலே போட்டி வைத்தால் நிச்சயமாக வென்று விடலாம்; சண்டைக்கு என்று போனால் தானே, சிவனை ஜெயிக்க முடியாது. "இரண்டு பேரும் நடனமாடுவோம், யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப்போம்..." என்றாள்.



சிவனும், "ஓ, சரி!" என்றார். ஊர்துவ தாண்டவம் ஆடினார். காலை மேலே தூக்கி ஆடுவதுதான் ஊர்துவ தாண்டவம். காளியால் அது முடியவில்லை; தோற்றுப் போனாள். - இதுதான் திருவாலங்காட்டு ஸ்தலபுராணம் அல்லவா? நடராஜாவின் பஞ்ச சபைகளில் ரத்தினசபை இந்தத் திருவாலங்காடு; மூத்த சபையும் கூட. அங்கு கர்வத்துடன் வீற்றிருந்தபடிதான் காளி, பரமேசுவரனை அகம்பாவத்துடன் பேசியிருக்கிறாள். அதன்பின் போட்டி நிகழ்ந்திருக்கிறது.

இப்படி காளியாக வந்ததே சிவனுடைய அம்சம்தான் என்றும் சொல்வதுண்டு; அசுரர்களை வெல்ல அம்பாளே தன்னுடைய அம்சத்தைக் காளியாக அனுப்பினாள் என்றும் சொல்வதுண்டு. இதனால் விளைந்த திருநாமமே **மஹாகாளி.**

மீண்டும் வரும் திருநாமங்கள்

மஹாக்ராஸா - பெரிய பிடிமானத்தோடு இருக்கக்கூடியவள். உலகத்தை, அண்டத்தை, பிரம்மாண்டத்தை, ஜகத்தையெல்லாம் தன்னுடைய பிடிக்குள் வைத்திருக்கக்கூடியவள் - **மஹாக்ராஸா.**

மஹாசனா - மஹா ஆஸனத்தில் இருக்கக்கூடியவள். இதைக் குறிக்கின்ற திருநாமம் ஒன்று ஏற்கெனவே இருக்கிறது. மீண்டும் அதே போன்ற திருநாமம் வருகிறது. இதற்கான பொருளை மிகப் பெரியவளாக - மஹதியாக -இருக்கக்கூடியவள் என்று சொல்லலாம். இங்கே 'மஹாசனா'வில் 'ச' வரும்; முதல் 'மஹாஸனா'வில் 'ஸ' வரும். எந்த ச(ஸ) போடப்படுகிறது என்பதைப் பொறுத்து பொருள் மாறுபடும்.

சாதாரணமாக சஹஸ்ரநாமம் என்று சொன்னாலும் சரி, அது எந்த நூலாக இருந்தாலும் சரி, ஏற்கெனவே வந்த திருநாமம் மறுபடியும் வரக்கூடாது. அவ்வாறு வரின், கூறியது கூறல் என்ற குற்றமாகிவிடும். அதனால் வியாக்யானம் சொல்லும்போது கவனமாகப் பொருள் சொல்லுவார்கள். மஹேசுவரி என்று ஒரு திருநாமம் இருக்கிறது. (முன்னால் வந்தது) பின்னால் அதே போல், ஆனால் மாஹேசுவரி என்று வரும். ஓசை ஒன்றுபோல் இருந்தாலும் அர்த்தம் ஒன்றுபோல் இருந்தாலும்கூட நாமம் வேறு.

அதே மாதிரி இங்கே மஹாசனா என்ற திருநாமத்துக்கும் பொருள் வேறு - 'தனக்குள் எல்லாவற்றையும் கொண்டவள்' என்று பொருள்.

(வளரும்)

லெவன்த் மேன் யாரு?


தோனி

இந்திய கிரிக்கெட் அணி சத்தமில்லாமல் 2011 உலகக் கோப்பைக்குத் தயாராகிவருவதை எத்தனைபேர் உணர்ந்தீர்கள் என்று தெரியவில்லை. இன்று நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் அணியே இந்திய அணி சார்பாக 2011 உலகக்கோப்பையில் பங்கேற்க இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு தோனி சொன்னதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும் - 'உலகக் கோப்பையில் ஆடுகிற என் அணியினர் குறைந்தது 60 போட்டிகளிலாவது பங்கேற்றிருக்க வேண்டும்.'

முதலில் ஓபனிங், மிடில் ஆர்டர், லேட் மிடில் ஆர்டர் என்று பேட்டிங்கைப் பிரித்துவைத்துக்கொள்வோம். ஒருநாள் போட்டியில் முதலில் களமிறங்கும் சச்சின் 2011 உலகக்கோப்பையில் எப்படியும் ஆடுவார். அதுவே அவருடைய இறுதி லட்சியம். அதே போல அடுத்த ஒரு வருடத்துக்கு ஒரு ரன்கூட எடுக்காமல் போனாலும் ஷேவாக் அணியில் இருப்பார். அவ்வாறே மூன்றாவதாக ஆடவருகிற கௌதம் கம்பீரும். 2007 உலகக் கோப்பையில் பேட்டிங் ஆர்டரைக் கண்டபடி மாற்றியதுதான் தோல்விக்குக் காரணம் என்று சமீபத்தில் சச்சின் சொல்லியிருக்கிறார். எனவே இந்த முறை புராதன முறையே பின்பற்றப்படும். மிடில் ஆர்டரில் நான்காவது, ஐந்தாவதாக ஆடுபவர்கள் யுவ்ராஜும் தோனியும். லேட் மிடில் ஆர்டரில் ரைனா, கோலி இருவரில் ஒருவருக்கே வாய்ப்பு. இப்படி முக்கியமான ஆறு இடங்கள் பூர்த்தியாகிவிட்ட நிலையில் மிச்சமுள்ள ஐந்து பேர் யார் யார்?



செடிக்குத் தினமும் நீர் ஊற்றி வளர்ப்பதுபோல ரவீந்தர ஜடேஜாவை ஆல்ரவுண்டராக வளர்த்து வருகிறார் தோனி. இங்கிலாந்து 20-20 உலகக் கோப்பை, ஆஸ்திரேலியாவுடனான இரு போட்டிகள் என முக்கியமான தருணங்களில் ஜடேஜாவின் பிழைகளால் இந்திய அணி தோற்றுப் போயிருந்தாலும் அவரை விட்டுக்கொடுக்க தோனி தயாராக இல்லை. ஏழு முடிந்து இன்னும் நான்கு இடங்கள் பாக்கி. இதில் ஒரு ஸ்பின்னருக்குத்தான் இடம். அதற்கு ஹர்பஜன் மட்டுமே பொருந்துவார். பொதுவாக அணித் தேர்வுகளில் தோனி அதிரடியாகச் செயல்படமாட்டார். பாதுகாப்பான ஆட்டம்தான் அவர் பாணி. மீதமுள்ள மூன்று வேகப்பந்து வீச்சாளர்களுக்கான இடங்களில் இரண்டை ஜாஹீர் கானும் நெஹ்ராவும் பிடித்துக்கொள்கிறார்கள். மீதமுள்ள ஓர் இடத்துக்குத்தான் இப்போது போட்டி. இஷாந்த் சர்மாவை நம்பி ஆட்டத்தில் சேர்க்கமுடியாது. ஸ்ரீசாந்த் அதைவிட மோசம். சுதீப் தியாகி மீது தோனிக்கு இன்றுவரை ஒரு நல்ல அபிப்ராயம் கிடையாது.

சமீபத்தில் நடந்துமுடிந்த ரஞ்சி போட்டியில் கர்நாடகாவைச் சேர்ந்த வினய் குமார், மிதுன் என்கிற இரு வேகப்பந்து வீச்சாளர்களும் அதிக கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். அடுத்த இரு மாதங்களில் ஐ.பி.எல். 3 நடக்க உள்ளது. சென்ற இரு ஐ.பி.எல் போட்டிகளையும் பத்ரிநாத், நெஹ்ரா, ஓஜா, கோலி போன்ற வீரர்கள் இந்திய அணிக்குள் நுழைய துருப்புச் சீட்டுகளாகப் பயன்படுத்தியதுபோல, இந்தியாவுக்குத் தேவையான அந்த மூன்றாவது வேகப்பந்து வீச்சாளர் (அல்லது இன்னொரு வீரர்) ஐ.பி.எல். 3லிருந்து கிடைக்கலாம். அல்லது இப்போது நடந்துகொண்டிருக்கும் 19 வயதுக்குட்பட்ட உலகக் கோப்பையிலிருந்தும் ஒரு புதிய பூ பூக்கலாம்! (கோலி, ஜடேஜா இருவரும் சென்ற 19 வயதுக்குட்பட்ட உலகக்கோப்பையில் ஆடியவர்கள்). காத்திருப்போம்! ○





கிரகண விருந்து!


'சூரிய கிரகணமோ அல்லது சந்திர கிரகணமோ, கிரகணம் நடக்கும் வேளையில் எதுவுமே சாப்பிடக் கூடாது. கிரகணம் ஆரம்பிப்பதற்கு சரியாக நான்கு மணி நேரம் முன்பாகவே சாப்பிடுவதை... அவ்வளவு ஏன் பச்சைத் தண்ணீர் குடிப்பதைக் கூட நிறுத்திவிட வேண்டும்' இவை எல்லாமே அனேக வீடுகளில் பெரியவர்கள் கூறும் போதனைகள் தான்.

கிரகணத்தின்போது சாப்பிட்டாலோ அல்லது தண்ணீர் பருகினாலோ நிச்சயம் வயிற்றில் ஏதாவது கோளாறு உருவாகிடும் என்பதே இவர்களின் வாதம்.

''அட, நீங்க வேற... கிரகணம் என்பது ஒரு சாதாரண இயற்கை நிகழ்வு... அவ்வளவுதான். 1980-ஆம் ஆண்டு ஆரம்பிச்சு, 1995, 1999, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டு நடந்த சூரிய கிரகணம்வரைக்கும் தொடர்ந்து அஞ்சு வருஷமா கிரகணம் சமயத்துல பொங்கல் விருந்து தமிழகம் முழுக்க பல இடங்கள்ல கொடுத்துக்கிட்டுதான் இருக்கோம். லட்சக் கணக்கான மக்கள் கிரகண சமயத்துல நாங்க கொடுக்கற விருந்தைச் சாப்பிட்டுக்கிட்டுதான் இருக்காங்க... ஆனா அவங்க யாருக்குமே கோளாறுன்னு ஒண்ணு இதுவரைக்கும் வந்ததே இல்லை'' என அழுத்தமாகச் சொல்கிறார் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநிலத் தலைவர் ராமலிங்கம்.

''சரி, கிரகண சமயத்துல சாப்பாடு சாப்பிடுவது இருக்கட்டும். கர்ப்பிணிப் பெண்கள் கிரகண சமயத்துல குறிப்பா, சூரிய கிரகண சமயத்துல ரொம்ப ஜாக்கிரதையா, சூரியக் கதிர்கள் கொஞ்சம் கூட தங்கள் மேல் படாதவாறு பாதுகாப்பா இருக்கணும்னு சொல்றாங்களே... அதைப்பற்றி நீங்க என்ன சொல்றீங்க?'' என்றோம்.

''கர்ப்பிணிப் பெண்கள் தாராளமாக சூரிய கிரகணத்தின்போது வெளியில் செல்லலாம். சென்ற வருடம் நடந்த சூரிய கிரகணத்தின்போது சுமார் 25 கர்ப்பிணிப் பெண்கள் மெரீனா கடற்கரையில் எங்கள் இயக்கத்தின் வாயிலாக



பூங்கோதை



ராமலிங்கம்

சூரிய கிரகணத்தைக் கண்டு களித்தார்கள். அவர்களுக்கும் ஒன்றும் ஆகவில்லை; அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கும் ஒன்றுமே பிரச்சனை ஏற்படவில்லை. விஞ்ஞான ரீதியாக கர்ப்பிணிகளுக்குப் பாதிப்பு வரும் என்பது கிடையவே கிடையாது'' என்று ராமலிங்கம் கூறிக் கொண்டிருக்கும்போதே, சூரிய கிரகணத்தைக் காண காலை 11 மணி முதலே அங்கே காத்திருந்த பூங்கோதை என்ற கர்ப்பிணிப் பெண், ''ஆறு மாத கர்ப்பிணி நான். இந்த சூரிய கிரகணம் ஒரு சாதாரண இயற்கை நிகழ்வு. சூரியனுக்கும், பூமிக்கும் இடையே சந்திரன் நேர்கோட்டில் வருவதால் சூரிய கிரகணம் வருகிறது அவ்வளவுதான்'' என அசால்டாகச் சொன்னார்.

பக்கத்தில் இருந்த உணவு விற்பனைக் கடையில் கிரகண சமயத்தில் மட்டுமே பிரியாணிக்கு ஏக கிராக்கி.

''அறிவியல் ரீதியாக என்ன வேணா இருக்கட்டும், அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை கிரகண சமயத்துல இப்படி இப்படிதான் இருக்கணும் என்று பெரியவர்கள் சொல்லி இருக்காங்க. அவங்க கொடுத்த வரைமுறைப்படி இருப்பதுதான் நல்லது'' என ஃபோட்டோவுக்கு போஸ் கொடுக்க மறுத்த மூதாட்டி ஒரு போடு போட்டார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சென்னை திருவான்மியூரில் மாட்டுப் பொங்கல் அன்று சூரிய கிரகண சமயத்தில் நடத்திய இலவச தேநீர் விருந்தில் கலந்து கொண்டவர்கள் மட்டுமே ஆயிரத்துக்கும் மேல்.

பிர்லா கோளரங்கில் விஞ்ஞான அதிசயத்தைக் காண்பதற்காகவே மணிக்கணக்கில் வரிசையில் நின்று காத்திருந்த மூவாயிரம் மக்கள் ஒருபுறம் விஞ்ஞான அதிசயத்தை எண்ணி சிலிர்க்க, விஞ்ஞானமாவது ஒண்ணாவது என சிரித்தபடி தேநீர் சுவைத்த கூட்டம் இங்கே!

- நளினி சம்பத்குமார்



கிரகண சமயத்தில் மட்டுமே பிரியாணிக்கு ஏக கிராக்கி!

தாசில்தாரிணி

சுப தின, சுப யோக, சுப முகூர்த்தத்தில் தாசில்தார் லஞ்சநாத சாஸ்திரியும், அவருடைய தர்மபத்தினி ஸ்ரீமதி கற்பகாம்பாளும், மைத்துனி சௌபாக்கியவதி செல்லக்கிளியும், குழந்தைகள் அரை டஜனும் மேற்கத்திமாடு கட்டிய இரண்டு வில் வண்டிகளில் ஜாம்ஜாமென்று வந்து இறங்கினார்கள். வந்த களைப்பு நீங்கியதும், அம்மாள் உக்கிராண அறையைப் பார்வையிடச் சென்றாள். கணக்குப் பிள்ளை ராயர் பயபக்தியுடன் முன் வந்து ''டிபன் என்ன போடச் சொல்கிறது?'' என்று கேட்டார்.

''நீர் யார்?''

''நான்தான் உள்ளூர் கர்ணம்.''

''பரிசாரகன் எங்கே?''

அம்மாளைக் கண்டதும் கதவிடுக்கில் ஒளிந்துகொண்ட பரிசாரக முத்துவையர் இப்போது வெளியே வந்தார். ''இதோ இருக்கேன்'' என்றார்.

''நீதானா? உன் துணியைப் பார்த்தாலே சாப்பாடு வேண்டியிராது போலிருக்கே! இருக்கட்டும். சேமியா கேஸரி போடத் தெரியுமா?''

''தெரியும்'' என்றார் முத்துவையர். ஆனால், ராயருக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏனென்றால்,



அமரர் கல்கி

தர்பார்!


சேகரித்திருந்த சாமான்களில் சேமியா இல்லை. 'இந்த அம்மாள் வெகு கெட்டிக்காரி; எது இல்லையோ அதைப் பார்த்துக் கேட்கிறாள், பார்த்தையா?' என்று நினைத்துக்கொண்டு, ''இதோ வாங்கி வரச் சொல்கிறேன்'' என்றார்.

''ரொம்ப பேஷ்! சேமியாகூட வாங்கவில்லையா?'' என்று அம்மாள் உதட்டை ஒரு மடிப்பு மடித்தாள். ராயர் ''இதோ வந்துவிட்டது'' என்று ஓட்டம் பிடித்தார்.

- 'புஷ்பப் பல்லக்கு' கதையிலிருந்து...

வண்ணத் தூரிகை











கிராமத்தின்

முதுகலை சிற்பப் பிரிவில் எம்.ஃபில் படித்துக் கொண்டிருக்கும் பி. இளஞ்செழியன் (29) தமது சிற்பங்களைப் பற்றி பேசுகையில்...

"நான் கிராமத்தான். என் மக்களிடம் கற்றுக் கொண்டதை என் மக்களிடமே சேர்க்கிறேன்; அதனால்தான் நான் ரியலிச பாணியைக் கடைப்பிடிக்கிறேன். ஆரம்பத்திலிருந்தே எனக்குப் பெண்கள்தான் கருப் பொருள். காளையை அடக்கும் பெண், வீரயுத்தம் புரியும் பெண், குடும்பத்தை அரவணைக்கும் பெண் என எல்லாம் அவள்







சுவடுகள்!

மயம். இவையெல்லாம் அழிந்து வரும் கிராமத்தின் சுவடுகளை ஆவணமாக்கும் முயற்சி. ஒரு லட்சம் வரை விற்பனையாகும் இந்தப் பித்தளைச் சிலைகளைச் செய்ய குறைந்தது இரண்டு மாதமாகும். கிராம பள்ளிக்கூடங்களில் இக்கலைக்குப் பயிற்சி பட்டறை நடத்தி கலைஞர்களை உருவாக்குவதுதான் எனது கனவு!"

- அமிர்தா



டாக்டர்.பி.ஆனந்தன்

"பயப்படும்படியாக உடலில் எந்த நோயுமே இல்லை" என தமிழகத்தின் நம்பர் ஒன் மருத்துவ நிபுணர் சர்டிஃபிகேட் கொடுத்தாகிவிட்டது. அதன் பின்பும்கூட தாங்கமுடியாத உபாதைகளால் பாதிக்கப்பட்டிருந்த ரேவதிக்கு, மதம் மாறி ஆறு மாத காலம் வரை இந்நோயின் அறிகுறிகள் இல்லாமல் போனது எப்படி?

அதுதான் மதநம்பிக்கை எனும் சக்தி! அந்த சக்திதான் ஆறுமாதங்களுக்கு HPA axisயைக் கட்டுப்படுத்தி மூளையிலிருந்து நோய், வலி சிக்னல்கள் உடம்பின் பகுதிகளுக்கு வராமல் தடுத்தது.

மூளையின் ஹைப்போதலாமஸ் நம்பிக்கை எனும் சக்திக்குக் கட்டுப்படும் முன் அதை ஆட்டிப் படைத்தது. எது?...

செரடோனின் (serotonin) எனப்படும் நுண்ணிய சுழற்சியில் ஏற்பட்ட பாதிப்பே ஆட்டிப் படைத்தது. (Serotonin System Disorder). இந்தப் பாதிப்பே மதம் மாறிய ஆறு மாதங்களுக்குப் பிறகு பிரச்னை மீண்டும் எழுவதற்குக் காரணமாயிற்று.

மூளையின் செரடோனின் சிஸ்டம் பாதிக்கப்படுகிறபோது நம்பிக்கையின்மை தோன்றும். அந்த நம்பிக்கையின்மை 'தன்' மீது மட்டுமல்ல. எல்லாவற்றின் மீதும் ஏற்படும்! எதையுமே நம்பாவிட்டால் ஏற்படுவது பயமும், சந்தேகமும்தானே?

பயமும், சந்தேகமும் எப்பொழுதும் மனத்தில் குடிகொண்டிருக்கும்பொழுது மனிதனால் அந்தக் கணத்தில் கண்டிப்பாக வாழ முடியாது.

விளைவு?... Pre-occupation எனப்படும் மனோநிலை. எப்பொழுதும் ஏதுவோ மனத்தில் ஓடிக்கொண்டிருக்க, அவனால் வேலைகளில் கவனம் செலுத்த முடியாது.



அக்ரிமெண்ட் ஃபர்ஸ்ட்;



சிலருக்கு எப்பொழுதும் ஒரு பரபரப்பு, அசதி, காரியத்தைத் தள்ளிப் போடுதல், முடிவெடுக்க முடியாமை, மனக் கலக்கம் போன்றவை இருந்து கொண்டேயிருக்கக் காரணம் செரடோனின் சிஸ்டம் பாதிப்புதான். எப்பொழுதாவது இத்தகைய தருணங்கள் எல்லோருக்குமே ஏற்படுவது உண்டு. ஆனால், பெரும்பாலும் சந்தோஷமும், உற்சாகமும், உந்துதலுடன் செயல்படும் தருணங்களும் ஒரு மனிதருக்கு இருப்பதுதான் இயல்பு!

செரடோனின் பாதிப்பைச் சரிசெய்ய கடந்த 15 ஆண்டுகளில் உலகம் முழுக்க SSRI எனப்படும் மருந்து வகைகள் பரவலாக உபயோகிக்கப்படுகின்றன. ஆனால், இவ்வகை மருந்துகள் மனத்தின் சோர்வையும், பதற்றத்தையும் சில வாரங்களில் குணப்படுத்திவிடுமேயொழிய அதனால் ஏற்படக்கூடிய somatization எனப்படும் உடல் உபாதைகளை முழுமையாகச் சரிசெய்வதில்லை.

ஆகையினால், SSRI வகை மருந்துகளோடு சேர்த்து அறிவியல்பூர்வமான சிகிச்சைக்கான அக்ரிமெண்ட் ஒன்றையும் மனநல மருத்துவர் போட வேண்டும்! அதற்கு therapeutic agreement என்று பெயர்.

இதைச் செய்ய ஒரு மனநல மருத்துவர்தான் வேண்டும் என்பதில்லை. ''மனநல மருத்துவரிடம் செல்ல நான் என்ன பைத்தியமா?'' என பெரும்பாலானவர்கள் தயங்கும் சமூக இழிவு இன்னமும் நீடிப்பதால், பயிற்சி பெற்ற குடும்ப மருத்துவர்களே நல்ல முறையில் உதவ முடியும்.

தெரபியூட்டிக் அக்ரிமெண்டின் முதல்படியாக, இந்நோய் 'கற்பனையல்ல நிஜம்' என்பதை மருத்துவரும் குடும்பத்தாரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் (Acceptance). இவ்வளவு நாட்களாக எல்லா டாக்டர்களும், 'உனக்கு உடம்புல ஒண்ணுமே இல்ல' எனச் சொல்லி வந்ததற்கு நேர்மாறாக முதல்


ட்ரீட்மெண்ட் நெக்ஸ்ட்!

முதலாக ஒரு மருத்துவர், ''ஆம்! உனக்கு உடம்பில் ஏதோ பிரச்னை இருக்கிறது'' என்று கூறியதோடு, உறவினர்களிடமும் பாதிக்கப்பட்டவரின் பிரத்யேகக் கஷ்டத்தைப் புரிந்துகொள்ள வலியுறுத்தும்போது, நம்பிக்கையுணர்ச்சி பிறக்கும்.

அக்ரிமெண்டின் அடுத்தபடியாக,

★ உங்களை நான் ஆறு மாதத்தில் சரிசெய்து தருகிறேன். ஆனால் ஆறு மாதத்துக்கு என்னைத் தவிர வேறு டாக்டரைப் பார்க்கக் கூடாது.

★ நாடித் துடிப்பு, இரத்தக் கொதிப்பு பரிசோதனைகளைக் கூட



வேறு யாரிடமும் செய்யக்கூடாது.

★ எல்லா உபாதைகளுக்கும் சேர்த்து நான் என்ன மருந்துகள் எழுதியிருக்கிறேனோ, அவற்றை மட்டும் சாப்பிட வேண்டும்.

★ மருந்துகளின் பெயர், எப்பொழுது சாப்பிட வேண்டும் எனத் தெரிந்திருக்கக் கூடாது. உறவினர் தான் கொடுக்க வேண்டும்.

(நோயாளிக்கு உதவ யாரும் இல்லாதபட்சத்தில் இந்த விதியைத் தளர்த்த வேண்டியிருக்கும்.)

★ குறிப்பிட்ட தேதிக்கு முன் அடிக்கடி வந்து என்னைப் பார்க்கக் கூடாது...

என்றெல்லாம் வாய் வழி அக்ரிமெண்ட் போட வேண்டும். இப்படியொரு அக்ரிமெண்ட் போட பயிற்சி பெற்ற மருத்துவர்களால் மட்டுமே முடியும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில், இது வியாபாரப் புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்ல. சிகிச்சையளிக்கும், நம்பிக்கையூட்டும் தீர்மானம். பாதிக்கப்பட்ட மனிதருக்கு, ''ஆம்! இந்த டாக்டர் உண்மையிலேயே நம் உபாதைகளைப் புரிந்துகொண்டிருக்கிறார். கண்டிப்பாக நமக்கு உதவும் திறமை இவருக்கு இருக்கிறது'' என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

அக்ரிமெண்டுக்கு ஒப்புக்கொண்டு சிகிச்சைக்குத் தயாராக இருக்கையில், வழக்கம் போல ஹைப்போதலாமஸுக்கு ஒரு சந்தேகம் வரும்...

''சரி! கற்பனையல்ல உண்மை என்றால் எப்படி? ஒருவேளை நம்மைத் திருப்திப்படுத்த இந்த டாக்டர் இப்படிச் சொல்கிறாரோ?'' எனத்

''ஒருவேளை நம்மைத் திருப்திப்படுத்த இந்த டாக்டர் இப்படிச் சொல்கிறாரோ?''

தோன்றும். ஆகையினால், 'உண்மை' என ஏற்றுக்கொள்வதோடல்லாமல் காரணத்தையும் விளக்க வேண்டியது அவசியம்.

''ஒருவருக்கு 'கேஸ் ட்ரபுள்' உண்மை. ஆனால் பிரச்னை குடலில் இல்லை. மூளையின் தூண்டுதல் குடலில் பிரதிபலிக்கிறது. பரீட்சைக்குப் போகும் முன் வயிற்றைக் கலக்குவதைப் போல...'' என அவருக்கு என்ன மாதிரியான பிரச்னையோ அதற்குரிய விளக்கத்தைக் கொடுக்க வேண்டும்.

இவ்வளவு விஷயங்களையும் ஒரே நாளில் சொல்வதில்லை. ஆறு மாதச் சிகிச்சையில், பன்னிரண்டு அமர்வுகளில் நிதானமாக விளக்க வேண்டும். இந்த விளக்கத்துக்கு Re-attribution model என்று பெயர். நோயாளியின் அறிவு, கல்வி, பொருளாதார மற்றும் கலாசார நிலைமைகளுக்கு ஏற்ப இந்த விளக்கம் மாறுபடும்.

(இன்னும் அலசுவோம்)


பேர் சொல்ல பேத்தி!
உறங்காத பிக் பென்!
• கவிதைகள்
• கதைகள்
• பரிசுப் போட்டி
கோகுலம்
பிப்ரவரி 2010 விலை ரூ.8/-
குழந்தைகளின் குதூகலம்!

இரவானால் அவனுக்கு இன்னொரு தலை முளைத்து விடுகிறதாம். மிகவும் மகிழ்ச்சியாக நேற்று நடு இரவில் தொலைபேசியில் செய்தி சொன்னான். இந்தச் செய்தியைக்கூட புதிதாக முளைத்துள்ள தலைவழியாகப் பேசியே சொல்வதாகக் கூறினான்; தினமும் இரவில் ஒருதலை வழியாகத் தூங்குவதாக வும், இன்னொரு தலை வழியாக கனவு காண்பது, கற்பனை செய்வது என உடல் இயங்குவதாகவும். ''அப்படியா.. பத்திரமா பாத்துக்க'' எனச் சொல்லி விட்டு தொலைபேசியைத் தூர எறிந்தேன்.

ஒருநாள் அப்படித்தான் பெட்டிக் கடையில் சிகரெட் பிடிப்பதற்காக தீப்பெட்டி வாங்கினானாம். தீப்பெட்டியைத் திறந்தவுடன் தீக்குச்சிகள் 55 குட்டிப்

கடவுள்கள் நண்பர்கள் வைத்திருக்கவில்லை!

பாம்புகளாக மாறி, நெருப்பைத் துப்பியபடி பாய்ந்து அவன் விரல்களெங்கும் பரவி உடம்புக்குள் நுழைந்து விட்டனவாம். நான் கூட கேட்டேன். 'எப்படி அந்தப் பரபரப்பில் குட்டிகளை எண்ணினாய்?' என்று. பல் துலக்குவது, உண்பது எல்லாம் யதார்த்தமாக உள் ளன. உடைகூட எங்களைப் போலத்தான் அணிந்து கொள்கிறான்.

மஞ்சரியிடம் நான் ஏற்கெனவே சொல்லிவிட் டேன். 'ரொம்ப புரியாம கத கவிதயெல்லாம் எழுதற வங்க எப்போதும் கொஞ்சம் லூசாத்தான் இருப்பாங் களாம். கொஞ்சம் உஷாராவே ஹாண்டில் பண்ணு' என்று. அவன் கொஞ்சம் நல்ல தமிழில் யார் பேசினா லும் இலக்கியவாதி, அறிவாளிங்கன்னு நம்பிடற கேஸு. இப்ப இவளுக்கும் அவனுக்கும் காதல்லாம் இல்ல. ரொம்ப க்ளோஸ் ஃப்ரண்ட்ஷிப் மட்டும்தான்.

ஒருநாள் திடீர்னு, ''நான் படம் டைரக்ட் பண்ணப் போறேன். சினிமால்லாம் எனக்கு ஃபுல்லா தெரிஞ்சு போச்சு. பி.எஃப்.ஏ. படிச்ச என் புது ஃப்ரண்டு எனக்கு எல்லாத் தையும் சொல்லிக் குடுத்துட் டான். அவன் பெரிய ஆளு. அவனால நான் இப்ப ரொம்பப் பெரிய ஆளு. கலக்குறோம் பாரு... ஃபீல்ட இன்னும் ஆறே மாசத்துல''ன்னு நைட் ஒயின் ஷாப் மூடுற வரைக்கும் பேசிட்டு இருந்தான். அவங்க குரூப் எப்பவும் இலக்கியம், சினிமால்லாம் அங்க ஒக்காந்து தான் பேசுவாங்களாம். குறும் படம் எடுக்கறதை எப்ப மறந் தான்னு தெரியலை. பத்து வரு ஷமா எடுக்கப் போறேன்னு



நட்சத்திர நெடுங்கதை - 2



சொல்லிக்கிட்டிருந்தான். இவனுக்குப் பின்னாடி அதைச் சொன்னவங்க எடுத்த பல படங்களுக்கு விமர்சனம் எழுதிக்கிட்டிருக்கான்.

சென்னைல மூலக்கடைல இருந்து பெரம்பூர் போற வழியில கே.கே.ஆர். ரெடிமேட் நிறுவன அலுவலகக் கட்டடம் இருக்கும். அந்தக் கட்டடம் கீழ்ப்பகுதியில் ஒரு சின்ன டீக்கடை. டீக் கடைன்னா உள்ளே போய் நின்னு யாரும் டீக்குடிக்க முடியாது. அவ்வளவு சின்னக் கடை. அந்தக் கடை எங்களுக்கு ரொம்ப ஃபேமஸ். மஞ்சரி கூட அங்க பிளாட்ஃபார்ம் ஓரம் நின்னு டீ குடிச்சிருக்கா. சிங்கிள் டீக்கு அப்புறம் ஆளுக்கு ஒரு பிஸ்கட். அதுக்கு மேல எதுவும் சாப்பிட முடியாது. ஏன்னா வேற எதுவும் இருக்காது. ஆனா, இதுவரைக்கும் டீ மட்டும் 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல குடிச்சிருப்போம்.

அந்த டீக்கடையில நாங்க போய் நின்னதும், மாஸ்டர் டீ கிளாஸ் எடுத்துப் போட ஆரம்பிச்சிடுவாரு. ஆனால், அவன் வந்துட்டான்னு வைச்சிக்குங்க, அவனை மட்டும் தனியா, 'உங்களுக்கு டீ வேணுமா?'ன்னு கேட்பாரு. ஏன்னா எப்ப டீ குடிப்பான், எப்ப வேணான்னுவான், எப்ப பிளாக் டீ கேப்பான், எப்ப பால்

• கவின்கவி •

கேட்பான்னு அவனுக்கே கேக்குற வரைக்கும் கண்டிப்பா தெரியறதுல்ல. திடீர்னு ஒருநாள் எல்லாரும் அவங்களுடைய டேஸ்ட் டீ சொல்லிக்கிட்டிருக்கும்போது திடீர்னு இவன், 'எனக்குப் பால்ல போட்ட டீ ப்ளீஸ்'னு சொல்ல மாஸ்டர் சிரிச்சிட, ஓனர் கடுப்பாகி மாஸ்டரை வேறேதோ விஷயத்துக்குத் திட்ட ஆரம்பிச்சிட்டாரு.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை சந்திப்புல வந்து, ''நான் சீக்கிரம் வசிஷ்டர் வாயால பிரம்மரிஷி பட்டம் வாங்கணும். நம்ம ஊருல வசிஷ்டர் யாருன்னு சீக்கிரம் கண்டுபிடிப்போம்''னான். அப்புறம் அரசு சார் வசிஷ்டர் யாரு, விசுவாமித்ர்ர் யாரு,

கள், யதார்த்த வாழ்வை மண்ணின் தொன்மப் பின்புலங்களோடு பிணைத்துத் தருகிற கதைகள் யாவும் புனைவுலகின் ராஜ இருக்கைகள். ஆனால் மஞ்சரிக்கு அவனைப் பிடித்துப் போனது அவனோட கவிதைகளால்தான். அதுவும் அவனே இவை கவிதைகள் இல்லைன்னு விட்டுட்டுப் போயிட்டவை. அவன் மொழியில் 'படிமக் குறியீட்டுத் துணுக்குகள், ஸ்டேட்மென்டுகள்.' அவற்றை வைச்சுக் கொண்டாடுவா. ''டேய் அவன் கிறுக்கன் இல்லடா. அவன் கம்ப்ளீட் ரைட்டர்டா''ன்னு சொல்லிட்டு, அவனோட 'தொலைபேசி கம்பி மேல் உட்கார்ந்திருக்குதே குயில்...



''தொடர்ந்து குடும்ப ஜோஸ்யர் வீட்ல திருடியிருக்கிறாயே... என்ன காரணம்?''

''அவருக்கு ரொம்ப நல்ல நேரம் நடக்கறதா பீத்திக்கிட்டார்!''

- அம்பை தேவா

பிரம்மரிஷி பட்டம் மொதல்ல ஏன் தரல, பிறகு எப்படி தந்தாருன்னெல்லாம் விளக்கமா சொன்ன பிறகு, ''ஓ... இதுல இவ்வளவு வெவகாரம் இருக்கா?''ன்னு அமைதியானான்.

''சரி, ஏன்டா அவன்தான் கிறுக்கன்னு தெரியுதே. அவனை ஏன் நெருக்கமா வச்சிக்கிறீங்க?'' என்றால், அவன் படைப்புலகம், அவனோட எழுத்து அவ்வளவு பவித்ரமானது. அவனைத் தெரியாம அவனோட படைப்புகளைப் படிக்கிற அவனோட வாசகர்கள் பாக்கியசாலிகள். அவனது பன்முகத்தன்மை வாய்ந்த கவிதை யாருக்குச் சொல்லித் தருதோ தன் பாடலை' என்ற கவிதையைப் புளகாங்கிதத்துடன் சொல்லுவா. அவளுக்குப் பிடிக்காதது, அவன் பீடி பிடிக்கிறது. அப்புறம் எக்கச்சக்கமான சங்கங்கள், அமைப்புகளில் தலைவரா, செயலாளரா பதவியிலிருக்கிறது. 'என்ன டேஸ்ட்டுடா இது?'ன்னு நேர்லயே கேட்டிருக்கா. இறுதியாக, 'அகில உலக வலைதளத்தில் எழுதும் வாலிபர்கள் சங்க'த்தின் தமிழ்நாடு பிரிவின் தலைவராக இருந்தான். இப்ப எல்லாத்தையும் ரிசைன் பண்ணிட்டான்.

இன்னொரு விஷயம் ஞாபகத்துக்கு

வருது. ஒருநாள் இப்படித்தான் பண்ணைத் தமிழ்ச் சங்கக் கூட்டம் முடிந்து செயலாளர் வீட்டுல சாப்பிட்டுட்டு டீக்கடை வந்துட்டோம். எங்களைத் தனியாகக் கூட்டிட்டுப் போய், ''ஒரு முக்கியமான விஷயம். நான் நேத்து நைட்டுல கண்ட கனவுக்குப் பிறகு, (இது ரெண்டு தலை வர்றதுக்கு முன்னாடி) மஞ்சரியை உயிருக்கு உயிரா லவ் பண்ண ஆரம்பிச்சிட்டேன்'' என்றான். எங்களுக்குப் பயங்கர அதிர்ச்சி. இவனாவது லவ் பண்றதாவது! 'இந்தக் கூவ ஆத்துல எப்படிடா குடிநீர் ஊத்து'ன்னு பழனி என் காதுல கிசுகிசுத்தான். ''அதனால, அவ வந்தாள்னா, தயவு செய்து, என்கிட்ட இனிமேல் அவளா பேச வேண்டாம்னு சொல்லிடுங்க. நான் டீப்பா லவ் பண்ணும்போது ரெண்டு பேரும் பேசிக்கிட்டா எனக்கு அது சரியா வராது. ஓகே''ன்னு எங்களை யாரையும் எந்தப் பார்வையும் பார்க்காமல் பீடி எடுத்துப் பத்த வைக்க ஆரம்பிச்சிட்டான். எல்லாரும் அமைதியா ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கிட்டோம். மணி, டீ மாஸ்டரைப் பார்த்து சத்தமா,''மாஸ்டர் மாமே, சூடா சிங்கிள் பீர் போடு... அப்பத்தான் நான் ஒழுங்கா வீடு போய்ச் சேர முடியும். இல்லன்னா பாதி வழில டிரெயின்லருந்து குதிச்சிடுவேன்'' என்றான். அதெல்லாம் அவனை ஒன்னும் செய்யாது. அவனும், ''ஹே, மணி எனக்கும் ஒன்னு சொல்லுடா'' என்றான் சிரித்தபடி. அரசு ஸார்தான், ''நான் அவசரமாப் போகணும், கௌம்பறேன்''னு போயிட்டார். அவன் நைட்டு கண்ட கனவு என்னவென்று சொல்லவில்லை. யாரும் கேட்கவும் இல்லை.

அன்று திங்கட்கிழமை. நானும் அவனும் மட்டும் டீக்கடை சுவரோரமா ரிக்ஷா மேல சாய்ஞ்சு நின்னுக்கிட்டிருந்தோம். வழக்கம் போல ஒரு பீடியை அஞ்சாவது முறையா பத்த வைச்சு புடிச்சிக்கிட்டிருந்தான். யதேச்சையாக அந்தப் பக்கமாக என் வீட்டுக்குப் பக்கத்துத் தெருவில் வசிக்கிற பார்த்திபன் ராஜா சார் வந்துட்டாரு. அவருக்கு எங்க குழுவெல்லாம் ஒன்னும் தெரியாது. நான் கவிதை எழுதுவேன்னு தெரியவே நியாயமில்ல. என்னைப் பார்த்துட்டு சிரிச்சுக்கிட்டே போனவரு, கொஞ்ச தூரம் போய் நின்னு திரும்ப இவனை ஆச்சர்யமாப் பார்த்துட்டு, என்னையும் ஒரு முறை பார்த்துட்டு, கிளம்பி, மறுபடியும் நின்னு அவனைப் பார்த்துட்டுப் போயிட்டாரு. நான் பெரிசா எடுத்துக்கலை. சில நாள் கழிச்சு அவர் வீட்டுப் பக்கமா நான்



விடியல்

நீ உதறிப்
போனாலும்...
உன்
கைகோத்தபடி
வெகுநேரம்
பேசியபடியே
நடக்கிறேன் -
தனிமையில்.
இமைகளின்
இடைவெளிகளை
அதிகமாக்கி கனவுகள்
உதிர்த்தபடி மலரத்
துவங்கியது...
எனக்கான விடியல்!

- ரம்யா



போகும்போது என்னைக் கூப்பிட்டு, ''ஏம்பா ஒன்கூட அன்னிக்கு டீக்கடை கிட்ட நின்னுக்கிட்டிருந்தானே ஒரு பையன், அவன் ஒன் ஃபிரண்டா..?'' என்றார். நான், ''ஆமா சார், இலக்கிய நண்பன்'' என்றேன். ''என்ன பண்றான்?'' என்றவரிடம், ''வேலை தேடிக்கிட்டிருக்கான் சார்'' என்றேன். சற்றுத் தயங்கியவர், ''இல்ல தப்பா எடுத்துக்காதே. அவனை நான் ரெட் ஹில்ஸ் பக்கத்துல ஞாயிறுல சூரியன் கோயில் இருக்குல்ல...'' ''ஆமா சார் அங்கெல்லாம் போவான். ஆன்மிக நாட்டம் உள்ளவன் சார்...'' என்றேன் இடைமறித்து. ''அது இல்லப்பா...'' என்று எதையோ சொல்வதற்குத் தயங்கினார். ''என்ன விஷயம் சார்? சொல்லுங்க'' என்றேன்.

''அந்தக் கோயில் வாசல்ல ஒரு மூலையில உட்கார்ந்துக்கிட்டு பிச்சை எடுத்துக்கிட்டிருந்தாம்பா...'' என்றார். நான் அதிர்ச்சியில் உறைந்துபோனேன். ''நிச்சயமாப்பா... அவன்தான் அது... நான் ஒரு ரூபா போட்டேனே.. நன்றி அய்யான்னு சொன்னானே...'' என்றார்.

இந்த விஷயம் எங்க நண்பர்கள் யாருக்கும் தெரியக்கூடாது என உறுதியாக முடிவெடுத்து எனக்குள் வைத்துக் கொண்டேன். அன்று இரவு முழுக்க எனக்குத் தூக்கம் வரவில்லை. அவனோட கஷ்ட நிலை எல்லோருக்கும் தெரியும். இதுவரைக்கும் டீக்குக் கூட அவன் காசு தந்ததில்லை. நாங்கள் தர விடுவதில்லை. வெளியூர் போவதென்றாலும் நாங்கள்தான் அவனுக்கு டிக்கெட் எடுப்போம். அவன் எதையும் கேட்கமாட்டான். எங்களிடம் இணைந்து கொள்வதில் கூச்சப்படவும் மாட்டான். அதிகம் தேவைப்படும்போது மட்டும் காசு கேட்பான். யாரும் தர மறுத்ததில்லை. திருப்பிக் கேட்டதுமில்லை. அவன் பிச்சை எடுக்கிறான் என்று கேட்டவுடன் என்னால், நடு இரவில் மெல்லக் கசிந்த அழுகையை அடக்க முடியவில்லை.

மறுநாள் மஞ்சரியிடம் அவன் கஷ்டப்படுவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். அவன் பிச்சை எடுப்பதைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. ''அவனுக்கும் ஒரு டைம் வரத்தான் போகுது பார்'' என்று கூறிவிட்டுப் போனாள் அவள்.

இதைக் கேள்விப்பட்டு இரண்டு மாதங்களாகி விட்டன. ஒருநாள்...

(அடுத்த இதழில் முடியும்...)



புத்தகம் பார்த்து பரீட்சை எழுது!

அது ஒரு வித்தியாசமான தேர்வு. பரீட்சைக்கு, புத்தகத்தையும் எடுத்துக் கொண்டுபோய், கேள்விகளுக்குரிய பதிலை புத்தகத்தைப் பார்த்தே எழுதலாம். இந்த ஆண்டு சுமார் ஐயாயிரம் பள்ளிக்கூட மாணவர்களும், 500 சிறைவாசிகளும் சேவாலயா தொண்டு நிறுவனம் நடத்தும் இந்தத் தேர்வை எழுதி இருக்கிறார்கள்.

''புத்தகத்தைப் பார்த்தே பதில் எழுதலாம் என்றால், அப்புறம் எதற்காக பரீட்சை?'' என்ற கேள்வியை சேவாலயாவின் நிறுவனரான முரளீதரன் முன் வைத்தபோது, அவர் சொன்னார்: ''மகாத்மா காந்தி, மகாகவி பாரதி, சுவாமி விவேகானந்தர் ஆகிய மூவரது வாழ்க்கையையும் பற்றி பள்ளி மாணவ மாணவியரும், சிறைவாசிகளும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த திறந்த புத்தகத் தேர்வின் நோக்கம்.

உதாரணமாக காந்தி ஜெயந்திக்குச் சில மாதங்கள் முன்பாக தமிழகத்தில் உள்ள சுமார் ஒன்பதாயிரம் பள்ளிகளுக்கும், ஆறு மத்திய சிறைச்சாலைகளுக்கும் தேர்வு குறித்து சுற்றறிக்கை அனுப்பி வைப்போம். விருப்பமானவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்வார்கள்.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் காந்திஜியின் சத்தியசோதனை புத்தகப் பிரதியையும் கேள்வித்தாளையும் அனுப்பி வைத்துவிடுவோம். சுமார் ஒரு மாத காலம் கழித்து பள்ளி மற்றும் சிறை வளாகங்களிலேயே தேர்வு நடைபெறும். பரீட்சையின்போது, புத்தகத்தைப் பார்த்து விடை எழுதவும் அனுமதி உண்டு. விடைத்தாள்கள் சேவாலயா வந்ததும் எங்கள் ஆசிரியர்கள் அந்த விடைத்தாள்களைத் திருத்துவார்கள். ஒவ்வொரு பிரிவிலும் மிக அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு சேவாலயாவில் நடக்கும் காந்தி ஜெயந்தி விழாவில் பரிசு வழங்கப்படும்.

பாரதியார், சுவாமி விவேகானந்தர் பிறந்த நாட்களின்போது அவர்கள் பற்றிய புத்தகங்களை வழங்கி அவற்றிலிருந்து தேர்வு நடத்துகிறோம். எங்கள் தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் புத்தகத்தில் உள்ள கருத்துகளை ஒட்டிச் சிந்தித்துப் பதில் எழுதும்படியாக இருக்கும்.

இந்தத் திறந்த புத்தகத் தேர்வுக்கு பள்ளிகளிலும், சிறைச்சாலைகளிலும் மிகுந்த வரவேற்பு! எனவே புத்தகம் மற்றும் தேர்வு நடத்தும் செலவு ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு போகிறது. சமூக அக்கறை கொண்ட நிறுவனங்கள் எங்களுடன் இத்திட்டத்தில் கைகோத்துக் கொண்டால், எங்கள் நிதிச் சுமை குறையும்'' என்கிறார் முரளி.

- எஸ்.சந்திரமௌலி



"ஜோக்ஸ் நிறைய எழுதி பெரிய ஜோக் எழுத்தாளரா ஆகலாம்னு நினைக்கிறேன். அதைப்பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?"

"சத்தியமா இனி ஜோக்ஸ் படிக்கிறதையே நிறுத்திடலாம்னு நினைக்கறேன்!"

- தா.முருகேசன்

"வாங்கின கடனைத் தர மாட்டேன்னான்!"

"அப்புறம்?"

"அவன் கிட்டயே அம்பது ரூபா கைமாத்தா வாங்கிட்டு வந்தேன்!"

- பம்மல் நாகராஜன்





கூட்டணி வேண்டாம்டா

"ஒருத்தர் மயக்கம் போட்டு விழுந்துட்டார் முதலாளி..."

"சாப்பிடறதுக்கு முந்தியா? சாப்பிட்ட பிறகா?"

- சீகாழி வி.ரேவதி





"ஐந்நூறு ரூபா சில்லறை இருக்கா?"

"இருக்கு... சில்லறை வேணுமா?"

"ஊஹூம்... இருநூறு ரூபா பணம் கடன் வேணும்."

- கே.ஆனந்தன், தர்மபுரி

"எங்க டாக்டர் இந்த ஆபரேஷன் செய்யறதுல 'புலி' தெரியுமா?"

"அதுக்காக இந்த ஆபரேஷனுக்கு 'ஆபரேஷன் டைகர்'னு பேர் வெச்சு என்னை பயமுறுத்தணுமா?"

- வெ.சீதாராமன்

"பெரியவங்க சம்மதிக்காமல் காதல் தோல்வி அடைஞ்சுட்டா தற்கொலை செய்துக்க உன்னோடு என்னையும் கூட்டு சேரச் சொல்லக்கூடாதுடா செல்லம்!"

- போளூர்
ஆர்.பஞ்சவர்ணம்



செல்லம்!



ஆயிரக்கணக்கானவர்களுள் நானும் ஒருவன். ஆனால் எந்த விதத் தீர்வும் காணாமல், அடுத்த மாநாட்டில் கூடி பிரச்னையைத் தொடர்ந்து பேசுவோம் என்ற அளவிலேயே முடிந்துவிட்டது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

டென்மார்க் அழகான நாடு. சுற்றுச்சூழலைப் போற்றிப் பாதுகாக்கிறார்கள்.

ஜெர்மனியிலிருந்து வந்த ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது அவர் சொன்ன

காஞ்சிபுரத்துக்குள்

அந்நகரத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏராளமானவர்கள் குழுக்களாக நின்று கோஷம் எழுப்பி, தங்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ''எங்கள் ஊரில் இப்படிப்பட்ட போராட்டங்களை, எதிர்ப்புகளை நாங்கள் பார்த்ததே இல்லை'' என்று உள்ளூர் மக்கள் குறிப்பிட்டார்கள். ஆறடிக்கும் அதிகமான உயரமுடைய டென்மார்க் போலீசார் தடியடி எதுவும் நடத்தாமல் போராட்டக்காரர்களை அப்படியே தூக்கிக் கொண்டுபோய் போலீஸ் வேனில் ஏற்றிய காட்சி வெகு சகஜமாக இருந்தது.

எங்கு? கோபன்ஹேகன் நகரில். எதற்கு? புவி வெப்பமயமாதலைத் தடுக்கக் கோரி.

அண்மையில் புவி வெப்பமடைவது குறித்து விவாதிக்க டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன்ஹேகனில் உலக நாடுகள் பல மாநாட்டில் கலந்து கொண்டன. எக்ஸ்னோரா அமைப்பின் நிறுவனர், எம்.பி. நிர்மல் அதில் பங்கெடுத்துக் கொண்டு திரும்பியுள்ளார். அவரது மாநாட்டு அனுபவங்கள் :

உலகளாவிய பிரச்னை பற்றி வெளிப்படையாக விவாதித்து, பொறுப்புணர்வுடன் தீர்வுகள் காணப்படும் என்று நம்பிக்கையுடன் டென்மார்க் சென்ற

விஷயம் என்னை வெட்கப்பட வைத்தது. அந்நாட்டில் ஆண்டுக்கு 120 நாட்கள்தான் நல்ல சூரிய ஒளி வருமாம். அதைக் கொண்டு அவர்கள் தங்களின் மின்சாரத் தேவையில் ஐந்து சதவிகிதம் அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்கிறார்களாம். நம் ஊரில் வருஷம் 365 நாட்களும் வெயில் கொளுத்துகிறது. சூரிய ஒளியை நாம் திறம்படப் பயன்படுத்துவதில்லையே!

மூன்று ஜப்பானியர்கள் கொண்ட ஒரு குழுவைச் சந்தித்தேன். பத்தாயிரம் மக்கள் வசிக்கும் ஒரு தீவு கடலில் மூழ்கிக் கொண்டிருக்கிறதாம். அங்கே வசிக்கும் மக்கள் அனைவரையும் வேறு நாடுகளில் குடியமர்த்திவிட பெரும் முயற்சி

செய்துகொண்டிருக்கிறார்கள் அந்த மூன்று பேரும். அவர்களுடன் பேசிய போது அவர்களின் கண்களில் மின்னியது லட்சியக் கனவு!

ஒருவர் சைக்கிளை மிதித்தபடி, அதிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்து அதைக் கொண்டு ஒரு மின் விசிறியை இயக்கி, அந்தக் காற்றை அனுபவித்தபடியே கையில் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு படித்துக் கொண்டும், இசை கேட்டுக் கொண்டும் இருந்தார். நிலக்கரி போன்ற இயற்கைக் கருவூலங்களை எரித்து வீணாக்காமல், எரிசக்தியைச் சேமியுங்கள் என்பது அவரது கோட்பாடு.

கொரிய நிறுவனம் ஒன்று நீர் நிலைகளில் கடல் பாசி வளர்த்து, வளிமண்டலத்தில் கார்பனின் அளவைக் குறைக்கலாம் என்று டெமோ செய்து காட்டியது.

கடல் வரும்!



வனவளம் பெருமளவு குறைந்து வருவதை கரிசனத்தோடு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள் சூழல் ஆர்வலர்கள் சிலர்.

பூமி வெப்பமாவதால் கடல் மட்டம் உயர்ந்து வருங்காலத்தில் மெரீனா பீச் இல்லாமல் போகும்!

நகரின் பல இடங்களிலும் வீதி நாடகங்கள் மூலம விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் முயற்சியும் நடந்தது.

துருவப் பகுதிகளில் ஏற்பட்டு வரும் பனி உருகுதல் காரணமாக இந்தோனேசியா, மாலத்தீவுகள் போன்ற நூற்றுக்கணக்கான தீவு நாடுகள் கடலில் மூழ்கிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மாநாட்டில் அவர்கள் தங்கள் பயத்தை வெளிப்படுத்திப் பேசினார்கள். ஆனால் அமெரிக்கா போன்ற பெரிய நாடுகள் அதை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை.

கடல் நீர் மட்டம் உயருவதை இந்தியா போன்ற நாடுகள் இலேசாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்தியக் கடற்கரையின் நீளம் 7500 கி.மீ. இந்தியப் பகுதியில் கடல் மட்டம் உயருமானால் மெரீனா இருக்காது. காஞ்சிபுரத்துக்கு கடல் வந்து விடும். கன்னியாகுமரி, நாகப்பட்டினம், ராமநாதபுரம் போன்ற தமிழகக் கரையோர நகரங்கள் கடலுக்குள் சமாதியாகிவிடும். கொல்கத்தா பெரும் அபாயத்தைச் சந்திக்கும். பங்களாதேஷ் கடலுக்குள் மூழ்கிவிடும்.

மொத்தத்தில் உலகம் முழுவதிலும் இயற்கை வளத்தை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தி வீணாக்கிக் கொண்டிருக்கிறோம்; நாம் விழித்துக் கொள்வதற்கான நேரம் வந்துவிட்டது என்பதே உண்மை.

சந்திப்பு:
எஸ்.சந்திரமௌலி

தாரா கணேசன் கவிதைகள்




- காதலைப் போலவே
  காயங்களும் கூட
  உன்னதமானவைதான்.
  நாட்காட்டியின்
  பக்கங்களில் உன்னதங்களின்
  நிழல் படர்ந்திருக்க
  வாசனையற்ற நினைவுகள்
  உதிர்கின்றன அதன் மீது.

- ஒரு மாயையின்
  மிகையுணர்ச்சிக்கு
  மறுபெயர்
  'காதல்'

- எவ்வளவு எளிதாக
  சிலர் பிரியங்களைக்
  கொலை செய்கிறார்கள்.
  குருதி பெருக
  அமர்ந்து நான்
  கொலை செய்த
  உள்ளங்கையை
  முத்தமிட்டுக் கொண்டிருக்கிறேன்

- சில பொய்யான
  பிரியங்கள்
  ஒரு வேட்டை நாயென
  குரல்வளையைக் குதறுகின்றன.
  ஆயினும்
  அன்பை ஒருபோதும்
  நான் தந்திரமென்று
  ஒதுக்க இயலாதவளாகவே
  இருக்கிறேன்



எந்த நேரமும்
அறுந்து விழக்கூடிய
மெல்லிய இழையில்
தொங்கிக்கொண்டிருக்கின்றன
வார்த்தைகள்.
அர்த்தங்கள் உணர்த்தும்
மொழி வசீகரிக்கிறது.
தற்செயலாய் உதிரும் அவை
மாறா வடுவை உண்டாக்கவோ
அன்றி, ஆறாப் பழங்காயங்களை
ஆற்றவோ வலிமையுடையன.
அவற்றில் சில கீறிப் பிளந்து
விளைவிக்கின்றன
புதிய முளைகளை.
வேறு சில
புதைவிக்கின்றன
உயிர்களை.

தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: புதிய பதவி கிட்டும். சுப காரியம் நடக்கும். பிரயாணம் உண்டு. வீடு/மனை வாங்க யோகம் உண்டு.

ராசியான எண்: 1,3; **நிறம்:** மஞ்சள் மற்றும் சிவப்பு; **கல்:** பவளம்; **இஷ்ட தெய்வம்:** சிவன், தட்சிணாமூர்த்தி.

ரிஷபம்: இடமாற்றம் நிகழும். வேலைப்பளு கூடும். பாகப்பிரிவினை நடக்கும். வாக்குவாதம் தவிர்க்கவும். வாகன விபத்து ஜாக்கிரதை.

ராசியான எண்: 5,6; **கல்:** வைரம்; **நிறம்:** பச்சை; **இஷ்ட தெய்வம்:** விஷ்ணு, ஆஞ்சநேயர்

மிதுனம்: வர வேண்டிய நிலுவை வந்து சேரும். வெளிநாடு செல்வீர்கள். மனக் கவலை விலகும். ஆத்மபலம் கூடும்.

ராசியான எண்: 5,6; **நிறம் :** பச்சை, மஞ்சள்; **கல்:** மரகதம்; **இஷ்ட தெய்வம்:** திருப்பதி ஏழுமலையான்

கடகம்: வீடு மாற்றம் நிகழும். உறவினர் ஆதாயம் பெருகும். உதவிகள் தேடி வரும். வெளிநாட்டுப் பயணத்துக்கு வாய்ப்புண்டு. உத்தியோக உயர்வு உண்டு.

ராசியான கல்: 1,3,9; **நிறம்:** மஞ்சள், சிவப்பு; **கல்:** முத்து; **இஷ்ட தெய்வம்:** முருகன்.

சிம்மம்: வீடு, மனை ஆதாயம் உண்டு. வருமானம் பெருகும். குடும்ப உறவு சீராகும். கடன் சுமை அடியோடு விலகும்.

ராசியான எண்: 1,5; **நிறம்:** பச்சை, மஞ்சள்; **கல்:** மாணிக்கம்;

இஷ்ட தெய்வம்: குருபகவான்.

கன்னி: எதிலும் நிதானம் தேவை. கடன் தொல்லை அதிகரிக்கும். சுபகாரியம் நிகழும். வரவேண்டிய பணம் கால தாமதமாகும்.

ராசியான எண்: 5,6; **நிறம்:** பச்சை, சிவப்பு; **கல்:** மரகதம்; **இஷ்ட தெய்வம்:** பெருமாள்.

துலாம்: மகப்பேறு பாக்கியம் கிட்டும். ஊதிய உயர்வு வாய்க்கும். மனை வாங்க சந்தர்ப்பம் வரும். எண்ணியது நிறைவேறும்.

ராசியான எண்: 5,6; **நிறம்:** நீலம், வெள்ளை; **கல்:** வைரம்; **இஷ்ட தெய்வம்:** ஆஞ்சநேயர்.

விருச்சிகம்: பேச்சில் கவனம் தேவை. கூட்டாளி விலகுவர். வீடு மாற்றம் ஏற்படும். யாருக்கும் ஜாமீன் போடாதீர்கள். உடல் நிலையில் கவனம் வேண்டும். திடீர் பணவரவு உண்டு.

ராசியான எண்: 1,3; **நிறம்:** நீலம், மஞ்சள்; **கல்:** பவளம்; **இஷ்டதெய்வம்:** குருபகவான்.

தனுசு: உறவினர்களால் நன்மை வரும். நீண்ட காலத் திட்டம் நிறைவேறும். கடன் தேவை ஏற்படும். பெரிய சிக்கல் தீரும்.

ராசியான எண்: 1,3; **நிறம்:** சிவப்பு; **கல்:** புஷ்பராகம்; **இஷ்ட தெய்வம்:** சிவன்.

மகரம்: பணவசதி பெருகும். கடன் சுமை தீரும். தூர தேசப் பயணம் வாய்க்கும். வழக்கு வெற்றி பெறும். வியாபார விருத்தி கிட்டும்.

ராசியான எண்: 1,5; **நிறம்:** நீலம், பச்சை; **கல்:** நீலம்; **இஷ்ட தெய்வம்:** பெருமாள்.

24.01.10 முதல்

கும்பம்: சுபச்செலவு உண்டு. மனசஞ்சலம் தீரும். வழக்கு முடிவுக்கு வரும். புதிய வாய்ப்பு வரப்போகும் காலமிது. மனை யோகம் ஏற்படும்.

ராசியான எண்: 5,6; **நிறம்:** நீலம், மஞ்சள்; **கல்:** நீலம்; **இஷ்ட தெய்வம்:** மகாவிஷ்ணு.

மீனம்: வீடு மாற்றம் - கடன்சுமை தீருதல் - மனசஞ்சலம் தீருதல் - வேலை உயர்வு- பூர்விகச் சொத்து தேடி வருதல்... எல்லாம் நிகழும்.

ராசியான எண்: 3,9; **நிறம் :** மஞ்சள், வெள்ளை; **கல்:** புஷ்பராகம்; **இஷ்ட தெய்வம்:** பாலாஜி.



நடக்குமென்பார்; நடக்கும்!

30.01.10 வரை

கலக்க வருதுப்பா

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி

திருநெல்வேலி மாவட்ட வாசகர்களே...
படைப்பாளிகளே... சமூகநல ஆர்வலர்களே...

உங்களைத் தேடி வருகிறது கல்கி டீம்...

- உங்க ஊரைப்பத்தி **அல்வா** மாதிரி இனிக்கிற வரலாறு இருக்குமே...
- **கட்டபொம்மன்** மாதிரி கம்பீரமான மாமனிதர்கள் யார்யார் பிறந்திருக்கிறார்கள்?
- **தாமிரபரணி** ஆற்றைப் போல ஈரமான டூரிஸ்ட் ஸ்பாட் எது?
- **குற்றாலச்** சாரலைப் போல குளுகுளு செய்திகள் கொடுங்க...
- **அரிவாள்** மாதிரி பயமுறுத்தும் பிரச்னைகள் என்னென்ன?
- **பாளையங்கோட்டை** ஜெயில் மாதிரி பாரம்பரியச் செய்திகள் இருக்குமே...
- **நவ திருப்பதி** மாதிரி ஆன்மிகத் தலங்களை எழுதலாமே...
- **டி.கே.சி. வட்டத்தொட்டி** மாதிரி என்னென்ன இலக்கிய நிகழ்வுகள் நடக்குது?

வாசகர்களே...

எழுதி அனுப்புங்க... உங்கள் தகவல்கள்... இதழ்களுக்கு ஆதாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கே!



ஆமாம்! உங்கள் திருநெல்வேலி மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்). பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- திருநெல்வேலி மாவட்டத்தின்.... பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார, சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ் என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

வர்றோம்!

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 15.02.2010

கலக்க வருதுப்பா கல்கி
திருநெல்வேலி மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

கிட்டத்தட்ட மூன்று மாதப் பிரிவுக்குப் பின், ஒரு வார விடுப்பில் என் வீட்டுக்கு வந்தேன்.

படிப்பு முடிந்ததும், உடனே வேலை கிடைத்துவிட்டது. புதிதாக வேலையில் சேர்ந்ததால், விடுப்பு எடுக்க முடியவில்லை.

அம்மாவையும், அப்பாவையும் பார்த்ததும், அழுகையே வந்து விட்டது. அவர்கள் கண்களிலும் கண்ணீர். முதன் முதலாய் மிக நீண்ட பிரிவு என்பதே காரணம்.

''என்னடா இப்படி இளைச்சுட்டே?'' என்று உருகினாள் அம்மா. முதுகைத் தடவிக் கொடுத்தார் அப்பா.

எனக்குப் பிடித்த வெண்டைக்காய் மோர்க்குழம்பும், பீன்ஸ் பருப்புசிலியும் டைனிங் டேபிளில் கமகமத்தன.

சாப்பிடும்போது அப்பா சொன்னார்.

''நாளைக்கு வேணும்னா மல்லிக்குடி கிராமத்துக்குப் போயிட்டு வரலாமா? உனக்கு வேலை கிடைச்சதும், அம்மனுக்கு அர்ச்சனை செய்யறதாய் வேண்டுதல்'' என்று அப்பா சொன்னதும், எனக்குள் அந்தக் கிராமம் படமாய் விரிந்தது.

எங்கள் ஊரிலிருந்து மூன்று மணி நேரப் பயணத்திலிருந்தது கிராமம்.

அப்பா பிறந்து வளர்ந்த ஊர். 'மல்லிகைக்குடில்' என்ற அழகான பெயர் மருவி மல்லிக்குடி ஆகிவிட்டது.

நாங்கள் கிராமதேவதை கோயிலுக்கென்று முன்பெல்லாம் மாதமிருமுறையாவது செல்வோம்.

நாங்கள் அங்கு போகும் போதெல்லாம் நடராஜன் மாமா வீட்டில்தான் தங்குவோம்.

பள்ளியில் படிக்கிற காலத்தில் கிராமத்துக்குப் போவதென்றால் கனகுஷியாய் கிளம்பி விடுவேன். 'ஹோம்வொர்க்' அரக்கனிடமிருந்து தப்பிக்கலாம் என்ற உற்சாகம் ஒருபுறம், ரேணுகாவுடன் விளையாடப் போகும் மகிழ்ச்சி மறுபுறமுமாய் என் உடம்பே குதித்து ஆடும்.

ரேணுகா! இப்போது எப்படி இருப்பாள்? கிட்டத்தட்ட மூன்று வருடம் முன்பு பார்த்தது. அவளும் கல்லூரிப் படிப்பு முடித்திருப்பாள். பி.எஸ்ஸி., பிஸிக்ஸ் எடுத்துப் படிப்பதாக நடராஜ மாமா மூலம் செய்தி வந்தது.



தோழியின்

சாயலில்...

கிருஷ்ணா

ரேணுகா என்றதுமே எனக்கு அவளது துணிச்சல்தான் நினைவுக்கு வரும். நான் டவுனில் வளர்ந்த சவலைக் குழந்தை என்றால், அவள் கிராமத்தில் வளர்ந்த முரட்டுக் குதிரை. சிறு வயதில் இருவரும் சேர்ந்துதான் கிராமத்தைச் சுற்றி வருவோம். சாயந்திரம் ஆகிவிட்டால் எனக்கு மாமா வீடு பிடிக்காது. முக்கியமாய் இருட்டாய்க் கிடக்கும் கொல்லைப்புறம் கருப்பசாமியாய் பயமுறுத்தும். அதனால், கொல்லைப் பக்கம் போகப் பயந்து, படுத்திருந்த பாயிலேயே நடு இரவில் 'ஒன் பாத்ரூம்' போன கதையெல்லாம் உண்டு.

''டேய் திவாகர், நான் உன்கூட வர்றேன்'' என்று ரேணுகா துணைக்கு வந்தால் மட்டுமே, தைரியம் வரும்.

நல்ல தண்ணீருக்கு என்று வீட்டின் அருகில் குளம் உண்டு. ஊர்க் கட்டுப்பாடு என்பதால் அந்த சிவன் கோயில் குளத்தில் யாரும் கை, காலைக் கூட சுத்தம் செய்து கொள்ள மாட்டார்கள்.

ஒருமுறை நானும் மண் பானையைத் தூக்கிக் கொண்டு, ரேணுகாவுடன் தண்ணீர் எடுத்துவர அந்தக் குளத்துக்குப் போனேன்.

ஆழத்தில் இறங்க பயந்து கொண்டு, முதல் படியிலிருந்தே, மண் பானையில் தண்ணீரை எடுக்க முயல, அது அடுத்த படியில் பட்டு, உடைந்து போனது.



''அச்சச்சோ, புதுப் பானையை உடைச்சுட்டியே, அம்மா திட்டு வாங்களே. சரி, நான் உடைச்சதா சொல்லிடறேன்'' என்று பழியைத் தான் ஏற்றுக்கொண்டு, எப்படி தண்ணீரை 'மொள்ள' வேண்டும் என்று கற்றுக் கொடுத்தாள்.

சிவன் கோயில் ராஜகோபுரத்தில் ஏற பக்கவாட்டில் வழி உண்டு.

கோபுரத்தின் உள்பக்கமாய் ஓடும் படிகளில் அழைத்துச் செல்வாள். ஒவ்வொரு மாடத்திலும் புறாவின் ஓசையும், வௌவால் நாற்றமும் வயிற்றைப் புரட்டும். ஐந்தாவது நிலையில் சத்தம் போடாமல் வரச் சொல்வாள். பெரிய்ய்ய தேன்கூடு இருக்கும். மொசமொசவென இருக்கும் தேன் கூட்டை பயமும், வியப்புமாகப் பார்ப்பேன். கோபுரத்தின் கடைசி நிலையிலிருந்து, கலசங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்வோம். அந்த உயரத்திலிருந்து

பார்த்தால் ஊர் சிறியதாகத் தெரியும். சுற்றிவர பச்சைப் பசேலென்று மரக் கூட்டங்களால் சூழப்பட்ட குளிர்ச்சியான மல்லிக்குடி.

வயல்களுக்கு நடுவே இருக்கும் கிணற்றுக்குக் கூட்டிச் செல்வாள். அதன் உள்ளே ஓடும் படிகளில் அனாயாசமாய் தாவிக் குதித்து இறங்கி, கீழ்க் கடைசிப் படியில் அமர்ந்தபடி என்னை அழைப்பாள்.

பயந்து, பயந்து இறங்குவேன். இருவரும் காலைத் தண்ணீருக்குள் தொங்கவிட்டுக் கதை பேசுவோம். தண்ணீர்ப் பாம்பு ஒன்று ஒரு முறை என் காலைச் சுற்றிக் கொள்ள, மரண பீதியில் அலறினேன். நிதானமாய், ஒரு கையால் பாம்பின் கழுத்தைப் பிடித்து, மறு கையால் என் காலைச் சுற்றியிருந்த பாம்பை விலக்கித் தூக்கிப் போட்டாள்.



''ப்ச், இது தண்ணீர்ப் பாம்புதான் திவாகர்'' என்று நடுங்கிய என் உடம்பை அணைத்தபடி ஆசுவாசப்படுத்தினாள்.

கிணற்றை விட்டு மேலே வந்தவுடன், அவள் கன்னத்தில் பசக்கென முத்தம் கொடுத்தேன், நன்றியுடன்.

என்னைக் கண் விரியப் பார்த்தாள்.

''நீ பக்கத்திலே இருந்தால் நான் பயப்படவே மாட்டேன் ரேணுகா. நாம எப்பவுமே சேர்ந்தே இருப்போமா?'' என்று கேட்டேன்.

தலையாட்டியபடி கேட்டாள்.

''லீவு முடிஞ்சதும் ஸ்கூலுக்குப் போயிடுவியே.''

இருவரும் விழித்தோம்.

''உங்க அம்மா, அப்பாவும் சேர்ந்தே இருக்காங்க. எங்க அம்மா, அப்பாவும் சேர்ந்தே இருக்காங்க. எப்படி? கல்யாணம் பண்ணிக்கிட்டதுனாலேதானே? நாமும் கல்யாணம் பண்ணிக்கலாமா?'' என்று கேட்டேன்.

சிரித்தாள்.

''சின்னப் பசங்க நாம எப்படி கல்யாணம் பண்ணிக்க முடியும்? அதோடு, நீ சிகப்பு. நான் கறுப்பு. எப்படி ஒத்துப் பாங்க?'' என்று கேட்டாள்.

இந்தச் சம்பவம் நினைவுக்கு வர நான் சிரித்திருக்க வேண்டும்.

''என்னடா நீயே சிரிக்கறே?'' என்று அம்மா கேட்டாள்.

மல்லிக்குடிக்கு பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தோம், நானும் என் பெற்றோரும்.

மாமா வீட்டில் தடபுடல் வரவேற்பு. நீண்ட நாட்களுக்குப் பின் நாங்கள் சென்றதால், ஆசையுடன் வரவேற்றார்கள்.

''இப்பவாவது வழி தெரிஞ்சதே'' என்று மாமி ஆதங்கப்பட்டாள்.

ரேணுகா நன்கு வளர்ந்திருந்தாள். புடை

''நான் சொன்னேன்ல... தலைவர் குழந்தை மாதிரினு...''

''இருக்கட்டுமே, அதுக்காக குழந்தைக்குப் பேர் வைக்கச் சொன்னா 'டோரா புஜ்ஜி'னா வைக்கிறது?''

- சொக்கம்பட்டி தேவதாசன்

வையில் பெரிய மனுஷியாய்த் தெரிந்தாள்.

"என்ன திவாகர், புது வேலை எப்படி இருக்கு? கூட யார், யார் வேலை செய்ய றாங்க? லட்டு மாதிரி பொண்ணுங்க இருக் காங்களா ஆபீசிலே?" என்று என்னைக் கலாய்த்தாள்.

சிறு வயதில் பார்த்த அதே நேர் கொண்ட பார்வை, கலகலப்பான பேச்சு, தெளிவான செயல் என்று வளைய வந்த வளைக் கவனித்தபடி இருந்தேன்.

நடராஜ மாமாதான் ஆரம்பித்தார்.

"பையனோ தனியா வெளியூரில் வேலை பார்க்கிறான். ஆளும் சிகப்பாய், அழகாய் ராஜா மாதிரி இருக்கான். அவனுக்கேத்த மாதிரி சிவப்பாய், லட்சணமாய் பெண்ணைப் பார்த்து, கல்யாணம் பண்ணிட வேண்டியது தானே"

பகல் வானத்துல வர்ற சூரியனை யாரு நிமிர்ந்து பார்க்க விரும்புவாங்க?

நான் கையெடுத்துக் கும்பிட்டேன்.

"மாமா, இப்பத்தான் படிப்பு கவலை முடிஞ்சு, ரிலாக்ஸ் பண்ணிக்கறேன். ஏன் இந்த தண்டனை உடனே இவ்வளவு சீக்கிரம்?"

அம்மாதான் சீரியஸாய்ப் பேசினாள்.

"நீங்க சொல்றதும் சரிதான் அண்ணா. அவன் ஊரிலேயிருந்து, திரும்பி வந்தப்ப கொத்தவரங்காய் மாதிரி இருந்தான். ஜாதகக் கட்டை எடுத்துட வேண்டியதுதான்" என்றாள்.

நான் அங்கிருந்து நழுவி வாசலுக்கு வந்தேன். கொஞ்ச நேரத்தில் காப்பி டம்ளருடன் ரேணுகா அங்கு வந்தாள்.

"என்ன கல்யாணப் பேச்சு வந்ததும், கனாக் காண தனியா வந்துட்டியா?" என்றாள் கேலியாய். நான் புன்னகைத்தேன்.

"பெரியவங்க பேசறது இருக்கட்டும். உனக்குன்னு ஆசை இருக்குமே! உனக்கு மனைவியா வரப் போறவளுக்கு என்ன தகுதிகள் இருக்கணும்னு எதிர்பார்க்கறே?" என்று கேட்டாள்.

எதிரே தெரிந்த சிவன் கோயில் கோபுரத்தைப் பார்த்தபடி சொன்னேன்.

"என் சிறு வயது தோழியாய் இருக்கணும். என்னை அந்தக் கோபுர உச்சிக்குக் கூட்டிட்டுப் போயிருக்கணும். கிணற்றுக்குள்ளே, காலைச் சுற்றின பாம்பிடமிருந்து என்னைக் காப்பாற்றி இருக்கணும்" என்றேன் மெதுவாய்.

என்னைக் கண்கள் விரியப் பார்த்தாள். பின்பு மெல்ல முகம் திருப்பிக் கொண்டாள்; வெட்கத்தால் அல்ல. அவளின் மனத்தடை புரிந்தது.


"பகல் வானத்துல வர்ற சூரியனை யாரு நிமிர்ந்து பார்க்க விரும்புவாங்க? ராத்திரி வானத்துல நிலா பார்க்கத்தான் ஆசைப் படுவாங்க. என்ன புரியுதா?" அவள் முகத்தைத் திருப்பி, கண்களைப் பார்த்துச் சொன்னேன். இப்போதும் முகம் திருப்பிக் கொண்டாள்; இது வெட்கம்தான்!

மெதுவாகக் குரல் எழும்பியது.

"நீ ஆசைப்படறது இருக்கட்டும். பெரியவங்க ஒத்துப்பாங்களா?"

"கொஞ்சம் முன்னாடி, 'பெரியவங்க பேசறது இருக்கட்டும். உன் ஆசை என்ன?'ன்னு என்னைக் கேட்டே... இப்போ நீ மாத்திப் பேசலையா...? அது மாதிரி அவங்களையும் என்னால மாத்த முடியும்."

என் பால்ய காலத் தோழியின் அதே சாயலில் புன்னகைத்தாள் ரேணு. ●



ஓவிய வீணை!

''**வீ**ணை வாசிக்கறது எனக்கு ரொம்பப் பிடிக்கும். நான் ரொம்ப வாசிக்கிற நேசிக்கிற வீணையில ஓவியம் வரையறது இன்னும் ரொம்பப் பிடிக்கும்!'' எனச் சொல்லி விட்டுப் பேச்சை நிறுத்துகிறார் சங்கீத ஆசிரியை சுஜாதா ஈனாக்.

''என்ன... நீங்க ஓவியத்துலேயும் கில்லாடியா..?'' என்றால், சிரிக்கிறார்.

''நான் இல்லேங்க... என் அப்பா ராமானுஜம். அவர் தஞ்சாவூர் ஓவியங்கள் வரைவதில் வல்லவர். பிரபலமானவர். அவரிடம் என் ஆசையைச் சொன்னேன். பெரிய சுரைக்காய் தேடிப் பிடித்து வாங்கி, அதனைப் பக்குவம் செய்தார். மிகவும் சிரத்தை எடுத்து அதன் மீது தஞ்சாவூர்ப் பாணி ஓவியம் வரைந்து தந்தார் என் மடி மேல் தற்போது அந்த ஓவிய வீணை!'' என்கிறார்.

''சாதாரணமாக சில வீணைகளில் ஓவியங்கள் இருக்கும். அவை நேரடியாக வரையப்பட்ட ஓவியங்கள் அல்ல. பலரும் சரஸ்வதி ஓவியம் அச்சான படத்தை அதன் மீது ஒட்ட வைத்துள்ளனர். என் மகள் வந்து என்னிடம் சொன்ன பிறகு, நாமே வரைந்து தந்தால் என்ன என்கிற எண்ணம் வந்தது. வீணையில் மூன்று பாகங்கள் உண்டு. குடம், மேளம் கட்டும் இடம், யாழி முகம் என. இதில் யாழி முகத்தின் அருகில் சுரைக்காய் வடிவில் ஒரு பகுதி இருக்கும். இது வீணைக்கு அழகான தோற்றத்தைத் தரும்; மடியில் வைத்து வாசிப்பதற்கு உதவியாகவும் இருக்கும். அந்தச் சுரை வடிவத்தின் மீது தஞ்சாவூர் பாணி ஓவியம் வரையத் தொடங்கினேன்!'' என்கிறார் ஸ்ரீரங்கம் ராமானுஜம்.

நாம் பார்க்கும் இதர வீணைகளில்



● சுஜாதா

இருப்பது ஓவியத் தாள்கள். இங்கே நாம் காண்பது, வீணை மீது நேரடியாக வரையப்பட்ட தஞ்சாவூர் ஓவியம். ''இது புதுமையானது மட்டுமல்ல. முதல் முயற்சியும் கூட. பைபர் மீது காடா துணி சுற்றப்பட்டு பசையால் ஒட்ட வைத்து அதன் மீது பல வடிவங்களில் ஓவியங்கள் வரைந்துள்ளேன். ஓவியத்தில் கண்ணாடியிலான வைரங்கள் மற்றும் இருபத்து நாலு கேரட் தங்க ரேக்குகள் பயன்படுத்தி உருவானது சரஸ்வதி ஓவியம்! அன்னப்பறவை மீது சுரஸ்வதி அமர்ந்திருக்கிறாள், கரங்களில் வீணை ஏந்தி! இப்படி வரையப்பட்ட வீணையின் பாகத்தை திருவையாறு தியாகராஜர் ஆராதனை விழாவில் வீணைக் கலைஞர்களிடம் காண்பித்தேன். பலரும் இதனைப் பாராட்டினர். வீணையில் தஞ்சாவூர் பாணி ஓவியங்கள் வரையப்படுவது இதுவே முதல் முறை!'' எனக் கூறுகிறார். குரலில் பெருமிதம்!

''பொதுவா ஒரு வீணை, சுமார் பன்னிரண்டு அல்லது பதின்மூன்றாயிரம் ரூபாய்க்குக் கிடைக்கும். இதில் தஞ்சாவூர் பாணி ஓவியங்கள் வரைய, கூடுதலாக எழெட்டு ஆயிரம் ரூபாய் ஆகிறது. சரஸ்வதியின் அடையாளங்களில் ஒன்று வீணை. மிக முக்கியமானது. அதில் சரஸ்வதியை தஞ்சாவூர் பாணி ஓவியமாக வரைந்திருப்பது தனிச் சிறப்பு!'' எனச் சொல்லும் சுஜாதா சனாக், திருச்சி சீதாலெட்சுமி ராமசாமி கல்லூரியில் சங்கீதத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

செய்தி, சித்திரம்:

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



போர்க்களம்

இந்திய தேசிய நெடுஞ்சாலை எண் - ஒன்று என்ற கௌரவத்தைப் பெற்றிருக்கும் பரபரப்பான டெல்லி - பதான்கோட் ஆறு வழிச்சாலையில் சென்று கொண்டிருக்கும் நம்மைச் சட்டென்று கவரும் அந்த பிரமாண்டமான நுழைவாயிலும் அதன் மீதிருக்கும் கீதோபதேசச் சிற்பமும் நாம் பார்க்கப் போய்க் கொண்டிருக்கும் 'குருக்ஷேத்திரா' நகர் அதுதான் என்பதைச் சொல்கின்றன. பல - பஞ்சாப் - ஹரியானா கிராமங்களைப் போல் குருக்ஷேத்திராவும் மெல்ல தனது கிராம முகத்தை இழந்து நகரமாகிக் கொண்டிருப்பது தெரிகிறது.

''புனித கீதை பிறந்த இடத்தைப் பார்க்க எப்படிப் போக வேண்டும்?'' என்ற நமது கேள்விக்கு, ''அதற்கு பத்து கி.மீ போக வேண்டும் - எங்களூரில் அதைத் தவிரவும் பார்க்க வேண்டிய பல முக்கிய இடங்களிருக்கின்றன. பார்த்துவிட்டு அங்கே போங்களேன்''- டைட்டான ஜீன்ஸும், முழுக்கை சட்டையும் அணிந்திருந்த அந்த பஞ்சாபிப் பெண் சொன்னபோது முகத்தில் சொந்த மண்ணின் பெருமை தெரிந்தது.

அவர் தந்த பட்டியலில் முதலிடம், இந்தத் தீர்த்தம். 1800 அடி நீளம் 1800 அடி அகல பரப்பில் விரிந்திருக்கும் இந்த பிரம்மஸரோவரைப் பார்த்து பிரமித்து நிற்கிறோம். சரியாகத்தான் பெயரிட்டிருக்கிறார்கள். (ஸரோவர் என்றால் கடல்.) நீண்ட



ரமணன்

படித்துறைகள். அகன்ற பாதை. உடை மாற்றிக்கொள்ள வசதியாக கட்டப்பட்ட மண்டபங்களால் இணைக்கப்பட்ட சுற்றுப் புறப் பிராகாரம். அதன் மேல்தளத்துக்குப் போகப் படிகள். அங்கே வசதியாக உட்கார்ந்து இந்த அழகான அமைதிக்கடலை ரசிக்க ஆசனங்கள். எல்லாவற்றுக்கும் மேல் பளிச்சென்ற பராமரிப்பு. ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவுமிருக்கிறது. கிரகண காலங்களில் இங்கு நீராட பல லட்சம் பக்தர்கள் வருகிறார்கள் என்ற தவகல் பிரமாண்டத்துக்கான காரணத்தைப் புரிய வைத்தது. தீர்த்தத்தின் நடுவே ஒரு சிவன் கோயில். தீவாக இருந்த இதற்கு இப்போது எளிதில் போக ஒரு சின்ன பாலம். ஏரியில் நீர் மட்டம் ஏறினாலும் உள்ளே நீர் புக முடியாத வகையில் அமைக்கப்பட்டிருக்கும் அழகிய அந்த சின்னஞ்சிறு கோயில் பெரிய நீர்ப் பரப்பில் மிதக்கும் சின்னப் படகைப் போலிருக்கிறது.

மற்றொரு ஆச்சரியம், அங்கே கம்பீரமாக நிற்கும் பிரமாண்டமான அந்த வெண்கலச் சிற்பம். குழம்பிய முகத்துடன் நிற்கும் அர்ஜுனன். வலது கரத்தில் குதிரைகளின் கடிவாளங்களை லாகவமாகப் பிடித்தபடி முகத்தைச் சற்றே திருப்பி அவருடன் பேசும் கண்ணன், சீறிப் பாயத் தயாராக இருக்கும் குதிரைகள் என்று ஒவ்வொரு அங்குலத்திலும் உயிரோட்டத்தைக் காட்டும் அந்த பிரமாண்டமான கீதா உபதேசக் காட்சி சிற்பத்தின் செய்நேர்த்தி நம்மை அந்த இடத்திலேயே கட்டிப் போடுகிறது.

நிறுவிய காலகட்டத்தில் நவீனமாகயிருந்திருக்கும், நகரும் பொம்மைகளாலான மஹாபாரத காட்சிகள் இன்று பொலிவிழந்தும் செயலிழந்தும் இருக்கின்றன.

இவ்வளவு பெரிய அறக்கட்டளை இதையேன் கவனிக்காமல் விட்டிருக்கிறது என்று எண்ணியபடியே, நகரின் நடுவேயிருக்கும் அந்த உயர



போகலாமா?



குருக்ஷேத்திரம்

மான பெரிய சிலிண்டர் வடிவ கட்டடத்திலிருக்கும் ஸயன்ஸ் சென்ட்டருக்குள் நுழைகிறோம். முதல் தளத்தின் வட்டச் சுவர் முழுவதிலும் தரையிலிருந்து மேற்கூரைவரை (35 அடி உயரம்) பாரதப் போரின் காட்சிகள் முப்பரிமாண சித்திரங்களாக நிற்கின்றன. ஒலியமைப்பு, தொலைவில் ஒலிக்கும் மரண ஓலங்கள், மெல்ல கேட்கும் கீதை, சுற்றியிருக்கும் அந்த 18 நாள் போர்க்காட்சிகள் எல்லாம் நடுவில் நிற்கும் நமக்கு ஒரு போர்க்களத்திலிருக்கும் உணர்வை எழுப்புகின்றன. அந்தச் சூழ்நிலை தரும் மன அழுத்தம் அந்த தரமான ஓவியங்களை ரசிக்க முடியாமல் செய்கிறது.

குருக்ஷேத்திரத்துக்கு வந்த சீன யாத்திரிகர் யுவான் சுவாங் தமது குறிப்பில் இந்த நகரைப் புகழ்ந்திருப்பதையும், இந்த இடம் முகமதியர், சீக்கியர், புத்த மதத்தினருக்கும் முக்கியமான வழிபாட்டுத்தலம், கௌதம புத்தர், குரு கோவிந்தசிங் வந்திருக்கிறார்கள் போன்ற பல வியப்பான தகவல்களையும் அறிந்து கொள்கிறோம்.

புனிதமான கீதை பிறந்த இடத்தைப் பார்க்க பயணத்தைத் தொடரும் வழியில் நாம் நிற்கும் இந்த பத்திரகாளி கோயில் தான் மிக மிகப் பழைமையான சக்திபீடம். கிருஷ்ணரே வழிபட்டதாக அறியப்பட்டது. வேண்டிக்கொண்டபடி போரில் வெற்றி அருளியதால் பாண்டவர்கள் தங்கள் குதிரைகளையே அன்னைக்குக் காணிக்கையாகக் கொடுத்திருக்கிறார்கள். இன்றும் வேண்டுதல் பலித்தால் பக்தர்கள் சிறிய மண்

கீதையின் முதல் ஸ்லோகத்தின் முதல் வரியில் சொல்லப்பட்டிருக்கும் தர்மக்ஷேத்திரம் இதுதான்!



சக்தி பீடம்

குதிரை பொம்மையைக் காணிக்கையாகப் படைக்கிறார்கள்.

அறுவடை முடிந்து காய்ந்து கிடக்கும் நிலங்களையும்



✱ ஸயன்ஸ் சென்ட்டர்



✱ கீதை காலத்து ஆலமரம்



✱ மகாபாரத காட்சி சிலைகள்...

குடிசை வடிவில் அடுக்கப்பட்டிருக்கும் வைக்கோல் போர்களையும் நகர நாகரிகத்தின் நிழல்படாத சில அசலான ஹரியானா கிராமங்களையும் கடந்து நாம் வந்திருக்குமிடம் ஜ்யோதிஷர்.

மாங்கனி வடிவத்தில் பச்சை வண்ணத்தில் நீர் நிறைந்த ஒரு குளம். ஒரு புறத்தில் அல்லி பூத்திருக்கிறது. அதன் ஒரு கரையில் வழவழப்பான தரையுடன் பெரிய அரை வட்ட மேடை, அகலமான படிகள், நடுவே வலையிட்டு மூடிய ஒரு ஆலமரம் (குளத்தில் அதன் இலைகள் விழாமலிருக்கவும் பறவைகள் வந்து அமைதியைக் குலைத்து விடாமலிருக்கவும்) மரத்தைச் சுற்றி வெண்சலவைக்கல் மேடை. அதன் மீது கண்ணாடி கதவிடப்பட்ட சிறு மண்டபம். உள்ளே சலவைக்கல்லில் கீதா உபதேச காட்சி, மலர்கள் பரப்பிய தரையில் எரியும் ஒற்றை அகல், மரத்தின் அடியில் நடப்பட்டிருக்கும் சிறு கல், கொண்டு வந்த சிறு கீதைப்புத்தகங்களை மரத்தின் அடியில் வைத்து பூஜிப்பவர்கள், சற்று தொலைவில் அமர்ந்து கீதை வாசிப்பவர்கள், தியானம் செய்பவர்கள், சன்னமான ஒலியில் ஸ்லோகம் என அழகான அந்த இடம் ஒரு தெய்வ சன்னிதியைப்போல இருக்கிறது. கீதையின் முதல் ஸ்லோகத்தின் முதல் வரியில் சொல்லப்பட்டிருக்கும் தர்மக்ஷேத்திரம் இதுதான். இந்தக் குளமும், ஆலமரமும்தான் நடந்த பாரதப் போருக்கும், பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு கீதையை உபதேசித்ததற்குமான சாட்சி. அந்த மரத்தின் விழுதுகளில் வழித்தோன்றலாக எழும் மரங்களை பல ஆயிரமாண்டுகளாக போஷித்துப் பாதுகாத்து வருகிறார்கள். தொடர்ந்து பராமரிக்கப்படும் குளத்தையும் மரத்தையும் தரிசிப்பதைப் புண்ணியமாகக் கருதி வருபவர்களுக்கு, அருகிலேயே கீதை பிறந்த கதையை தினசரி இரவில் ஒலி, ஒளிக்காட்சியாகக் காட்டுகிறார்கள்.


ஒருபுறம் ஆராய்ச்சியாளர்கள் பாரதப்போர் நிகழ்ந்த காலத்தை நிரூபிக்கச் சான்றுகளைத் தேடி சர்ச்சை செய்து கொண்டிருப்பதையும், மறுபுறம் காலம் காலமாக செவிவழிச் செய்தியாகச் சொல்லப்பட்ட இந்த சாட்சிகளே தெய்வமாக மதிக்கப்படும் வினோதத்தையும் எண்ணிக்கொண்டே திரும்புகிறோம். ''கீதை எப்போது சொல்லப்பட்டது என்பது நமக்கு முக்கியமில்லை. அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதுதான் முக்கியம்'' என்று விவேகானந்தர் எழுதியிருப்பது நினைவுக்கு வந்தது. எவ்வளவு அற்புதமான வாசகங்கள்!

"அமெரிக்காவில் ஒரு கலை நிகழ்ச்சியில் என்னைப் பார்த்த அபிஷேக் (கோலங்கள்) 'நான் ஒரு படம் டைரக்ட் பண்ணப் போறேன். அதுக்கு நீங்கதான் ஹீரோன்'னுட்டார். எனக்கு ஷாக்காயிடுச்சு. சரி நடிச்சுதான் பார்ப்போமேன்னு ஓ.கே சொல்லிட்டேன்'' என்கிறார் சாக்லேட் பாய் ஷான்குமார்.

''நான் ஸ்டேட்ஸில் சாஃப்ட்வேர் என்ஜினியரா இருந்தாலும் பிறந்து வளர்ந்தது சென்னையில்தான். இங்கே பி.இ. படிச்சேன். யு.எஸ்.ஸில் எம்.பி.ஏ.வும் டாக்ட ரேட்டும் முடிச்சேன். நடிக்க ஒத்துக்கிட்ட பிறகு ஹாலிவுட் யுனிவர்சிட்டியில் ஆக்டிங் கோர்ஸ் சேர்ந்து, நடிப்போட நுணுக்கங்களைக் கத்துக்கிட்டேன்.

புக்கர் பரிசு பெற்ற எழுத்தாளர்நான் அபிஷேக் இயக்கும் 'கதை' படத்தின் ஹீரோ பாத்திரம். குடும்ப வன்முறைதான் கதையின் முக்கிய கரு. பெண்கள் மீது தொடுக்கப்படும் வன்முறையை அழுத்தமாகச் சொல்லப் போகிறது 'கதை'.

கதைக்குப் பிறகு கொலைத் தொழில் (பயப்படாதீங்க... படத்தோட பேர்தாங்க.) பண்றேன்! படத்தின் டைட்டில்தான் வன்முறையா இருக்கே தவிர அன்பு, அஹிம்சை பற்றிப் பேசக்கூடிய படம்தான் கொலைத் தொழில். இந்தப் படத்தில் அரிவாள் கிடையாது. திரையை ரத்தத்தால் நனைக்கப் போவதும் கிடையாது. சர்வதேச அளவில் இருக்கும் இன்டலெக்ச்சுவல் கில்லர்ஸ் பற்றிய படம் இது. பெண் இயக்குநர் விஜயபத்மா கொலைத் தொழிலை இயக்குறாங்க. விஜயபத்மா அகத்தியன், வசந்த்கிட்டே அசோசியேட்டா வொர்க் பண்ணியிருக்காங்க. இந்தப் படத்துல 'கந்தக் கோட்டை' பூர்ணாவும், 'நான் அவன்



நடிக்கறது

இல்லை - 2'ல் நடிச்ச ரஞ்னா மௌரியாவும் கதாநாயகிகளாக வர்றாங்க.

Neted.comன்ற சாஃப்ட்வேர் கம்பெனியை யு.எஸ்.ஸில் நடத்திக்கிட்டு வர்றேன். சினிமாவுக்கு வந்ததுக்கப்புறம் கம்பெனி வேலையைப் பார்க்கறதுக்கே போரடிக்குது. நடிப்புத் தொழிலை கம்பேர் செய்யும்போது சாஃப்ட்வேர் தொழில் பத்தி ரொம்ப யோசிக்க வேண்டியிருக்கு. நடிப்புத் தொழில் ரொம்ப ஈஸியா இருக்குதே.

ஹாலிவுட்டில் ஆக்டிங் கோர்ஸ் செய்தபோது நிறைய உலகப் படங்கள் பார்க்க வாய்ப்பு கிடைச்சது. அங்கே நிறைய நல்ல நாவல்களைப் படமாக்கறாங்க. இங்கேயும் அந்த மாதிரி செஞ்சா எங்களை மாதிரி புதுமுகங்களுக்கு நல்லா ஸ்கோப் இருக்கும். ஹாலிவுட் கலைஞர்களுக்கு எந்த விதத்திலேயும் இந்திய சினிமா கலைஞர்கள் சளைச்சவங்க கிடையாது. சரியான வழிகாட்டுதல் இருந்தா சூப்பரா பிரகாசிப்பாங்க.

ஆக்டிங் மாதிரியே எனக்குப் பிடிச்ச இன்னொரு விஷயம் எழுத்து. விஷன், பிரில்லியன்ஸ், சக்ஸஸ் (Vision, brilliance, success) ன்ற புத்தகத்தை தொழில்முனைவோர்களுக்காக எழுதியிருக்கேன். ஒவ்வொரு இளைஞனும் வேலைக்காகவோ, படிப்புக்காகவோ ஏதாவது ஒரு வெளிநாட்டுக்குப் போய் ஒரு சில வருஷங்கள் தங்கி, அங்கேயிருக்கும் நல்ல விஷயங்களைக் கத்துக்கிட்டு வரணும்'' படபடவெனப் பட்டாசாகப் பொரிகிறார் ஷான்குமார்.

செய்தி, சித்திரம்: **ராகவ்குமார்**

ஈஸி!



"ஹாலிவுட் கலைஞர்களுக்கு எந்த விதத்திலேயும் இந்திய சினிமா கலைஞர்கள் சளைச்சவங்க கிடையாது."

"ஒரு ஊராட்சி மன்றத்தோட மிக முக்கியமான கடமைகள் என்னங்க...? சுத்த மான குடிநீர். சூப்பரா சாலைகள். சூரிய ஒளி போல இரவில் எரியும் தெரு விளக்குகள். பழுதடையாத பள்ளிக் கட்ட டங்கள். ஒழுங்காக இயங்கி வரும் கிராம நூலகம். இவை அனைத்தும் எங்க ஊர்ல சூப்பரோ சூப்பருங்க'' எனக் குரல் கொடுக்கின்றனர் மல்லியம்பத்து ஊராட்சி மன்றப் பொது மக்கள்.

செங்கதிர்ச்சோலை, கோனார் சத்திரம், மல்லியம்பத்து, ஆளவந்தாநல்லூர், அம்மையநல்லூர், இராமநாதநல்லூர், அமிர்தராஜநல்லூர், பெருங்குடி, மற்றும் வாசன் நகர் உட்பட சில விஸ்தரிப்புப் பகுதிகளை உள்ளடக் கியது மல்லியம் பத்து ஊராட்சி.

இவற்றில் அந்தந்தப் பகுதிகளுக்கென, மொத்தம் பன்னிரண்டு இடங்களில் மேல் நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் அமைந்துள்ளன. ''எப்படியும் பதினைஞ்சு நாளைக்கு ஒரு தடவை இந்தக் குடிநீர்த் தொட்டிகளைச் சுத்தம் பண்ணி, தேவைப் படும் அளவு குளோரின் போட்டுடுவாங்க. குடிநீர்த் தொட்டியோட தூண்லயே சுத்தம் செய்த தேதிகளை எழுதி வெச்சுடுவாங்க. சுத்தம் பண்றாங்களா இல்லையாங்கறதைக் கண்காணிக்கவே அந்தந்தப் பகுதியில் குழு அமைச்சிருக்காங்க. மாசத்துல ரெண்டு தடவை தொட்டிகளைச் சுத்தம் பண்றதால, எங்க ஊர்ல சுத்தமான குடிநீர் கியாரண்டி!'' என்கிறார் பெருங்குடி கிராமத்தின் பாக்கி யம்.

யாருக்கும் கமிஷன் கிடையாது!





''எங்க ஊர்ப் பகுதிகள்ல சாதாரணமா ஆளுங்க சைக் கிள் ஓட்டிட்டுப் போகவே முடியாது. முட்டி பெயர்ந் திடும். குண்டும் குழியுமா ஜல்லி ரோடு. இப்ப அப்படி இல்ல. முக்கிய வழிகள்ல அருமையான தார் ரோடு. தெருக்கள் உள்ள பகுதி கள்ல கனஜோரா கான்கிரீட் ரோடு. சும்மா ரன்வே மாதிரி அவ்ளோ நல்லா இருக்கு!'' என கோர ஸாகக் கூறுகின்றனர் இராமநாதநல்லூர் கிரா மத்தின் செல்வி, அமிர்த ராஜநல்லூர் கிராமத்துப் பெண்களான மங்கை



✱ கதிர்வேல்



"எங்க ஊர்ல சுத்தமான குடிநீர் கியாரண்டி!"

யர்க்கரசி மற்றும் ஜெயலெட்சுமி.

கிராமப் பகுதிகளில் சுமார் ஐம்பது மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. எழுநூறு பெண்கள். குழுக்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் எனில், ஊராட்சி மன்றத் தலைவரின் வீட்டு வளாகக் கூடத்திலேயே கூட்டம் நடத்தப்படுகிறது. தெருக்களில் மின் விளக்குகள் சரியாக எரிகின்றனவா என வாரம் இருமுறை கண்காணிக்கப்படுகிறது. இதனால் நூறு சத மின்னொளி பெறுகின்றன தெருக்கள் மற்றும் சாலைகள்.

இரண்டு இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இருபது நபர்களுக்கு, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கிடைக்காமல் இருந்து வந்த இலவச வீட்டு மனைப் பட்டா பெற்றுத் தரப்பட்டுள்ளது. தமிழக அரசின் கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் தகுதியுடையோர் அனைவரும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.



✱ மங்கையர்க்கரசி



✱ ஜெயலட்சுமி



✱ பாக்கியம்



✱ செல்வி

"ஒரு ஊராட்சிக்கு என்னென்ன வகையில் நிதி பெற முடியுமோ அதன் அத்தனை வகைகளிலும் நிதி பெறப்பட்டு ஊராட்சிப் பணிகள் செம்மையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. தமிழகப் போக்குவரத்துத் துறை அமைச்சரின் முழு ஒத்துழைப்போடு, கிராம வளர்ச்சிப் பணிகள் நிறையவே இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிலான மத்திய - மாநில அரசுகளின் நலத்திட்ட உதவிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் இங்கு நிறைவு பெற்றுள்ளன. திட்ட நிதி ஒதுக்கீடுகளின் முழுத் தொகையும் முழுமையாக எவருக்கும் கமிஷன் இன்றி பயன்படுத்தியிருக்கிறோம்!'' என்கிறார் மல்லியம்பத்து ஊராட்சி மன்றத் தலைவர் ப.கதிர்வேல்.


- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

அருள்வாக்கு

உண்மையான சுயராஜ்யமானால், நம்முடைய சுதந்திரப்படி நடத்தும் சட்ட சபை எனில், நம்முடைய தர்மராஜ்யம் ஆதியில் எப்படி இருந்தது, அதை மீண்டும் கொண்டுவர என்ன செய்ய வேண்டுமென்பதை ஆலோசிக்க வேண்டும். நமக்கென்று ஒரு பண்பாடும், நாகரிகமும் உண்டு. இருக்கட்டுமே; அதையே ஏன் கட்டிக்கொண்டு அழ வேண்டுமென்றால், 'நமது' என்கிற வெறும் பாசத்துக்காக இப்படிச் சொல்லவில்லை. எத்தனையோ புராதன நாகரிகங்கள் காலப் பிரவாகத்தில் அடித்துக் கொண்டு போனபோதிலும், நம் பண்பாடும் நாகரிகமும் பாறாங்கல் போல எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக நிலைத்திருப்பதாலேயே இதற்கு ஒரு விசேஷம் இருக்கத்தான் செய்கிறதென்று உணர்ந்து, அதையே நாமும் அனுசரித்து வாழ வேண்டும். நாம் நாமாக இருக்க வேண்டும். எவ்வளவு பலம் நமக்கு உண்டோ அவ்வளவையும் நம்மை நிஜமான நம்மவர்களாக்குவதில் உபயோகப்படுத்த வேண்டும்.

வெள்ளைக்கார வேஷத்திலே உள்ள நம்மவர்கள் சட்டம் செய்கிறார்கள்; அதற்கு அடிமையாக நாம் இருக்கிறோம் என்றால் அதில் சுதந்திரத்தின் சாரமே இல்லை. நம்முடைய சம்பிரதாயங்களை அனுசரிக்காதவர்களுக்கு வோட்டுக் கொடுத்து வரும் ராஜ்யம் அடிமை ராஜ்யம்தான். லௌகிக விஷயங்கள் கூட ஆத்ம சம்பந்தமாகவும் தெய்வ சம்பந்தமாகவும் இருந்த முறைதான் நம்முடையது. அதன்படி இருந்தால் உத்கர்ஷத்தை (உயர்வை) அடையலாம் என்பதை அறிந்து, நமக்கு எந்த மாதிரி ஸ்வதந்திரம் உண்டோ, அதை, அந்த முறையை நிலைநிறுத்துவதிலேயே பயன்படுத்த வேண்டும். தர்மம், தொழில்முறை முதலியவற்றை அறிந்தவர்களையும், அனுஷ்டானம், ஒழுக்கம் உடையவர்களையுமே ராஜ்ய நிர்வாகத்தில் வைத்துப் பார்க்க வேண்டும்.

- ஜகத்குரு
காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
சுவாமிகள்



சுயராஜ்யம்

பவித்ரா நந்தகுமார்

மௌன வரம்!

வாய் பேச இயலாத முருகனைக் கட்டிக் கொண்ட மோகனா, திருமணமான இந்த மூன்று மாதத்தில் ரொம்பவே சோர்ந்து போனாள். கடைக்குட்டியாக ஏழாவது பெண் மோகனா. வறுமையும் அப்பாவின் பக்கவாத பாதிப்பும் குடும்பத்தை ஆட்டிப் படைத்தன. ஆறு பெண்களையும் தட்டுத்தடுமாறிக் கட்டிக் கொடுத்த அப்பா இவள் முறையின்போது ஏதும் செய்ய இயலா கல்லாகிப் போனார்.

மணமான பதினைந்தாம் நாளே தனிக்குடித்தனம். வீட்டில் நிலவிய அந்த வெறுமை பேயைப் போல் பிய்த்துத் தின்றது. பேச்சு மறந்து இவளும் சமிக்ஞைகள் புரிய ஆரம்பித்து விட்டாள். ஆனால் இவ்வாழ்க்கையை நிராகரிக்கக் கூடாது என்பதில் மட்டும் அவளின் உறுதி வெளிப்பட்டது.

இத்தருணத்தில்தான் எதிர்வீட்டுக்குப் புதிதாகக் குடி வந்தது மணிவாசகம் தம்பதி. காலை முதல் மாலைவரை நெற்றிப் பட்டையில் ஜொலிப்பவர், இரவு ஒன்பதானால் சாராய பட்டையில் மிதப்பார். தினமும் தண்ணி போட்டு அவர் பேசும் பேச்சு அத்தனையும் பேசக்கூடாத ரகம். சென்சார் கொண்டு கத்தரிக்கத் தகுந்தவை. அவர் மனைவிக்குக் கொச்சை வார்த்தைகளில் நித்தம் அர்ச்சனைதான்.

ஒரு காலை வேளை, ''கொஞ்சம் காப்பித்தூள் இருக்குமா? நாளைக்குக் காலம்பற கொடுத்துடறேன்'' என்றவாறு வந்தாள் மணிவாசகம் மனைவி.

''இதோ தரேன். வாங்க உள்ள...''

இரவு நடந்த பேச்சுக்கும் அவளுக்கும் சம்பந்தமேயில்லாததைப் போன்ற முக மலர்ச்சி. கொண்டு வந்த கரண்டியில் தூளை நிரப்பியபடியே கவனித்தாள் மோகனா.

''கேள்விப்பட்டேன்... உங்க வீட்டுக்காரரு ஊமையாமே? தப்பா நினைக்காதீங்க. நீங்க ரொம்ப அதிர்ஷ்டசாலி.''

அவள் பேசிய அர்த்தம் முகத்தில் அறைந்ததும், மோகனாவினுள் ஏதோ ஒன்று உடைந்து நொறுங்கியது போலிருந்தது.

''இந்தத் தெருவே ஊமையைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட பெரிய மனசு பொண்ணுன்னு ரொம்பப் பெருமையா பேசிக்கிறாங்க.''



மோகனா ஸ்தம்பித்து நின்றாள். அவளுடைய உள்ளத்திலிருந்து எந்தக் குப்பையையோ வெளியே வாரிப் போட வேண்டியிருப்பது போல் அவளுக்குத் தோன்றிற்று.

இப்போதெல்லாம் கணவனின் விழிகள் பேசுவதுகூட அவளின் காதுகளுக்கு அப்பட்டமாகக் கேட்கிறது. ○

16

அஜயன் பாலா

மனித மனம், கடவுள் மனம் என இரண்டு மனங்கள் இருக்கின்றன.

கடவுள் இருக்கிறாரோ இல்லையோ... ஆனால் உலகிலுள்ள அனைத்தின் மீதும் அன்பு செலுத்துபவர்களை, அதன் பொருட்டு தன் தவறைச் சரிசெய்பவர்களை கடவுள் மனம் படைத்தவர் என்கிறோம்.

ஆனால் மனித மனமோ சுயநலமிக்கது. பிடிவாதகுணம் கொண்டது. அவ்வளவு சுலபத்தில் தன்னை மாற்றிக்கொள்ள முன்வராதது. முரண்டு பிடிக்கும். தன்னைத் தாக்குபவர்களை உடனடியாகவோ அல்லது திட்டமிட்டோ அழிக்கத் துவங்கும்.

இப்படியான இரண்டு குணம் கொண்டவர்களும் உலகம் முழுக்க எல்லா வீட்டிலும் கலந்திருக்கின்றனர். அவர்கள் தாம் வாழ்க்கையின் சில எதிர்பாராத திடீர் திருப்பங்களுக்கெல்லாம் காரணமாக இருக்கின்றனர்.

அன்று தாழம்பேடு எனும் சிறுகிராமத்து வீட்டில் நடந்ததும் அதுதான்.

சேகரின் சித்தப்பா முனுசாமிக்கு நெடுநாளாகவே கோபம், ஆற்றாமை.

சேகருடன், சூர்யா லீவுக்கு கிராமத்துக்கு வரும் ஒவ்வொரு முறையும் காரணமே இல்லாமல் முனுசாமியின் உதடுகள் முணுமுணுக்கத் தொடங்கும். ஆனாலும் அண்ணியின் சுபாவம் அறிந்து வாயைத் திறக்காமல் உள்ளுக்குள் குமைவார். ஒரு சாதாரண அனாதைப் பையனைக் கொண்டு வந்து வீட்டில் வைத்துக்கொண்டு அவனுக்கு அண்ணி பாலும் சோறும் ஊட்டுவதாக, எரிச்சலையும் கோபத்தையும் முனுசாமி தம் மனைவியிடம் கொட்டித் தீர்ப்பார்.

அவள் கூட, ''எதுக்கு உங்களுக்கு இத்தனை வயித்தெரிச்சல்?'' எனக் கேட்பாள்.

''நாளைக்குப் பார்... அவனும் சொத்துக்கு வந்து நிப்பான். அன்னைக்குத் தெரியும்'' எனக் கத்துவார்.

அவரது எரிச்சலுக்கெல்லாம் அன்று வடிகாலாக மீன்பிடிக்கப் போன சேகர் - சூர்யா சண்டை அமைந்துவிடவே கெட்டியாகப் பிடித்துக்கொண்டார் முனுசாமி. என்னதான் மோசமான ஆளாக இருந்தாலும் கிராமத்து ஆட்கள் வெகுளிகள். இன்னும் கொஞ்சநேரத்தில் அண்ணி வந்து கேட்டால், அனாவசியமாகச் சண்டை வருமே, அப்புறம் தன்னை இந்தப் பக்கமே சேர்க்கமாட்டார்களே என்ற யோசனை எதுவும் இல்லாமல், அந்தச் சிறுவனை பஸ்



ஏற்றி அனுப்புவதிலேயே குறியாக இருந்த முனுசாமிக்கு, வாசலில் சூர்யாவுடன் வந்து நின்றதும் அதிர்ச்சி.

தொலைவில் முத்துலட்சுமியைப் பார்த்ததுமே முனுசாமிக்கு உதறல் எடுத்து விட்டது. ஆனாலும் வீம்பாக விறைத்துக்கொண்டு நின்றார்.

அருகில் வந்த முத்துலட்சுமிக்கு சூர்யாவைப் பையும் கையுமாகப் பார்த்தவுடனேயே ஓரளவுக்கு யூகிக்க முடிந்தது. முனுசாமியைப் பந்து பதினைந்து வருடங்களாக அவளுக்கும் தெரியுமல்லவா..? '

முத்துலட்சுமி சூர்யாவைத்தான் முதலில் முறைத்தாள். அவனது அழுது துடைத்த கண்களும், வீங்கிய கன்னமும் அவளுக்குள் பல கதைகளை உண்டாக்கின. மகன் சேகரைப் பார்த்தாள். சேகருக்குத் தெரியும், அம்மாவுக்கு சூர்யாவின் மேல் இருக்கும் பாசம்.

பகல் மீன்கள்



''நான்... அப்பா... யாரும் ஒண்ணும் சொல்லலைம்மா. சித்தப்பாதான் இவனை வெளியில போகச் சொல்லிட்டாரு'' என அப்படியே விஷயத்தைப் போட்டு உடைக்க, முனுசாமிக்கோ அதிர்ச்சி!

''டேய் உன்னை அடிச்சான்னு தானேடா சொன்னேன். இப்ப நீயே என்னை மாட்டி விடறியா..?''

முத்துலட்சுமி ஒன்றும் பேசவில்லை. கண்கள் கோபத்தில் படபடத்தன.

''டேய் உனக்கு அவ்வளவு திமிரா..? என்கிட்ட கூட சொல்லாம யாரோ சொன்னாங்கன்னு வீட்டைவிட்டுக் கிளம்பற அளவுக்குப் பெரிய ஆளாகிட்டியா..?''

சேகரின் அப்பா தம்பியைச் சமாதானப் படுத்தும் விதமாக, ''இங்க பாரு முத்து லட்சுமி... நடந்தது என்னன்னு கேளு...''

''அண்ணே நீங்க சும்மா இருங் கண்ணே. அவங்களுக்கு இப்ப நாம என்ன சொன்னாலும் காதுல விழாது. அதான் யாரோன்னு சொல்லிட்டாங்க இல்ல... அப்புறம் என்ன வேண்டிக் கிடக்கு... காலங்காலமா இந்த வீட்டுக்கு நாய் மாதிரி உழைக்கிறேன்... என்னைவிட இந்த அனாதைப் பையன் அவங்களுக்குப் பெரிசா போச்சுன்னா இருந்துட்டுப் போகட்டுமே.''

முத்துலட்சுமி மகன் சேகரைப் பார்த்து, ''என்னடா நடந்துச்சு?'' என்றாள்.

''இல்லம்மா நானும் சூர்யாவும் ஏரியில மீன்பிடிக்கப் போனோம்மா... வரும் போது... வரும்போது...''

சேகர் சட்டென அமைதியாகி அடிக் கண்ணால் சூர்யாவைப் பார்க்க, சூர்யாவும் சட்டென, ''நான்தான் சேகரை அடிச்சிட் டேன்ம்மா'' என்றான்.

முத்துலட்சுமி இதை எதிர்பார்க்க வில்லை. மகனை சூர்யா அடித்துவிட் டானே என்பதுகூட அவளுக்குக் கவலை



யில்லை. ஆனால் இப்போது முனுசாமிக் குச் சாதகமாக சூர்யாவே பேசிவிட்டானே என்றுதான் கவலை.

''எதுக்குடா அவன் உன்னை அடிச் சான்?'' என்று சேகரைப் பார்த்தாள்.

''அவனை நான் அனாதைப் பயலேன்னு திட்டினேன்ம்மா... அதனால தான் எல்லார் முன்னாடியும் ஏன்டா அப் படி சொன்னேன்னு சொல்லி என்னை அடிச்சான்.''

முத்துலட்சுமிக்கு இப்போது ஆசுவாச



கொலையா கொலை!

"எனது முந்தைய படமான 'வல்லமை தாராயோ' வலிமையான உணர்வு கவிதை. ஆனால், 'கொலைகொலையா முந்திரிக்கா' காமெடி குழைத்த டீன்ஏஜ் கவிதை. ஆரம்பம் முதல் க்ளைமாக்ஸ் வரை காமெடியால் கதையைப் பின்னியிருக்கிறோம். நம் வாழ்க்கையில் சீரியஸாக நினைத்துக் கொண்டு செய்கிற ஒரு விஷயம் காமெடியாக முடிகிறபோது, ஒருவிதமான ஆற்றாமை எட்டிப் பார்க்கும். எனினும், அதை மறைத்துச் சிரித்துக் கொண்டே நகர்ந்து விடுவோம். அப்படிப்பட்ட ஒரு உணர்வினை இந்தப் படம் தரும். எனக்கு சினிமா உலகம் நிறைய நல்ல விஷயங்களைத் தந்திருக்கிறது. முடிந்த வரை, என் பங்காகச் சில நல்ல விஷயங்களைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். அதன் ஆரோக்கியமான தொடர்ச்சிதான் 'கொலை கொலையா முந்திரிக்கா' என்கிறார் படத்தின் இயக்குநர் மதுமிதா. இந்தப் படத்தின் திரைக்கதை வசனத்தை எழுதியிருக்கிறார் 'சாக்லேட் கிருஷ்ணா' கிரேஸி மோகன்.

- கமலி

மாக இருந்தது.

''சரி அப்ப தப்பு உன்மேலதான்... சூர்யா கிட்ட மன்னிப்பு கேளு.''

சேகருக்கு இந்த உலகில் அம்மாதான் எல்லாம். அம்மா என்ன சொன்னாலும் அப்படியே செய்துவிடுவான்.

''டேய் சூர்யா என்னை மன்னிச்சிடுடா''

சேகர் சூர்யாவின் அருகே வந்து சொல்ல, சூர்யா முத்துலட்சுமியைப் பார்த்தான். கண்கள் கலங்கி இருந்தன.

''சரி சரி உள்ளே போடா'' என சேகரின் அப்பா சூர்யாவின் அருகே வந்து பையை வாங்கிக்கொண்டு உள்ளே போக, முத்துலட்சுமி முனுசாமியை முறைத்தாள்.

''குழந்தைங்க சண்டை போட்டா, நாலு சாத்துசாத்தி சாமாதானப்படுத்தறது இல்லாம இப்படியா வெளியே துரத்தறது?''

முனுசாமி என்ன பேசுவது எனத் தெரியாமல் தலைகுனிய, ''உங்க தம்பிதான் அப்படி சொன்னா உங்களுக்கு எங்க புத்தி போச்சு... இப்ப நான் கொஞ்ச நேரம் லேட்டா வந்திருந்தா அவனை வீட்டை விட்டு அனுப்பிச்சிருப்பீங்க இல்லை. இப்படிதான் தண்டச்சோறுன்னு சொல்லி என் தம்பியைப் பத்து வருஷத்துக்கு முன்னாடி கிணத்துல குதிக்க வைச்சீங்க...''

முத்துலட்சுமிக்கு கோபத்துடன் அழுகையும் சேர்ந்துவந்தது.

முத்துலட்சுமி இந்தப் பேச்சைத் தொடங்கியதும், முனுசாமி வேகமாக அங்கிருந்து புறப்பட்டார். அதன் பிறகு அங்கு ஒரு நிமிடம் இருந்தாலும் முத்துலட்சுமி பேயாட்டம் ஆடி விடுவாள் என்பது அவருக்குத் தெரியும்.

சூர்யாவின் மனத்தில் முத்துலட்சுமி அன்று பேசிய காட்சி ஆழமாகப் பதிந்துவிட்டது. இந்த உலகில் நாம் எத்தனை பெரிய ஆளாக வளர்ந்தாலும், இந்தத் தாய்தான் தனக்குத் தெய்வம் என சூர்யா

அன்றே முடிவு செய்தான்.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு சூர்யாவே மெல்ல கிராமத்துக்குப் போவதை நிறுத்திக் கொண்டான். தன்னால் அந்த வீட்டில் பகை வளரக்கூடாது என்பதற்காகத்தான். ஆனாலும் முத்துலட்சுமி சேகரைப் பார்க்க வரும்போது சூர்யாவுக்கும் தனியாகப் பலகாரம் எடுத்துவருவாள். தீபாவளி, பொங்கலுக்கு முதல் வாரமே வந்து பஜாருக்கு அழைத்துப் போய் துணி எடுத்து அப்படியே டெய்லரிடம் தைக்கக் கூலியும் கொடுத்து வாங்கிக்கொள்ளச் சொல்லுவாள். சூர்யா அதன் பிறகு வளர்ப்புத் தந்தை மூலமாகத் தத்து எடுக்கப்பட்டு மேற்படிப்புகள் படிக்க வைக்கப்பட்டு வளர்க்கப்பட்டாலும், அவனைப் பொறுத்தவரை அம்மா அப்பா எல்லாம் சேகரின் அம்மா அப்பாதான்.

“அவனை அனாதைப் பயலேன்னு திட்டினேன்ம்மா...”



அதனால்தான் சேகரின் அம்மா முத்துலட்சுமிக்கு அவன் சேகரின் மரண தினத்தின்போது சத்தியம் செய்து கொடுத்தான்.

இப்போது அந்த சத்தியம் என்னாவது?

சேகர் இறப்புக்குக் காரணமான அந்தத் தேன்மொழியை இவனும் காதலிப்பது தெரிந்தால் அந்த தாயின் மனது எத்தனை வேதனைப்படும்!

அவளைக் கொண்டுவந்து முன்னால் நிறுத்துகிறேன் எனச் சொல்லிவிட்டு, இப்படி தன்னுடைய காதலியாகக் கொண்டுபோய் எப்படி அவர்கள் முன் நிறுத்துவது?

சூர்யா குழம்பிக்கொண்டிருந்தபோதே, அருணாச்சலம் சூர்யாவை முகமலர்ச்சியுடன் அழைத்தார்.

''மைகாட் அவ கண்முழிச்சிட்டா... அவகிட்ட சொல்லிட்டேன். வாங்க உள்ளே...''

சூர்யா ஸ்கிரீன் துணியை விலக்கிக் கொண்டு அறைக்குள் நுழைய, கட்டிலில் கிடந்த தேன்மொழி அப்பாவின் குரல் கேட்டுத் திரும்பினாள்.

(மீன்கள் துள்ளும்)

"நேத்து உங்க காருக்கு எப்படி ஆக்ஸிடெண்ட் ஆச்சு?"

"அந்த மரம் உங்களுக்குத் தெரியுதா?"

"தெரியுது!"

"நேத்து எனக்குத் தெரியலை!"

- ஆர்.பஞ்சவர்ணம்



விநாயகருக்கும், விவேகானந்தருக்கும் ஒரு ஒற்றுமை இருக்கிறது. மனம் போன போக்கில், கை போன வாக்கில் இரண்டு பேரையும் இஷ்டம் போல வரைந்து தள்ளலாம். ராமகிருஷ்ண விஜயம் ஆன்மிக கலாசார மாத இதழ் அண்மையில் நடத்திய ஓவியப் போட்டிக்கு வந்த ஆயிரக்கணக்கான ஓவியங்களைப் பார்த்தபோது இது புரிந்தது. நாடெங்கிலுமிருந்து ஏராளமான பள்ளி, கல்லூரி மாணவர்கள் சுவாமி விவேகானந்தரையும், அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களையும் வரைந்து அனுப்பி இருந்தார்கள்.



வீழாத கலாசாரம்!

''சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் 'இளைஞர் தினமாக' கொண்டாடப்படுகிறது. இது இளைஞர் தினக் கொண்டாட்டத்தின் வெள்ளி விழா ஆண்டு. அதனைச் சிறப்பிக்கும் வகையில் அகில இந்திய அளவில் ஓவியப் போட்டியை அறிவித்தோம். முப்பதாயிரத்துக்கும் அதிகமான ஓவியங்கள் வந்தன. ஓவியர் மணியம் செல்வம் உள்ளிட்ட நடுவர் குழுவுக்கு பரிசுக்குரிய ஓவியங்களைத் தேர்ந்தெடுப்பது பெரிய சவாலாக இருந்தது'' என்று கூறினார் ராமகிருஷ்ண விஜயம் பத்திரிகையின் ஆசிரியரான சுவாமி விமூர்த்தானந்தா.

முதல் பிரிவில், முதல் பரிசு பெற்றவர் புதுக்கோட்டையைச் சேர்ந்த மாணவரான விஜயகுமார். மே. வங்காளத்தைச் சேர்ந்த காது கேளாத, வாய் பேச முடியாத மாணவர் சௌவிக் கோஷ் இரண்டாம் பிரிவில் முதல் பரிசைத் தட்டிச் சென்றிருக்கிறார்.

பரிசளிப்பு விழா, சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் விமரிசையாக நடைபெற்றது. முழுமையான மனிதர்களை உருவாக்கும் வாழ்க்கைக் கல்வி மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டார் சென்னை பல்கலைக்கழகத் துணை வேந்தர் திருவாசகம்.


தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைத் தலைவரான ஆர்.நட்ராஜ், தாம் விவேகானந்தா கல்லூரியால் உருவாக்கப்பட்டவர் என்று பெருமைப்பட்டார். ''இந்திய மக்கள் தொகையில் எழுபது சதவிகிதம் இளைஞர்கள்தான். ஆனால் இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்களின் சராசரி வயது 56. அமைச்சர்களின் சராசரி வயது 68'' என்றார் தினமணி ஆசிரியர் கே.வைத்யனாதன்.

''அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் கலாசார ரீதியான வீழ்ச்சிதான். இந்தியாவின் பலம் கலாசாரம்தான். அதைப் புரிந்துகொண்டு செயல்பட்டால், இந்தியா சூப்பர் பவர் ஆவதை யாரும் தடுக்க முடியாது'' என்றார் பொருளாதார எழுத்தாளரான எஸ்.குருமூர்த்தி.

நிகழ்ச்சியின் கிளைமாக்ஸ் கலாக்ஷேத்திராவில் படிக்கும் ஹிமாசலப் பிரதேசத்தைச் சேர்ந்த குட்டீஸ்களின் தமிழ்ப் பாட்டுதான்.

- கௌதம்ராம்

இசைப் பரிச்சயம் இல்லாதவர்களுக்குச் சொல்லவேண்டுமானால் கர்னாடிக் மியூசிக்கின் சுஜாதா ஜி.என்.பி! இருவரும் திருப்புமுனை ஏற்படுத்தியவர்கள். தமிழ் மொழியில் சுஜாதா புகுத்திய நவீனத்தை ஜி.என்.பி இசையில் புகுத்தினார். எழுத்து நடைக்கு சுஜாதா கூட்டிய வேகத்தை ஜி.என்.பி இசைக்கு அளித்தார். ஸ்ரீரங்கத்துக்காரரின் வீச்சும் பாதிப்பும் தொடாத எழுத்தாளர்கள் இன்று மிகக் குறைவு. தஞ்சாவூர்க்காரரான ஜி.என்.பி. உருவாக்கிய பாணியின் தெறிப்புகள் இன்றுள்ள அனேகம் வித்வான்களின் இசையை ஊடுருவி நிற்கின்றன. ஜி.என்.பி. அறிமுகப்படுத்திய மின்னல் பிருகாக்கள் சுஜாதாவுடைய சொற்செட்டும் பொருள் செறிவும் மிகுந்த வாக்கியங்களை நினைவூட்டத்தான் செய்கின்றன. சினிமா பிரவேசம், ஆழ்ந்த படிப்பு, திறந்த மனம், சமூக நோக்கு, தத்தமது துறைகளின் எதிர் காலம் குறித்த அக்கறை, தீர்க்கதரிசனம், பரந்து



இசையுலகின்

பிரிந்த ரசிகர் பட்டாளம், ஆராய்ச்சி ானப்பான்மை போன்ற மேலும் பல பொது அம்சங்கள் இருவருக்கும் உண்டு.

கர்நாடக சங்கீத ரசிகர்களுக்கு ஜி.என்.பி நூற்றாண்டு என்பது ஒரு பஸந்தோத்ஸவம் போல. இவ்வாண்டு ஜனவரியிலும் கடந்த ஆண்டு டிசம் பர் மார்கழி உத்ஸவத்தின்போதும் இசைக் கலைஞர்களும் ரசிகர்களும் சபாக்களுமாக, விதவிதமாக இந்த உத் ஸவத்தைக் கொண்டாடியிருக்கிறார் கள்.

இந்த வசந்தோத்ஸவத்தில் எழுப் பிய நினைவு ஸ்தூபியாக ஒரு புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஜி.என்.பி பற்றிய தமிழ் நூலை எழுதிய லலிதா ராம், ஸ்ருதி மாத இதழின் ஆசிரியர் வி.ராம்நாராயண் ஆகிய இருவரும் இணைந்து தொகுத்துள்ள 'கந்தர்வ கானம்' என்ற அப்புத்தகத்தை ஜி.என்.பி குடும்பத்தினர் வெகு சிரத் தையாகத் தயாரித்தளித்துள்ளனர். ஜி.என்.பி உள்பட பலர் எழுதியுள்ள கட்டுரைகளின் தொகுப்பான இந் நூலின் முகப்பிலும் பின் அட்டையிலும் ம.செ. ஓவியங்கள், இணைப்பாக ஜி.என்.பி சி.டி என்று போனஸ் பாயிண்ட்டுகள்! (விலை ரூ.375 தொடர்புக்கு: gb_mahesh@yahoo.com, தொலைபேசி 044 22604117.)

தமிழ், ஆங்கிலம் என இரு மொழி வெளியீடாக வந்துள்ள நூலிலிருந்து நூற் றாண்டு நாயகரின் பண்புகளைச் சித்திரிக் கும் சில ரசத்துளிகள்:



ஜி.என்.பி. நூற்றாண்டு

சுஜாதா!

முதல் கச்சேரி:

மயிலை கபாலீசுவரர் கோயிலில் ஜி.என்.பியின் முதல் கச்சேரி நிகழ்ந் திருக்கிறது. அந்த அனுபவம் குறித்து அவரே எழுதிய வார்த்தைகள்:

சந்நிதிகளில் பிரார்த்தனை செலுத்தி விட்டு, ரசிகர்களை வணங்கிவிட்டு மேடையில் அமர்ந்தேன். பரபரப்பு உணர்வு எனக்குள் நிறைந்தது. சில நொடிகள் கண்களை மூடிக்கொண்டு பெற்றோர், ஆசிரியர்கள், பெரியவர் களை நினைத்துக்கொண்டேன். வய



கட்டத் தொடங்குகிறேன்
கனவுகளைக் கொண்டொரு கூட்டை.
முட்டைகளிடும் முன்பே
யாதொரு அடையாளமும் இல்லாததாக்கி
கலைத்து கடந்துகொண்டு இருக்கிறது-காலப்புயல்

- சி.கலைவாண

காலப்புயல்!

லின் வாசிக்க இருந்த சுப்ரமண்ய அய்யருக்கும் மரியாதை செலுத்தினேன். என் நண்பன் ராஜாமணிதான் மிருதங்கம். ஆரம்ப உருப்படியாக வர்ணத்தைப் பாடி முடிப்பதற்குள் படபடப்பு அடங்கிவிட்டது; முழு ஈடுபாட்டுடன் தொடர முடிந்தது. மூன்று மணி நேரம் இசையில் தோய முடிந்தது. இறைவன் அருளால், இயற்கை அளித்த குரல் வளத்தை நன்கு பயன்படுத்தி வெற்றிகரமாக நிகழ்ச்சியை முடித்ததில் திருப்தி ஏற்பட்டது.

வித்வான்கள் போற்றிய வித்வான்

1940களில் ஜி.என்.பி மிக அதிகம் நாடப்பட்ட கலைஞராக விளங்கினார். மிருதங்க மேதை பாலக்காடு மணி அய்யருக்கும் அதே டிமாண்ட்! மாதத்துக்கு 24 கச்சேரிகள்கூட நடக்கும். மேதைகளுக்கே உரிய சில கோணங்கித்தனங்களை நாம் மன்னித்துவிடுவது வழக்கம். ஆனால், ஜி.என்.பி.யிடம் அவை அறவே இல்லை; உயர்வு மனப்பான்மை என்பதும் கிடையாது. திருவனந்தபுரத்தில் ஒரு சமயம் அடுத்தடுத்து இரண்டு நாட்கள் அவர் கச்சேர் (அப்படி வைத்தால்தான் அனைத்து ரசிக களுக்கும் கேட்க வாய்ப்பு கிடைக்கும் கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின், பாலக்காடு மணி அய்ய மிருதங்கம். முதல்நாள் ரீதிகௌளை ராக பாடினார் ஜி.என்.பி. கச்சேரி முடிந்த பிற இரவு உணவுக்கு வர மறுத்துவிட்டார் தமது ரீதிகௌளை திருப்திகரமாக அமைய வில்லை; ராஜமாணிக்கம் பிள்ளையி அதே ராக ஆலாபனை அசத்திவிட்ட என்று சொன்னார். மறுநாள் கச்சேரியிலு நான்கைந்து உருப்படிகளுக்குப் பிற ரீதிகௌளையை ஆலாபனை செ தார் ஜி.என்.பி. ரசிகர்கள் கற்சிலை யாகிப் போகும் அளவுக்கு அது உயர்வா அமைந்தது. இம்முறை ராஜமாணிக்க பிள்ளை தமது வயலினைக் கீழே வைத்துவிட்டு, தாம் ரீதிகௌளையி வாசிக்க எதுவும் இனி இல்லை என்ற கூறிவிட்டார்!

'மருகேலரா' என்ற ஜெயந்தஸ்ரீ ரா (தியாகராஜ) கீர்த்தனையை ஜி.என்.பி அலங்கரித்துப் பாடக் கேட்டார் டைக வரதாச்சார்யார். ''ஒரு சாதாரண அங்கவஸ்திரத்தை விசிறிமடிப்பு அங்கவஸ்திமாக மாற்றியதுபோல் இருக்கிறது என்று அந்த அனுபவத்தை வர்ணித்தார்!

வெற்றிச்செல்வம்!

'**வா**ஸுதேவயனி' என்ற கல்யாணி ராக கீர்த்தனையை 1940ஆம் ஆண்டு இசைத் தட்டாக வெளியிட்டார் ஜி.என்.பி. மொத்தம் எட்டு நிமிட நேரத்துக்கு மட்டுமே பதிவு செய்யக்கூடிய 78 ஆர்.பி.எம். இசைத் தட்டில், ஒரு ராகம் பாடி, அதை கிரகித்து வயலின் வித்வான் ராகம் வாசித்து, கீர்த்தனையை சங்கதிகளுடன் பாடி, கற்பனை ஸ்வரம் பாடி, தனியாவர்த்தனமும் கொடுத்து, கேட்பவருக்கு நிறைவையும் கொடுப்பதென்பது next to impossible. அதை இந்தக் கூட்டணி (வயலின் ராஜமாணிக்கம் பிள்ளை, மிருதங்கம் பாலக்காடு மணி அய்யர்) செய்து காட்டியது! இதற்கு பத்தாயிரம் ரூபாய் (இன்றைய மதிப்புக்கு பக்கத்தில் இன்னும் பல பூஜ்யங்களைச் சேர்க்கலாம்) ஜி.என்.பிக்கு மட்டும் அவ்வாண்டு ராயல்டி கிட்டியது. இந்த இசைத்தட்டுக்கான ராயல்டி அவருடைய கடைசி காலம் வரை வந்து கொண்டேயிருந்தது.

பரந்த மனம்

"**எ**ன் இசையின் நல்ல அம்சங்களை மட்டும் எடுத்துக்கொள். அப்படியே என்னைப் போல் பாட வேண்டும் என்று முயற்சி செய்யாதே. அது போலிப்பு செய்வதுபோல் ஆகிவிடும். உன் மனோதர்மத்தை, உன் சொந்தக் கற்பனையை வளர்த்துக்கொள்..."

- இது ஜி.என்.பி தமது முக்கிய சிஷ்யையான எம்.எல்.விக்கு அளித்த அறிவுரை. அரியக்குடி, செம்மங்குடி, டி.கே.பட்டம்மாள், மதுரை மணி, எம்.எஸ். ஆகியோரது கச்சேரிகளைக் கேட்கும்படியும் எம்.எல்.விக்கு அறிவுறுத்தினார் ஜி.என்.பி.

ஆழ்ந்த பக்தி

திருவனந்தபுரத்தில் அவர் வீட்டில் செவ்விளநீர் ஈன்ற தென்னைமரம் ஒன்று உண்டு. அரிதான இந்த ரக இளநீரை அபிஷேகத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று உத்தரவு போட்டு விட்டார். யாரும் அதிலிருந்து ஒரு காயைக்கூடப் பருகக் கூடாது. இத்தனை உயர்ந்த விஷயம் இறைவனுக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்பது அவர் எண்ணம். ஒவ்வொரு திங்கள் கிழமையும் தமது பூஜையில் இருந்த பாதரஸ லிங்கத்துக்கு (சித்தர் ஒருவர் உருவாக்கிக் கொடுத்தது) செவ்விளநீர் அபிஷேகம் செய்



"என்னடா! 5 மார்க் வாங்கிட்டு இப்படி சிரிக்கறே! வெட்கமா இல்லை?"

"நான் ஒண்ணுமே எழுதலை. அதுக்குப் போய் 5 மார்க் போட்டிருக்கீங்களே? உங்களுக்கு வெட்கமா இல்லை?"

- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்

வார். ஒருநாள் அந்தப் பொறுப்பு என் சகோதரனுக்கு வழங்கப்பட்டது. அவன் மறந்து போனான் என்ற வருத்தத்தில் அண்ணா (தந்தை) சாப்பிட மறுத்துவிட்டார் - 'என் ஈசனைப் பட்டினி போட்டு விட்டீர்கள்; நானும் பட்டினி இருக்கிறேன்' என்று!

(- தந்தை ஜி.என்.பி குறித்து சகுந்தலா ராமநாதன்)

சமூக நோக்கு

வெகுஜனங்களைப் புறக்கணிப்பது சரியல்ல. அவர்களுக்கும் இசையை ரசிக்கத் தர வேண்டும் - சற்று இளக்கித் தரலாம். அனேக நாடுகளில் செவ்விசையுடன் மெல்லிசையும் உண்டு. இசை என்பது மேதைகளுக்கு மட்டுமானதல்ல; அதற்குப் பல வகையான உபயோகங்கள் உண்டு. சோர்ந்தவருக்கு உற்சாகம் ஊட்டும், கவலையைப் போக்கும், அறிவுரீதியாகத் திருப்தி கொடுக்கும். ஆகவே எவ்வகை இசை வெகு ஜனங்களுக்குத் தேவை என்று அறிந்து வழங்கலாம். மேடையில் உள்ள கலைஞன் மட்டும் பாடுவது தென்னாட்டு இசை மரபாக இருந்து வருகிறது. சேர்ந்திசையை அறிமுகப்படுத்தி ரசிகர்களையும் சேர்ந்து பாடச் சொல்லலாம். இதற்கு ஏற்ற கதைப் பாடல்கள், தேச பக்தி கீதங்கள் இருக்கின்றன. இந்முறையை முழுமையாக ஊக்குவிக்க வேண்டும்.

-ஜி.என்.பி.யின் கருத்து (கையெழுத்துப் பிரதியிலிருந்து)



"வெகுஜனங்களைப் புறக்கணிப்பது சரியல்ல. அவர்களுக்கும் இசையை ரசிக்கத் தரவேண்டும் - சற்று இளக்கித் தரலாம்."

தொலைநோக்கு

எதிர்கால சந்ததியினருக்கு கண்ணை மூடிக் கொண்டு பழைமையைப் பின்பற்றும்படி நாம் சொன்னால் ஏற்க மாட்டார்கள். நாம் பழைமையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். சில மரபுகள் ஏன், எதற்கு ஏற்பட்டன என்று ஆராய்ச்சி செய்து, காரண காரியங்களுடன் அடுத்த தலைமுறையினருக்கு விளக்க வேண்டும். இசை லட்சணங்களை நுணுக்கமாக உணர்ந்து பயிற்றுவிக்க வேண்டும். புதிய படைப்புகள் (கீர்த்தனைகள்) எதிர்காலத்தில் மிக அதிகமாகப் பெருக்கெடுக்கும். அவற்றை மதிப்பிட ஓர் அமைப்பு நிறுவுவது நல்லது. அந்த அமைப்பில் இடம் பெறும் நிபுணர்கள் தர நிர்ணயம் செய்து ஆமோதிக்கும் கீர்த்தனைகள் மட்டுமே புழக்கத்துக்கு வர வேண்டும்; பாதுகாக்கப்பட வேண்டும்.

(சங்கீத கலாநிதி பட்டம் பெற்றபோது ஜி.என்.பி. ஆற்றிய உரை)

தொகுப்பு: சீதா ரவி

நூல் அறிமுகம்

வேட்கையின் ரகசிய இழை!

கனவு மத்தாப்பூ, ருக்மணி ஜெயராமன், சபரீஷ் பாரதி, 8, மாசிலாமணி தெரு, அரவிந்த் நரேன் என்கிளேவ், தி.நகர், சென்னை-17. விலை ரூ.80.00

விஞ்ஞானம், சமூகப் பிரச்னைகள், உறவுச் சிக்கல்கள்... இவற்றைக் களமாகக் கொண்டு அமைந்த பன்னிரண்டு சிறுகதைகளின் அடிநாதமும் மனிதாபிமானம்தான். பொறுப்புணர்வும், சமூக அக்கறையும் எதிரொலிக்கும் கதைகள். எதிர்பாராத திருப்பங்கள் கொண்ட முடிவுகள் சுவாரஸ்யம் கூட்டுகின்றன.




பெரியார் ஒரு தீவிரவாதி, வழக்கறிஞர் ஆர்.முத்துநாராயணன், தொகுப்பு: பட்டுக்கோட்டை பிரபாகர், ரம்யா பிரியா கிரியேஷன்ஸ், 37/1, கெனால் பேங்க் ரோடு, கஸ்தூரிபா நகர், அடையாறு, சென்னை-20. விலை ரூ.80.00


'பெரியார் என்றொரு பிற்போக்குவாதி சில காலங்களுக்கு முன் இருந்தான் என்று வருங்காலத்தினர் சொல்ல வேண்டும்' என்று தாமே கூறும் அளவுக்கு, சமூகத்தில் தொடர்ந்த முன்னேற்றங்களை எதிர்பார்த்து உழைத்தவர் பெரியார். அவருடைய நெடுநாள் நண்பர் ஆர்.முத்துநாராயணன் பெரியாருடனான தமது அனுபவங்களைப் பகிர்ந்துள்ளார். சமூக சீர்திருத்தவாதியாக அறியப்படும் பெரியாரின் அறியப்படாத பக்கங்களை இந்நூலில் வாசிக்கலாம்.


வேட்கையின் நிறம், உமா ஷக்தி, உயிர்மை பதிப்பகம், 11/29, சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை-18. விலை ரூ.50.00

தனிமையின் காட்சிப்படுத்துதலோடு புற உலகின் அழகுகளும் ஆங்காங்கு தீட்டப்பட்டுள்ள கவிதைத் தொகுதி. ''மென்குளிர் போர்த்திய/ புகைப் பனிக்காலை.../புல்வெளிகளில் வெள்ளைக் கொக்குகள்/எண்ண ஆரம்பிப்பதற்கு முன்னே/விரைந்து நகர்ந்துவிட்ட ரயில்...'' - பனிக்காட்சி கவிதை ஒரு சான்று. மானுட வேட்கையின் ரகசிய இழைகளால் பின்னப்பட்டுள்ள கவிதைகள்.

- நேயமுகில்







ராம.நாராயணன்



சமுத்திரகனி

தராசு மாதிரி திரைப்படங்களின் தரத்தை நிர்ணயித்த விமர்சனப் பார்வை ஊடகங்களில் இப்போ எப்படியிருக்கு? விமர்சனங்களால் சினிமாவுக்கோ ரசிகர்களுக்கோ ஏதேனும் பலன் உண்டான்னு புத்தியில குறுகுறுக்க ஆரம்பிச்சதும் விசாரிக்க விர்ருன்னு புறப்பட்டோம்.

''படத்துக்கு விமர்சனம் நல்லபடியா எழுத அன்பளிப்பு தர்றாங்க. பத்திரிகையில் ஒரு பக்கத்தில் படத்தின் விளம்பரம் போடுற செலவைவிட இது ஜுஜுபி. இது ஒரு மாற்று வழி அல்லது விமர்சன ஊழல். படத்தை எடுத்தவங்களுக்கு ஜனங்கிட்ட இப்படியொரு படம்னு தொடர்ந்து கவனத்துல வந்தா போதும். பாஸா ஃபெயிலான்னு அவங்க (ஜனங்க) பாத்துப்பாங்க'' என்கிறார் ஒரு மூத்த சினிமா பத்திரிகையாளர்.

'நாடோடிகள்' பட இயக்குநர் சமுத்திரகனி:

''விமர்சனம் ஒட்டுமொத்த ரசிகர்களின் கருத்தைப் பிரதிபலிப்பதில்லை. ஆகவே, அது படத்தின் வசூலை எந்த விதத்திலும் பாதிக்காது. படம் நன்றாக இருந்தால் ரசிகர்களே வெற்றி பெறச் செய்து விடுகிறார்கள். ஒரு ரசிகன் சுமார் நூறு பேரிடமாவது தான் பார்க்கும் படத்தைப் பற்றிப் பேசுகிறான்; விமர்சிக்கிறான். இந்த விமர்சனம்தான்

விமர்சன

படத்தின் வெற்றி, தோல்வியை முடிவு செய்கிறது. பத்திரிகை, சேனல்களின் விமர்சனத்துக்கு நான் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.''

இயக்குநர்/தயாரிப்பாளர் ராம.நாராயணன்:

''என்னோட படங்களை என்னைக்குமே பத்திரிகைகள் பாராட்டினதில்லை. குரங்கு பேசுமா, பாம்பு இந்த மாதிரி செய்யுமான்னு கிண்டல் பண்ணித்தான் எழுதுவாங்க.



நுக்காக நான் வருத்தப்பட
ட்டேன். ஜனங்க ரசிக்கிறாங்க.
ன்னோட படங்கள்
நியோகஸ்தர்களின் கையைக்
டிக்காது. தியேட்டர்காரங்களுக்கும்
சூலை அள்ளிக் கொடுக்கும். இது
ாதும் எனக்கு. அதுக்காக என்
_ங்களைப் பற்றிய விமர்சனங்களை
நுக்க மாட்டேன். துணுக்கு மாதிரி
டிப்பேன். சிவப்பு மல்லி, சோறு
ான்ற சமூக சிந்தனைகள் கொண்ட
_ங்களை நான் தயாரிச்சபோது
த்திரிகைகள் வெகுவா
ாராட்டினாங்க. ஆனால், வசூலில்
னக்குத் திருப்தியில்லை. அதற்குப்
றகு பாராட்டு,

ஊழல்!

விமர்சனம் பற்றியெல்லாம்
வலைப்படறதில்லை..''

சரி... விமர்சனங்களைப் படிக்கிற
ாசகர்கள்/ ரசிகர்கள் என்ன
சொல்றாங்க?

வீணா: ''பொதுவாகவே நாங்கள்
ஒரு திரைப்படத்தைப் பார்க்கப்
போகிறோம் என்றால் அதற்கு முன்
அதைப் பற்றிய விமர்சனங்களை
இணையதளத்திலும்,
செய்தித்தாள்களிலும் படித்து
விட்டுத்தான் செல்வோம். விமர்சகர்
அந்தத் திரைப்படத்தைப் பார்க்கும்
விதம் வேறு. பொதுமக்கள் அதை
பார்க்கும் விதம்
வேறு விமர்சகரின்
பார்வையில்,
அத்திரைப்படத்தில்
இருக்கும் பாடல்கள்
படு மோசமானதாக
இருக்கும். ஆனால்
நமக்குப் பிடித்த
பாடல்களாக
இருக்கலாம்.
அதனால் எந்தத்
திரைப்படத்தையும்
வெறும்
விமர்சனங்களை
மட்டுமே வைத்துக்
கொண்டு நல்ல
படமா சுமாரான
படமா என முடிவு
செய்ய இயலாது.''



கோல்மா



வீணா

கோல்மா: ''இளைஞர்கள் மத்தியில்
ஒரு படம் நல்ல பெயர்
எடுத்துவிட்டால் போதும். அது நிச்சயம்
சூப்பர்டூப்பர் ஹிட்தான்.
விமர்சனங்களைப் படித்து விட்டு
போகலாமா வேண்டாமா என முடிவு
செய்யும் காலம் எல்லாம் போயே
போச்சு. என்னோட ஃபிரெண்ட்ஸ் ஒரு
படத்தைப் பற்றி பிரமாதமா
சொன்னாங்கன்னா போதும். அடுத்த
ஷோவுக்கு நான் கட்டாயம் அந்தப்
படத்தைப் பார்த்துடுவேன். என்னோட
ஃபிரெண்ட்ஸ்தான் என்னைப்
பொறுத்தவரை சிறந்த விமர்சகர்கள்.''

- ராகவ்குமார்,
நளினி சம்பத்குமார்



● சி.கார்த்திகேயன், சாத்தூர்

இப்பொழுது திருமணங்கள் எங்கு நிச்சயிக்கப்படுகின்றன?

திரிசங்கு சொர்க்கத்தில்...!

● ஆர்.கோபாலன், மேற்கு மாம்பலம்

பருவ மங்கையின் கால் கொலுசு, பச்சிளங் குழந்தையின் கால் கொலுசு ஒப்பிட்டு ஒரு கவிதை கூறுங்களேன்?

நகைக்கடை Jewelளுவர் எழுதிய கொலுசதிகாரக் குறள் ஒன்று கூறுகிறேன்...

'கிளுகிளுப்பாம் கன்னியின் காலணி
சொகுசு
கிலுகிலுப்பை சேயின் கொலுசு'

● சுலக்ஷ்ணா, சென்னை

நீங்கள் வல்லவா?

வீட்டுல பாரி... வெளியில ஸாரி. நான் மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகன் இல்லை. ஆனால் மனைவிக்கு கார் (ஓட்டக் கற்றுக்) கொடுத்த மோகன்!

● சிவபாரதி, சிதம்பரம்

சிரிப்பைத் தொலைத்த மனிதன்?

கண்காட்சியில் காணாமல்போன குழந்தை!

● லலிதா செல்லப்பா, சென்னை

கேள்விக்குப் பதில் சொல்லும் பகுதியை முதன்முதலில் அறிமுகப்படுத்திய பத்திரிகை எது?

கல்யாணப் பத்திரிகை. மனைவியின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் முழிக்கும் கணவன், ஏதாவது சாக்கு சொல்லி தற்காலிகமா விடை பெறுவான்!

● சிவகுரு, வேலூர்

காரியத்தைச் சாதித்துக் கொள்ள எந்த சோப் போடலாம்?

யார் என்ன சொன்னாலும் எதிர்த்து பேசாமல் 'ஹாமாம்-சோப்' போட்டு அவர்களை சந்தோஷத்தில் குளிப்பா டுங்கள்!

● ஜி.வெங்கட்ராமன், நங்கநல்லூர்

ஒசாமா பேட் செய்ய, ஒபாமா பவுல் செய்ய நீங்கள் அம்பயராக நின்றால்...?

ஓடொமாரரரா என்று பாடியபடி ஓடி விடுவேன்!

● த.சத்தியநாராயணன், அயன்புரம்

நரி, கழுதை எதன் முகத்தில் விழித்தால் அதிர்ஷ்டம்?

நரி முகத்தில் விழிக்க, காட்டில் தூங்க வேண்டும். கழுதை முகத்தில் விழிக்க, குட்டிச்சுவரில் உறங்க வேண்டும். இதை விட ஒருவனுக்கு வேறு துரதிர்ஷ்டம் வேண்டுமா!

● பா.அசோக், திருவில்லிப்புத்தூர்

தந்தை சொல் மிக்க வேறு ஏதேனும் மந்திரம் உண்டா?

மகன் தந்தைக்கு உபதேசித்த பிரணவ மந்திரம்.

● ஸ்ரீராம், சென்னை

முருகருக்கு மட்டும் இரண்டு மனைவிகள். நமக்கெல்லாம் ஒரு மனைவி தான் என்ற லென்ஸார் ஏன்?

தணிகைக்கு எதற்கு தணிக்கை!



கிரேஸியைக் கேளுங்கள்

● புதுவை
ருஷ்ணன்,
புதுச்சேரி
ராமருக்கு ஒரு
பில், ஒரு சொல், ஒரு
)ல் (இல்லாள் அதாவது
மனைவி)... அது போல
ரேஸிக்கு?

ஒரு ராமர், ஒரு ஹ்யூமர், ஒரு
ளாமர் (உடையாள் அதாவது
மனைவி)!

● ஆர். அஜிதா, கம்பம்
இளமை போவது எப்போது...
முதுமை வருவது எப்போது?

நம்மிடம் இருப்பதையெல்லாம் சுரண்
டிக்கொண்டு, சொல்லிக் கொள்ளாமல்
போகும் திருடன் இளமை. திருடனை
விட்டுவிட்டுப் பறிகொடுத்த நம்மைப்
பிடிக்க வாரண்ட்டுடன் வரும் போலீஸ்
முதுமை... வாழ்க்கை ஒரு thief and po-
ce விளையாட்டு. இந்த விளையாட்
டில் சேராமல் வேடிக்கை பார்க்கும் பக்
குவம் இருந்தால், திருடன் மஃப்டியில்
வந்த போலீஸ் என்பதும், போலீஸ் யூனி
ஃபார்மில் வந்த திருடன் என்பதும் தெளி
வாகும்.

● என்.கோமதி, நெல்லை
விக்கிரமாதித்தன் தோளில் சுமந்த
வேதாளத்தின் பெயர் என்ன?

ம.ர.முருங்கேசன்!

● ஜி.ரெஜினா பானு, பழனி
மழையைப் பற்றி ஒரு கவிதை
சொல்லுங்களேன்?

'படி தாண்டிப் புகுந்த
பேய் மழை பாதிப்பால்
பட்டினி கிடந்தாள்
பெய் எனச் சொன்ன
பத்தினி.



● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

? தமக்கு நெருங்கிய நண்பர்கள் யாரும் இல்லை என இளையராஜா கூறியுள்ளாரே?

! Our sweetest songs are those that tell of the saddest thought என்ற கீட்ஸின் கவிதை வரிதான் ஞாபகம் வருகிறது.

● **க.குழந்தைவேல், மேட்டுத்திருக்காம்புலியூர்**

? புதிய கட்டடத்தில் பணியாற்றச் செல்லும் சட்டசபை உறுப்பினர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

! புதிய கட்டடத்திலாவது பழைமையான சட்டமன்ற ஜனநாயக மரபுகளைப் போற்றி மதித்து நடந்து கொள்ளுங்கள். ஏராளமான மரங்களை வெட்டிச் சாய்த்துவிட்டு உருவாக்கப்பட்ட புது கட்டடத்தில் நுழையும் உறுப்பினர் ஒவ்வொருவரும் தமது தொகுதியில் அதற்கு ஈடான மரங்களை நட்டு, பாதுகாத்து வளர்க்கட்டும். புதிய கட்டடத்தை உருவாக்கிய தொழிலாளர் பெரும்பாலோர் வடக்கே இருந்து வந்தவர்கள். புதிய கட்டடம் தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்கட்டும்.

● **ஜி.மகாலிங்கம், காவல்காரபாளையம்**

? சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியும் சொத்து விவரங்களை வெளியிட வேண்டும் (தகவல் அறியும் உரிமைச் சட்டம்) என்கிறார்களே அதை வைத்துக்கொண்டு மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்? 'எத்தனை வழக்குகள் விசாரிக்கப்பட்டன? நிலுவையில் உள்ளவை எத்தனை? தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இருப்பவை எவ்வளவு, எத்தனை தினங்களுக்குப் பிறகு அவற்றுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டன; போன்ற பொதுநலத் தகவல்களை அறிய இச்சட்டத்தைப் பயன்படுத்தலாமே?

! உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி உள்பட அனைவரும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வருவதாக டெல்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே சொத்துக்கணக்கு மட்டுமல்ல, செயல்பாடு குறித்தும் மக்கள் தட்டிக் கேட்க வாய்ப்புண்டு.



● கேளிக்கை ராஜா!

நீங்கள் கேட்டவை -தராசு

மு.மதிவாணன், ஆரூர்

''நான் நடிகன் இல்லை; Entertainer'' என்கிறாரே விஜய்?

அவரைப் போன்றவர்கள் தொடர்ந்து களிக்கைப் படங்களையே தருகிறபோது, நடிப்பு, நல்ல படம் போன்றவை என்ன என்பதே ரசிகர்களுக்குத் தெரியாமல் போய் விடுகிறது. குணச்சித்திரப் பாத்திரத்தில் நடிக்கவும் ஆசை இருப்பதாக அதே பேட்டியில் விஜய் கூறியிருப்பது சற்றே ஆறுதல்.

ச.விடுதலைமலர், வெளிப்பட்டிணம்

வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை, தமிழக அரசு இலவசத் திட்டங்களுக்குப் பயன்படுத்தியதாக மாநில தலைமை கணக்குத் தணிக்கையாளர் புகார் தெரிவித்துள்ளாரே?

முதல்வர்தான், ''அவ்வாறு பயன்படுத்துவது குற்றமில்லை; முன்பு பலமுறை நடந்திருக்கிறது'' என்று விளக்கம் அளித்துவிட்டாரே. போதாதா...? 2011ல் தேர்தல் வேற வருது. கணக்குத் தணிக்கை அதிகாரிகளின் அறிக்கைகள் குப்பைக் கூடைக்குப் போக வேண்டியது தானே!

* நியாய குற்றச்சாட்டு!



● ஆர்.ரங்கநாதன், சென்னை-17

? பொங்கல் பண்டிகை அன்று தமிழகத்தில் டாஸ்மாக் கலெக்ஷன் 80 கோடியாமே?

! அரசு அறிவிப்புப்படி தமிழ்ப் புத்தாண்டு தினமில்லையா? அதனால் பாலோடு மதுவும் பொங்கி ஓடியிருக்கிறது! வாழ்க கலைஞர் போற்றும் வள்ளுவம்!

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? லட்சக்கணக்கானவர்களை பலி கொண்ட ஹைட்டி பூகம்பம் பற்றி...?

! சிறிய தேசத்துக்கு விழுந்த பெரிய அடி; பிற நாடுகளின் உதவியோடு இத்தேசம் மீண்டெழப் பிரார்த்திப்போம்.

● சி.விஜயாம்பாள், கட்டிகானப்பள்ளி ★

? மனிதர்களின் உயிரோடு விளையாடும் ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுகள் தேவைதானா?


! சர்வ நிச்சயமாகத் தேவையில்லை அவை மனிதர்களுக்கு ஆபத்து என்பதோடு விலங்குக்கு இழைக்கப்படும் கொடிய அநீதி என்பதாலும்கூட. ஆனால், நமது

"நான் நடிகன் இல்லை" என்கிறாரே விஜய்?

அரசியல் தலைவர்களோ, ஜல்லிக்கட்டுக்கு வக்காலத்து வாங்குகிறார்கள்! கொடி அசைத்துத் தொடங்கியும் வைக்கிறார்களே... அதுதான் இரட்டிப்புக் கொடுமை!!

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? இந்தியாவின் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பணிபுரியும் விஞ்ஞானிகளுக்குப் பயங்கரவாதிகள் குறி வைத்துள்ளதாகச் செய்தி வருகிறதே?



✱ சோக கீதம்

! முன்பொருமுறை பெங்களூரு இந்திய விஞ்ஞானக் கழகத்தில் நடந்ததுபோன்ற கொடூரம் மறுபடி நிகழ இந்தியா வாய்ப்பளித்துவிடக் கூடாது.

● கவின்டோனி மார்ஷ், மதுரை - 10

? நம் நாட்டில் ஹெல்மெட் அணிதல், புகைப் பிடிக்கத் தடை போன்ற மக்கள் நலச் சட்டங்கள் வெற்றி காண முடிவதில்லையே?



✱ களங்க மசோதா!

! இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று - சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அரசு ஊழியர்களின் அலட்சியம். மற்றது, சட்டம் இன்னதென்று அறிந்தவர்கள், சட்டத்தை மதிக்காதவர்களைத் திருத்தாமல், 'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்கிப் போவது.


● வாசுதேவன், நவி மும்பை

? சங்கமம் கலைவிழா..?

! ருசிகரமான பல நிகழ்வுக்களுக்கிடையே ஒரு க்யூட் சம்பவம்: பூங்காவில் பாடிக் கொண்டிருந்த அருணா சாய்ராமிடம் ஒரு குழந்தை போய் 'மாடு மேய்க்கும் கண்ணா' பாடச் சொல்லிக் கேட்க, அவர் கடைசியில் பாடுவதாகக் கூறியிருக்கிறார். அப்பாட்லைப் பாடப் போவதாக அறிவித்து, பூங்காவில் இருந்த அனைத்துக் குழந்தைகளையும் மேடைக்கு வரவழைத்துப் பங்கேற்கச் செய்து பாடியிருக்கிறார்!

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்

? நீதித் துறையில் உயர் பதவி வகிப்போர் கறை படிந்தவர்களாக இல்லாமல் இருப்பது உறுதி செய்யப்படும். இதற்கு மசோதா இயற்றப்படும் என மத்திய அமைச்சர் (சட்டம்) மொய்லி கூறியிருப்பது பற்றி..!



✱ குழந்தைகளின் சங்கம

! இப்படி அமைச்சர் கூற நேர்ந்திருப்பதே ஒரு களங்கம்தான். நியமன கட்டத்திலேயே பொறுப்புணர்வுடன் இயங்கினால், கறை படிந்தவர்கள் எப்படி பதவிக்கு வர முடியும்?

● ஆர்.நாகராஜன், சென்னை - 117

? வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களின் எண்ணிக்கை,

❐ ரூ.150/- பரிசு பெறுபவர்:
ஜி.மகாலிங்கம், காவல்காரபாளையம்

...திய பொருளாதாரக் கொள்கையால் குறைந்து வருவதாக பிரதமர் கூறுகிறாரே?

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களின் எண்ணிக்கை முப்பது கோடி என்கிறது ஒரு புள்ளி விவரம். 'முப்பது கோடி மக்களின் சங்கம் முழுமைக்கும்' அரசு என்ன மேம்பாட்டுத் திட்டம் வைத்திருக்கிறது என்பதல்லவா பெரிய கேள்வி! மழுப்பலான சதவிகிதக் கணக்குகளால் நாம் திருப்தி அடைய முடியாது.

● **ஜெ.செல்வராணி, மதுரை**

? **''இளங்கோவன் போன்ற காங்கிரஸ்காரர்கள் பயன் முடிந்துபோன பேட்டரி; அதை ரீசார்ஜ் செய்யவே முடியாது'' என்கிறாரே விடுதலைச் சிறுத்தைகள் வன்னியரசு?**



கண்ணாடி மாளிகை!

! பயன்படுத்தப்படாமலே வீணாகிப்போன பேட்டரிகளுக்கு இது எவ்வளவோ மேல் அல்லவா?

● **எஸ். பக்கிரிசாமி, திருவாரூர்**

? **கலாசாரத்தைச் சீரழிக்கும் ஆபாச இணையதளங்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று இயக்குநர் ரவிக்குமார் கோரியுள்ளது குறித்து...?**

! முழுமையாக வரவேற்கப்பட வேண்டிய கருத்து! அப்படியே இந்த விஷயத்தை சினிமாவிலும் பின்பற்றும்படி அவர் வலியுறுத்தினால் இன்னமும் சந்தோஷப்படலாம். கண்ணாடி மாளிகைக்குள்ளிருந்து கொண்டு கல் எறியலாமா!



★ வலுவிழந்த விளாசல்!

● **ஜி.எஸ்.கார்த்திக், கோபி**

? **திட்டமும் குறிக்கோளும் இல்லாத தே.மு.தி.க.வை ஓர் அரசியல் கட்சியாகவே பா.ம.க பார்க்கவில்லை என ராமதாஸ் விளாசுகிறாரே?**

! ஒரே விளாசலில் மூன்று தவறுகளைச் செய்து சாதனை புரிந்திருக்கிறார்!

● **தாமஸ் மனோகரன், புதுச்சேரி**

? **''குற்றம் புரிந்தவர்கள் கருணாநிதி ஆட்சியில் நிம்மதியாக உலவுகிறார்கள்'' என்று விஜயகாந்த் கூறுவது நியாயம் தானே?**



★ சதவிகித சொதப்பல்!

! தினகரன் மதுரை அலுவலகத் தாக்குதல் வழக்கு, கு.ப.கிருஷ்ணன் கொலை வழக்கு ஆகியவற்றில் அரசு மேல் முறையீடு செய்யாதது, விஜயகாந்த்துடைய குற்றச்சாட்டுக்கு வலிமை சேர்க்கிறது. ○

★ ரூ.75/- பரிசு பெறுபவர்:
சி.விஜயாம்பாள், கட்டிகானப்பள்ளி

புதிரான ரோஸ் ஜுரம்!



நல்ல ஆரோக்கியமாக, ஆனந்தமாக தானுண்டு தன் வேலையுண்டு என சென்னையில் வேலை பார்த்து வந்த அண்ணாமலைக்கு, பொங்கல் விடுமுறைக்கென தன் ஊரான திண்டுக்கல் போய் விட்டு வந்ததிலிருந்து திடீரென உடம்பு வலி, கடும் ஜுரம் என வாரக்கணக்கில் வாட்டி எடுத்தது. இந்த அறிகுறிகள் எல்லாம் 'சிக்குன்குனியா'வின் அறிகுறிகள்தான் என அண்ணாமலை சென்று பார்த்த மருத்துவர்கள் எல்லாம் அறிவுறுத்தினர். ஏகப்பட்ட மருந்துகள் எழுதிக் கொடுத்தும் சீக்கிரத்தில் குணமாகவில்லை. மருத்துவர்களுக்குப் பிடிபடவில்லை. மர்மக் காய்ச்சலிலிருந்து விடுபட முடியாமல் தவித்தே போய் விட்டார் அண்ணாமலை.

அண்ணாமலைக்கு வந்தது போலவே தமிழகத்தின் தேனி, திருவள்ளூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கடலோர மாவட்டங்களில், 'ரோஸ் ரிவர்' என்ற புது வகையான, புதிரான ஜுரம் பரவியது. கடந்த ஒரு மாத காலமாக மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

''அது என்ன ரோஸ் ரிவர் ஜுரம்?'' என்று தமிழக அரசின் பொதுநல சுகாதாரத் துறையில் பணிபுரியும் டாக்டர் சரவண குமாரிடம் கேட்டோம். ''சமீப காலமாக தமிழகத்தின் பல பகுதிகளில் இந்த வகையான காய்ச்சல் பரவி வருகிறது. ஆஸ்திரேலியாவில் ரோஸ் ரிவர் (Ross river) என்ற ஒரு இடத்தில் இந்தத் தொற்று முதன்முதலாகத் தென்பட்டதை அடுத்து அதற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டிருக்கலாம்.

இது கொசுக்களால் மட்டுமே பரவக்கூடிய தொற்று ஜுரம். டெங்கு மற்றும் சிக்குன்குனியா ஜுரங்களில் இருக்கக்கூடிய அதே அறிகுறிகள் இந்த வகையான காய்ச்சலில் தென்பட்டதாலும், மற்றும் அதிக அளவு மக்கள் இந்த காய்ச்சலால் அவ்வளவாகப் பாதிக்கப்படாமலும் இருந்த ஒரு கால கட்டத்தில் இதை 'மர்மக் காய்ச்சல்', 'விஷக் காய்ச்சல்' என பொதுமக்கள் கூறி வந்தனர். சிக்குன்குனியாவும் இல்லாமல், டெங்குவாகவும் இல்லாமல் வேறு விதமான உடல் உபாதைகள் கொண்டு அதிக அளவு மக்களுக்கு வர ஆரம்பித்த பின்தான் இது ரோஸ் ரிவர் ஜுரம் என கண்டறியப்பட்டது.

இந்த வகையான ஜுரத்தில் டெங்கு தாக்கி வருவது போல ரத்தம் கசியாது.



டாக்டர் சரவணகுமார்

சிக்குன்குனியா தாக்குவதைப்போல நாள் பட்ட இடைவிடாத முட்டி வலி, வீக்கத்தை உண்டாக்காது. ஜுரம், உடம்பு வலி, முட்டு வலி (epidemic poly arthritis), சிவப்பு திட்டுக்கள், ஃப்ளூ காய்ச்சலுக்கான அறிகுறிகள் எல்லாம் இருந்தாலும் அவை எல்லாமே குறைந்தபட்சம் எட்டு நாட்களுக்குள் நிச்சயம் சரியாகி விடும். இரண்டு நாட்களுக்கு மேல் ஒருவருக்கு ஜுரம் அல்லது உடம்பு வலி அடித்தால், மருத்துவரிடம் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த வகையான ரோஸ் ரிவர் ஜுரத்துக்கென தனியான தடுப்பூசியோ அல்லது மருந்துகளோ இல்லை'' என்கிறார் டாக்டர் சரவணகுமார்.



ஆஸ்திரேலியாவில் ரோஸ் ரிவர் என்ற இடத்திலிருந்து இந்தக் காய்ச்சல் தோன்றியது

''இந்த வகையான காய்ச்சல் நம்மைத் தொற்றாமல் இருக்க என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்?'' எனக் கேட்டபோது, 'கொசுக்கள் உங்களைக் கடிக்காமல் பார்த்துக் கொண்டாலே போதும். வருமுன் காப்போம் எனச் சொல்வதைப் போல, கொசுக்கள் உங்களைக் கடிப்பதற்கு முன் கொசுக்கள் வளராமல் இருக்க நீங்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அத்தனையும் செய்ய வேண்டும். கொசுக்கள் அதிகம் இருக்கும் இடத்தில்தான் இந்த நோய்த் தொற்று அதிகம் இருக்கும். வீட்டைச் சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வது, பழைய டயர், வாளி போன்றவற்றில் தண்ணீர் தேங்கி அதில் மாதக் கணக்காகக் கொசுக்களை வளர விடாமல் இருப்பது, குழந்தைகளுக்கு முழுக்கை ஆடையை இரவு நேரங்களில் அணிவிப்பது என கொசுக்களிலிருந்து தப்பித்துக் கொண்டாலே போதும் இந்தக் காய்ச்சல் வராமல் தப்பித்துக் கொள்ளலாம். இந்த ஜுரத்தைக் கண்டு தேவையற்ற பீதி அடைய வேண்டியதில்லை. இது முற்றிலும் குணமாக்க முடிந்த ஒரு ஜுரம்தான்!' என்கிறார்.

- நளினி சம்பத்குமார்

சிரிப்பாலஜி

''பூனை குறுக்கே போயிடுத்து. போன காரியம் முடிஞ்சா மாதிரிதான் சனியனே...'' என பூனையைப் பார்த்து எல்லா வசைகளையும் பாடி விட்டுத்தான் தியாகு மாமா வெளியே ஜாக்கிரதையாகக் கிளம்பு வார். 'பூனைக்கும் மனிதர்களைப் பார்த்து இதே ஃபீலிங்ஸ்தான்' என மறைந்த யாகவா முனிவர் துண்டை அடித்துச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார். கேட்கிறதா மனித ஜென்மம்?

ஆண் - பெண், ஏழை - பணக்காரன், நடிக - நடிகைகள், அரசியல்வாதிகள், பிஸினஸ்மேன், டாக்டர், வக்கீல், போலீஸ்... என பிரபஞ்சத்தி லிருக்கும் அத்தனை பேருக்கும் ஏதோ ஒரு விஷயத் தில் நம்பிக்கை. அதுவே மகா நம்பிக்கையாகும்போது அதன் பெயர் மூடநம்பிக்கை!

''கௌம்பறச்சே லொட்டுன்னு 'எங்கே போறே?'ன்னு கேக்கக் கூடாது. தும்மித் தொலைக் காதே. வாறுகல், செருப்புன்னு குப்பை ஐட்டத்தை யெல்லாம் கண்ணுல படாம ஒதுக்கி வை. பின்னா லிருந்து குரல் கொடுத்துக் கூப்பிடக் கூடாது...''ன்னு ஏக கறார். 'முக்கியமான வேலை, அதான் கவலையில் இப்படி பேசறாப்பல' என நினைத்தால், ''பேட்டு விளையாட எதிர் வீட்டுத் திண்ணையில உட்கார் வதற்கு என்ன கெத்து பாத்தியா?''... என சிவகாமு மாமி தோள்பட்டையில் மோவாக் கட்டையைத் தேய்க்காத நாட்களே இல்லை...

'நன்னா படிச்சா, வெளிநாட்டு டிகிரி வாங்கினா மூடநம்பிக்கை கிடையாது' என்ற ஒருசிலரின் நம்பிக்கை தவிடுபொடியாகிவிடும்; அனந்தகிருஷ்ணனைப் பார்த்தால்! பி.டெக்., எம்.எஸ்., பி.ஹெச்.டி. மற்றும் இன்னபிற படிப்புகளை கஜ கஜன்னு படிச்ச சாஃப்ட்வேர் என்ஜினியர் அனந்து, கம்ப்யூட்டர் முன் உட்காருவதற்கு முன் பக்திப் பழமாகத்தான் உட்காருவான். ''கம்ப்யூட்டரைச் சுற்றி சாமி ஸ்டிக்கர்கள். சந்தனம் குங்குமம் இடாமல் நோ ஸ்விட்ச் ஆன். கற்பூரத்தைக் காமிச்சு

கண்ல ஒத்திண்டு 'வ துண்டாய நம:'ன்னு நன் குட்டிண்டுதான் பில்கே ஸுக்கு ஈமெயில் அனுப்பறா ஃபன்னி காரெக்டர்யா. விட்டா கம்ப்யூட்டர் காவடி எடுத்துண்டு கலிஃபோர்னிய டெக்ஸாஸ் போவான்டா... என ஆபீஸில் நடக்கும் தினச காமெடி தர்பாரின் நிரந்த நாயகன் அனந்து!

ஃபேஷன் மங்கைகளுக் இருக்கும் நம்பிக்கைகளே தன குமாரிக்கு விசித்திர நம்பிக்கை இருமல், சளி, ஜலதோஷ என்றால் விக்ஸ், கஃப் ஸிரப் ஆன்ட்டிபயாடிக் அல்லது துள + இஞ்சி + தேன், அரத்தை அதிமதுரம்... இப்படியெல்லாம்



வைத்தியம் கிடையாது. ஓடிப் போய் ப்யூட்டி பார்லரில் தன் நீளக் கூந்தலை கட் பண்ணி விட்டுத்தான் மறு வேலை. சாதா குமாரி 'பாப்குமாரி'யா னாலே கரிசனமாக எல்லோரும் 'இப்ப இருமல் ஜலதோஷ மெல்லாம் எப்படிம்மா யிருக்கு'ன்னு குசலம் விசாரிப் பார்கள்.

கிரிக்கெட் என்று ஒரு விளையாட்டு என்பது போய் ஜுரம், மேனியா, பித்து, கௌர வம்... என்ற லெவலுக்குப் போய் பல வருடங்களாகின் றன. ''சேவாக் ரெட் கலர் கர்சீப் எப்பவும் இடது பாக்கெட் டில் வச்சுண்டு தான் விளை

லதா சேகர்


யாடவே போவான். அவன் போடற ஷர்ட்டுக்கு நம்பர் இருக்காது தெரியுமா... பின்றான்டா...'', ''ஹர்பஜன் ஃபீல்டுக்கு வந்தவுடனேயே முன்னால குனிஞ்சு ஒரு நமஸ்கார ஜெர்க் குடுக்கறான் பார்த்தியா... யமன்டா'', ''யுவராஜுக்கு லக்கி பன்டானா தலையில கட்டிக்கிட் டாத்தான் கிக்கே...'' என கிரிக்கெட் ப்ரியர்களுக்கு தங்கள் ஹீரோக்களின் விவரம் அத்துப்படி.

கிரிக்கெட் மாட்ச் நடக்கும்போது வீடுகளில் ஒரு தனி டென்ஷன் மாட்ச் நடக்கும். அதுவும் இந்தியா - பாகிஸ்தான் அணி என்றால் குருக்ஷேத்திரம்தான்! ''காமேஷ், நீ இன்னிக்கு ஃபோன் பண்ணவே பண் ணாதே. உங்கிட்டேர்ந்து ஃபோன் வந்தாலே டெண்டுல்கர் அவுட் ஆயிடறான்(!)'', ''போன ஜெயிச்ச மாட்ச்சன்னிக்கு என்ன ரசம் குழம்பு வச்சே... அதையே போடு, இன்னிக்கு மாட்ச் பாத்துண்டு ஐயா அதைச் சாப்பிடப் போறார், கப்பை ஜெயிக்கறோம்.''

''நீங்க வெளியிலயே நில்லுங்கோ. அங்கேயே காப்பி கொண்டு வரேன். நீங்க உள்ளே வந்தா கம்பீர் அவுட்டாயிடுவான்....'' என்ற ரீதியில் நம்பிக்கைகள்.

வங்காளிகளுக்கு ஒரு விநோத நம்பிக்கை. 'பட்டர்ஃப்ளை மேலே வந்து உட்கார்ந்தா கல்யாணம்

கம்ப்யூட்டர் காவடி!



ஆகும் அல்லது காதல் மலரும்...' என்று ஒரு கிறு கிறுப்பு. ''என் பொண்டாட்டி தினமுமே என் மேலே பட்டர்ஃப்ளையை எறி யறா(குக்கர்)! ஒரு தினுசா தப்பிச் சுக்கறேன். பட்டர்ஃப்ளை, அடி யேன் இரண்டுமே ரிப்பே ராகல்லை...'' என்கிறார் ஒரு எக்ஸ் பீரியன்ஸ்ட் கணவர். வாழ்க்கையில் நம்பிக்கை மிக அவசியம். மூட நம்பிக்கை வேண்டுமா? ●

ஜெயா டீ.வி.யில் மீண்டும் சோவின் 'எங்கே பிராமணன்?' சீரியல் ஆரம்பித்திருக்கிறது. "இதை இரண்டாம் பாகம் என்று சொல்வது தவறு. முன்பு ஒளிபரப்பான போது எந்த இடத்தில் முடிந்ததோ, நான்கு மாத இடைவெளிக்குப் பிறகு அதே இடத்திலிருந்து மீண்டும் ஆரம்பித்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்" என்கிறார் சீரியலின் இயக்குனரான வெங்கட்.. அவர் பேசுகிறார்:

"ஏற்கெனவே நான் பல டீ.வி. தொடர்களை இயக்கி இருக்கிறேன் என்றாலும், 'எங்கே பிராமணன்?' தொடரை இயக்குவது எனக்கு ஒரு வித்தியாசமான அனுபவம்தான். சோ சார் இதை 25 வருடங்களுக்கு முன்னால் எழுதினார் என்றாலும் கூட, அவர் டீல் பண்ணின சப்ஜெக்ட், பல ஆயிரம் வருடம் பழைமையானது; ஆனால் இன்றைக்கும் மிகப் பொருத்தமானது. எழுத்தாளர் சுஜாதா, 'கதையில், ஒரு சம்பவம், அடுத்த சம்பவத்தைத் துரத்த வேண்டும்' என்று விறுவிறுப்புக்கு ஒரு ஃபார்முலா சொல்லுவார். தவிர, சோ சார் 'அனாவசியமாக சீரியலை வளர்த்திக்கொண்டே போகக் கூடாது' என்பதில் கண்டிப்பாக இருந்தார். இதை எல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு எழுதினேன், சரியான தருணத்தில் முடித்துவிட்டோம்.

கதையின் நாயகன் அஷோக், உண்மையான பிராமணனைத் தேடிக்கொண்டு போகிறபோது, ஜாதி ரீதியான பிராமணர்களைச் சந்தித்தாலும், உண்மையான பிராமணனைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று முடித்திருந்தோம். அந்த முடிவுதான் மறுபடியும் கதையைத் தொடர்வதற்கு சிறந்த தொடக்கமாக அமைந்தது. 'உண்மையான பிராமணனை ஏன் தேடிக் கொண்டு போகிறாய்? நீயே அப்படி ஒருவனாக ஏன் வாழக்கூடாது?' என்ற கேள்வி அஷோக்கிடம் எழுகிறது. அவன் அதை ஏற்றுக்கொண்டு அப்படி வாழ முயற்சி மேற்கொள்கிறான் என்று கதை நகர்கிறது."



* தொடரில் ஒரு காட்சி...

நீயும்

தொடரில் சோவுக்கும் ஒரு ரோல் கொடுத்திருக்கலாமே?

"சோ சார் ஏதாவது ஒரு பாத்திரத்தில் நடித்தால் நன்றாக இருக்கும் என நாங்கள் விரும்பினாலும், அவர் அதற்குத் தயாராக இல்லை. ஆனால், அவர் காட்சிகளுக்கு இடையில் தோன்றி விளக்கங்கள் அளிப்

பது என்பது அவரே சொன்ன ஐடியாதான். தொடருக்குப் பெரிய மரியாதையையும், கௌரவத்தையும் அது ஏற்படுத்தியிருப் பதை மறுக்க முடியாது.''

கதையில் பொதுவான இந்து மதம் குறித்த ஆழமான விஷயங்கள்தான் அதிக மாக அலசப்படுகின்றன. அப்படி இருக் கும்போது 'பிராமணன்' என்ற குறியீடு எதற்காக?

'நீங்கள் சொல்வது சரிதான். வர்ணாசிரம தர்மத்தைப் பற்றி மட்டுமே பேசாமல் பல்வேறு ஜாதிகளையும் சேர்ந்த ஆழ்வார், நாயன்மார் உட்பட பொதுவான சனாதன தர்மம் பற்றித்தான் சீரியலும் சரி, சோ சாரும் சரி பேசுகிறார்கள். ஆனாலும் கதைக் கான மூல நூலின் தலைப்பை சீரியலுக்காக மாற்ற வேண்டாம் என்பது அனைவரு டைய கருத்துமாகும். இந்தத் தொடரை பிராமண சமூகத்தினர் மட்டுமில்லாமல் அனைத்து சமூகத்தினரும் ஆர்வமாகப் பார்க்கிறார்கள்.''

தஞ்சாவூரைச் சேர்ந்த பல் டாக்டர் ராஜாராம். எங்கே பிராமணன் தொடர் ஒளிபரப்பாகும் நேரத்தில் இவர் நோயாளி களைப் பார்ப்பதில்லையாம். ''நடிப்பை

பிராமணனாகலாம்!

எடுத்துக் கொண்டாலும் கூட, மற்ற டீ.வி. சீரியல்கள் மாதிரி யதார்த்தம் கிலோ எத்தனை ரூபாய் என்று கேட்கும்படி இல்லாமல், ரொம்பவும் கேஷுவலாக இருக்கிறது. பொதுவாக எல்லா சேனல் களிலும், 'ஜனங்கள் எல்லோரும், வேறு வேலை இல்லாத வெட்டியானவர்கள்; இவர்களுக்கு இதுவே போதும்' என்ற நினைப்பில் சீரி யல்கள் எடுப்பவர்களுக்கு மத்தியில், வெங்கட்டின் சீரியல் ஆடியன்ஸை மதித்து எடுக்கப்படுவது போல உணர்கிறோம்'' என்று அழுத்தமாகச் சொல்கிறார் இந்த தஞ்சாவூர் டாக்டர்.



✱ வெங்கட்



✱ ராஜாராம்

'**தி**னமும் பூஜை பண்ணுகிறோம்; ஸ்லோகங்கள் சொல் கிறோம்; கோயிலுக்குப் போகிறோம்; புராண இதிகாசங்களில் பல விஷயங்கள் நமக்குத் தெரியும் என நினைத்துக் கொண்டிருக்கிறோம்; ஆனால் எங்கே பிராம ணன் சீரியலில் சொல் லப்படும் விஷயங்கள், இந்து மதத்தைப் பற்றி எவ்வளவு விஷயங்கள் நமக்குத் தெரியாமல் இருக்கின்றன? என்று நமக்குள்ளே கேள்விகளை எழுப்பு கின்றன. பல விஷயங்களை வெறுமனே கேள்வி-பதில் வடிவத்தில் கொடுத்திருந் தால்கூட இத்தனை சுவாரஸ்யமாக இருந் திருக்காது. கதையோடு சேர்த்து அவற்றைக் கொடுக்கிறபோது வெகு இயல்பாக இருக் கிறது'' என்கிறார் விழுப்புரத்தைச் சேர்ந்த பிரேமா.

- எஸ்.சந்திரமௌலி

ஒரு நாட்டுக்கு எதன்மூலம் வருமானம் கொழிக்கலாம்? நூறு சாய்ஸ் கொடுத்தால் கூட 'நாயுரு'வின் (Nauru) செல்வச் செழிப்புக்கான காரணத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டம்.

மேற்கு பசிபிக் கடலில் உள்ள தீவுநாடு. 21 சதுர கிலோமீட்டர் அளவில் 'பரந்து விரிந்த' நாடு. மிகவும் அருகில் உள்ள தீவே 300 கிலோமீட்டர் தொலைவில். இதுதான் நாயுரு. இது ஒரு குடியரசு என்பதைவிட விசேஷம் உலகில் தனக்கென்று ஒரு தலைநகர் இல்லாத குடியரசு இது மட்டுமே என்பதுதான்.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜெர்மனி நாயுருவைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானிய ராணுவம் இதை ஆக்ரமித்துக் கொண்டது. ஒரு வழியாக 1968ல் சுதந்திரம் கிடைத்தது.

வருமானக் கேள்விக்கு விடை எங்கே என்கிறீர்களா? பறவைகளின் எக்கச்சக்கமான எச்சங்கள்தான் நாயுருவின் முக்கிய செல்வம்! முகம் சுளிக்க வேண்டாம். பறவைகளின் எச்சங்கள் காலப் போக்கில் (சுமார் ஆயிரம் வருடங்களில்) படிவங்களாக மாறிவிட, அத்தனையும் பாஸ்ஃபேட். பாஸ்ஃபேட் மிகவும் மேல்மட்டத்திலேயே கிடைத்ததால் பெரிதாக சுரங்கம் என்றெல்லாம் தோண்டாமலேயே பாஸ்ஃபேட் வளம் தங்குதடையின்றிக் கிடைத்தது.

பாஸ்ஃபேட் ஏற்றுமதியில் கொள்ளை லாபம் கண்ட அரசு அதைக் கொண்டாடும் விதத்தில் தனது 95 சதவிகித குடிமக்களுக்கு அரசுப் பணியை அளித்து மகிழ்ந்தது. 'மருத்துவ வசதியா? இதோ இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். கல்வியா? காசே வேண்டாம்' என்றெல்லாம் வாரி வழங்கியது.

அரசுப் பணியில் சேர்ந்தவர்கள் தங்கள் இஷ்டத்துக்கு வந்தார்கள், போனார்கள். காரில் அடிக்கடி நாட்டைச் சுற்றிப்பார்த்தார்கள். (என்ன பெரிய நாடு? ஒருமுறை சுற்றிவர இருபது நிமிடமே அதிகம்).

'அரசு ஊழியர்கள் என்றால் நாட்டுக்கு நாடு வாசல்படிதானா?' என்பவர்கள் வேறொன்றையும் கவனிக்க வேண்டும். எல்லாவித இலவசங்களையும் பெற்று மகிழ்ந்த மக்கள் ஒன்றை மட்டும் ஏற்க மறுத்தார்கள். அது இலவசக் கல்வி!



1960களில் உலகிலேயே மிக அதிகமான தனிநபர் வருமானம் கொண்ட நாடுதான் தான் என்று பெருமிதப்பட்டது நாயுரு.

ஜி.எஸ்.எஸ்



எக்கச்சக்கமாக அளித்தது. 'வெளி நாட்டுவாசிகளே, பணம் கொடுத்து எங்கள் நாட்டு பாஸ்போர்ட்டைப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்றது. ரஷ்யாவைச் சேர்ந்த மாஃபியா குழு மட்டுமே பல லட்சம் டாலர்களைச் செலவழித்து நாயுருவின் பாஸ்போர்ட்களை அள்ளிக்கொண்டது. இதனால் நாயுருவுக்கு வேறொரு விதத்தில் பெரும் சங்கடம் உண்டானது. நாளடைவில் கௌரவமான வங்கிகள் நாயுரு தொடர்பான பரிவர்த்தனை எதுவும் தங்களுக்கு வேண்டாம் என்று கூறத் தொடங்கின.

பொருளாதாரம் காரணமாக நாயுருவின் ஒரே விமான சர்வீசான 'ஏர் நாயுரு' தன் இயக்கத்தை 2006ல் நிறுத்திக் கொள்ள, உண்மையாகவே தனித் தீவு ஆனது நாயுரு.

தலைநகர் இல்லாத நாடு

இலவசத்தில் திளைக்கும் எந்தச் சமுதாயமாவது தொலை நோக்கில் உருப்பட்டதாகச் சரித்திரம் உண்டா? நாயுருவின் பாஸ்ஃபேட் வளம் காலப்போக்கில் - 1980களில் - மிகவும் குறைந்துவிட்டது. சுரங்கம் வெட்டினாலும் பலன் கிடைக்கவில்லை. போதாக் குறைக்கு அரசின் தாராளமான தண்டச் செலவுகள் வேறு. நாயுருவின் பொருளாதாரம் தள்ளாடிக் கொண்டிருக்கிறது.

வருமானத்துக்காக ஒரு குறுக்கு வழியைத் தேடியது அரசு. வரிச் சலுகையை

கப்பல்கள் மட்டுமே ஓரளவு தொடர்புக்கு உதவின.

பிற நாடுகளை மிகவும் அண்டியிருக்க வேண்டிய சூழலில் நாயுரு பல சமரசங்களுக்கு உடன்பட்டது.

ஜார்ஜியாவிலிருந்து பிரிந்த அப்கஜியா, தெற்கு ஒஸ்ஸெடியா போன்ற பகுதிகளை நாயுரு தனிக் குடியரசுகளாக உடனடியாக அங்கீகரித்தது. இதற்காக ரஷ்யா நாயுருவுக்குப் பெருமளவில் நிதியுதவி செய்தது. (அப்போது ரஷ்யாவும் ஜார்ஜியாவும்

பகைவர்கள்).

கடந்த பத்து வருடங்களாக ஆஸ்தி ரேலிய அரசு நாயுருவுக்கு நிறைய பொருள் உதவி செய்கிறது. ஆஸ்திரேலியக் குடுமி சும்மா ஆடவில்லை. ஆஸ்திரேலியாவில் நுழையும் அகதிகளைத் தங்க வைக்கும் மையமாக நாயுரு பயன்படுகிறது.

★ மிகச் சிறிய நாடுகள் பட்டியலில் இடம் - 8. மிகக் குறைவான மக்கள்தொகை கொண்ட நாடுகளில் இடம் - 17

★ பாராளுமன்றம் கொண்ட

★ நாயுருவில் எந்த நாளிதழும் கிடை யாது. மாதமிரு இதழ்கள் அதிக அளவில் அச்சிடப்படுகின்றன. தொலைக்காட்சி உண்டு என்றாலும் நிகழ்ச்சிகள் நியூசிலாந் திலிருந்துதான் ஒளிபரப்பப்படுகின்றன.

★ ஒலிம்பிக்ஸில் பங்கு கொள்கிறது. என்றாலும் எடை தூக்கும் பிரிவில்தான் ஓரளவு வெற்றி கிடைத்துள்ளது. ஒலிம்பிக் பதக்கம் வாங்கிய மார்கஸ் ஸ்டீஃபன் 2003 தேர்தலில் வெற்றி பெற்று நாயுருவின் பிரத மரானார்.

★ தொடர்ந்து குடி, கொழுப்பு



இந்த நாட்டை ஒருமுறை சுற்றி வர இருபது நிமிடமே அதிகம்

குடியரசு. ஜனாதிபதிதான் நாட்டுக் கும் அரசுக்கும் தலைவர். அரசியல் கட் சிகள் என்று இல்லை. சுயேட்சையாகத் தான் போட்டியிடுகிறார்கள். குடிமக்கள் மட்டும்தான் சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ள முடியும். நாயுருவுக்கென்று ராணு வம் கிடையாது. அந்தப் பொறுப்பு ஆஸ்திரேலியாவுக்கு.

★ மைக்ரோனேஷியா என்ற பகு தியில் அமைந்திருக்கிறது நாயுரு. இந்தப் பகுதிக்குத் தெற்கில் உள்ளவை பிலிப் பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியா ஆகி யவை.

சேர்ந்த உணவுகள் இவற்றின் காரணமாக நாயுருவில் உடல் பருத்தவர்களின் எண்ணிக்கை வெகுவேகமாக உயர்ந்து வரு கிறது. உயரத்துக்குத் தக்க எடையைவிட அதிக எடையைக் கொண்டவர்கள் 90 சத விகிதம் பேர். இதயநோய், சிறுநீரகச் செயலிழப்பு ஆகியவை இல்லாத குடும் பங்களே இல்லை. எண்ணிக்கையில் வேண்டுமானால் இந்தியா சீக்கிரமாகவே 'சர்க்கரை நோயின் தலைநகரம்' ஆகிவிட லாம். ஆனால் சதவிகிதப்படி சர்க்கரை நோயில் உலகலவில் டாப்பில் இருப்பது நாயுருதான். மக்கள் தொகையில் 40 சத விகிதம் பேர் சர்க்கரை நோயால் பாதிக் கப்பட்டிருக்கிறார்கள்.

(அடுத்த ஒரு வாமன தேசம்...)






நெட் ஹிட்!




'இரும்புக்கோட்டை முரட்டுச்சிங்கம்' படத்தின் ஷூட்டிங்கின் இடை யில் நேரம் கிடைக்கும்போதெல்லாம் அம்பத்தூரில் தான் கட்டிய ராகவேந்திரா கோயிலுக்கு விசிட் செய்து, அங்கு வரும் பக்தர்களுக்கு பிரசாதம் கொடுத்துக் கொண்டிருக்கிறார் லாரன்ஸ். ''கொஞ்ச நாளா ஆன்மிகம் பக்கம் திரும்பிட்டீங்க போல?'' என்றோம்.

''கொஞ்ச நாளா இல்ல சார். எட்டு வயசுல இருந்து ஸ்ரீ ராகவேந்திரரோட பக்தன் நான். எனக்குச் சின்ன வயசா இருக்கும்போது, பிரைன் ட்யூமர் வந்தது. மந்திராலய மகானிடம் வேண்டிக்கிட்ட பிறகுதான் குணமானது. அதிலேயிருந்து ராகவேந்திரரின் தீவிர பக்தனாயிட்டேன்.

அம்பத்தூரில் அரை கிரவுண்டில் கோயில் கட்ட ஆரம்பிச்சேன். அரை கிரவுண்டில் ஆரம்பிச்சது இன்னைக்கு ஏழு கிரவுண்டில் பெரிய கோயிலா உருவாகியிருக்கிறது. மத்த கோயில்களில் இல்லாத சிறப்பம்சம், இந்தக் கோயிலில் இருக்கு. பக்தர்கள் ராகவேந்திரரைத் தொட்டு வணங்கலாம். பூஜையும் செய்யலாம்.''



பக்தர்கள் ராகவேந்திரரைத் தொட்டு வணங்கலாம். பூஜையும் செய்யலாம்

'இரும்புக்கோட்டை முரட்டுச் சிங்கம்' பற்றிச் சொல்லுங்களேன்..?

''தமிழில் கிட்டத்தட்ட நாற்பது வருஷத்துக்கப்புறம் 'கௌபாய்' படம் வருது. இந்தக் கதைகள் பிரேசில், தாய்லாந்து போன்ற நாடுகளுக்குச் சொந்தமானவை.

நம்ம தமிழ்ச் சூழலுக்கு ஏத்த மாதிரி பிரமாதமா பண்ணியிருக்காரு சிம்புதேவன். அடிப்படையில் அவர் கார்ட்டூனிஸ்ட்டா இருக்கிறதால சென்ஸ் ஆஃப் ஹ்யூமர் அதிகம். ஸ்டோரி போர்டுன்னு சொல்ற படத்துக்கு முன்னாடி பண்ற ப்ரீ ப்ரொடக்ஷன் வொர்க்கை சிறப்பா செய்யறதால, ஆர்ட்டிஸ்டுகளுக்கு ரொம்ப ஈஸியா இருக்கு.

டான்ஸ் மாஸ்டர், டைரக்டர், ஹீரோன்னு இருந்த எனக்கு கௌபாய் கேரக்டர் இன்னொரு பரிமாணம். இம்சை



அரசனை விட இன்னும் பல மடங்கு சிம்புதேவனுக்குப் பெயர் வாங்கித் தரப் போறான் முரட்டுச் சிங்கம்.''

உங்களால் உடல் ஊனமுற்றவர்களுக்கு நடத்தப்படும் தொண்டு நிறுவனம் எப்படி போய்க் கொண்டிருக்கிறது?

''பெரியவங்களோட ஆசீர்வாதத்தால நல்லா போய்க்கிட்டிருக்கு. எதிர்காலத்தில் முதியோர்களுக்குன்னு தனியாக டிரஸ்ட் ஒண்ணை ஆரம்பிக்கணும்னு இருக்கேன். அதற்குப் பெரிய அளவில் இடமும், பண வசதியும் தேவை. மந்திராலய மகானின் அருளும், நல்ல உள்ளம் படைத்தவர்களின் உதவியும் வேணும்.''

- ராகவ்குமார்

க்ளாமரஸ்


கௌபாய் !

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed
post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka

